விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 01 புதன்கிழமை (17.10.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 303

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# தெரிவுக்குழுவுக்கு வராவிட்டால் தீர்வு ஒருபோதும் சாத்தியமில்லை!

## அரசாங்கம் மீண்டும் திட்டவட்டம்

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு இந்தியாவிடம் தீர்வு கிடையாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியா உட்பட வெளிநாடுகளிடம் தீர்வுக்காக செல்வதை விடுத்து எம்முடன் தெரிவுக்குழுவில் இணக்கப் பாட்டுக்கு வரவேண்டும். அவ்வாறு இல்லையென்றால் அரசியல் தீர்வு எக்காலத்திலும் சாத்தியமற்றதாகிவிடும் என்று அரசாங்கம் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த (சா/த) பரீட்சை டிசம்பர் 11இல்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் 11ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இதற்கான ஏற்பாடுகளை பரீட்சைகள் திணைக்களம் மேற்கொண்டுள்ளதோடு தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடைபெறவுள்ள இந்தப் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் இறுதியில் நிறைவு பெறவுள்ளதாகவும் தெரிவித்தார். (ந-11)

## இலங்கைத் தமிழர் விடுவிக்கப்படுவர்!

அவுஸ்திரேலியாவின் புலனாய்வுத் தரப்பினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 50க்கும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் எதிர்வரும் காலத்தில் விடுவிக்கப்படவுள்ளதாக அவுஸ்திரேலியாவின் த கார்டியன் சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசியோ எனப்படும் அவுஸ்திரேலிய பாதுகாப்பு புலனாய்வுத் தரப்பினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவர் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் விடுவிக்கப்பட்டிருந் தார்.

பாதுகாப்பு விசா வழங்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை சட்டத்துக்கு முரணானது என்று அவுஸ்தி (20ஆம் பக்கம் பார்க்க)

## 'ஆசியா' ஏனைய நாடுகளின் விளையாட்டு மைதானம் அல்ல!

### ஜனாதிபதி மகிந்த உரை

சவால்களை எதிர்கொண்டு ஆசியாவின் சுயாதீனத்தன்மையை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று ஆசிய,ஒத்துழைப்பு அமைப்பின் முதலாவது அரச தலைவர்கள் மாநாட்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டு உரையாற்றியபோதே இவ்வாறு (20ஆம் பக்கம் பார்க்க)



## ஆஸி பிரதிநிதிகள் இலங்கை விஜயம்

அவுஸ்திரேலிய எதிர்க் கட்சியின் இரண்டு விசேட பிரதிநிதிகள் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

இலங்கையில் இருந்து அகதிகள் அவுஸ்திரேலியாவுக்கு பயணிப்பதை தடுப்பது தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்தும் பொருட்டு அவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்வதாக தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவின் எதிர்க் கட்சிகளின் குடிவரவுத்துறை பேச்சாளர் ஸ்கொட் மொரிசன் மற்றும் வெளியுறவு பேச்சாளர் ஜூலி பிஸப் ஆகியோர் நேற்றுமுன்தினம் இந்தோனேசிய ஜனாதிபதி சுசிலோ பம்பாங் யுதாயானோவை சந்தித்துள்ளனர்.

இதன்போது (20ஆம் பக்கம் பார்க்க)

## மைதிரிபாலவின் சகோதரர் கைது

சுகாதார அமைச்சர் மைதிரிபால சிறிசேனவின் சகோதரர் பிரிந்த சிறிசேன கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மீது மானம்பிட்டி வனவிலங்கு காரியாலயத்தின் மீது தாக்குதல் நடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த இவர், பின்னர் நீதிமன்றில் ஆஜர்செய்யப் பட்டார்.

வனவிலங்கு காரியாலயத்தின் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக பிரியந்த சிறிசேனவை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ந-11)

## தமிழருக்கான ஜனநாயகம் கற்களும், கழிவு எண்ணெயுமே!

### தாக்குதல்களைப் பட்டியலிடும் சுரேஷ் எம்.பி

நல்லூர் பிரதேச சபை தவிசாளர் பரமலிங்கம் வசந்தகுமார் மீது நடத்தப்பட்டுள்ள தாக்குதல் சம்பவத்திற்கு கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ பேச்சாளரும் யாழ்.பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துமாறு ஜனாதிபதிக்கு அவர் பகிரங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பிலான அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வட மாகாண உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்கு முன்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் இராணுவத்தினர் பாராளுமன்ற உறுப்பினர்களை அச்சுறுத்தல்களுக்குள்ளாக்கி, கலந்து கொண்ட மக்களையும் அடித்து நொருக்கினர்.

இந்தச் சம்பவம் நடைபெறுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் (20ஆம் பக்கம் பார்க்க)

## மின்னல் தாக்கி கடற்படை வீரர் பலி

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்பில் கடமையில் இருந்தவேளை மின்னல் தாக்கியதில் கடற்படை வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அலுகேன வீதி, பாதுக்க பகுதியைச் சேர்ந்த எம்.ஏ.லஹிரு என்பவரே உயிரிழந்தவராவார்.

இறந்தவரின் சடலம் தற்போது யாழ். போதனா வைத்தியாலை பிரேத அறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ந-11)

## இனப் பிளவை ஏற்படுத்த சிலர் முயற்சிக்கின்றனர்!

### பசில் விசனம்

இந்த நாட்டில் வாழுகின்ற சகல இன மக்களையும் ஐக்கியப் படுத்தி ஒரு சுபீட்சமான எதிர்காலத்தை பெற்றுக் கொடுக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முற்படும் அதேவேளையில், இன்னுமொரு பகுதியினர் இந்த நாட்டில் பிளவுகளை உண்டாக்கி இனங்களுக்கிடையே முரண்பாடுகளை ஏற்படுத்துவதற்கு செயற்பட்டு வருவதாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மண்முனைத்துறைப் பாலத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

இந்த பாலம் உட்பட ஐந்து பாலங்களை கட்டியெழுப்புவதற்கு உதவி நல்கிய ஜப்பான் நாட்டு மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் தூதுவருக்கும் இங்குள்ள மக்கள் சார்பில் நன்றி தெரிவிக்கின்றோம்.

பல்வேறுபட்ட காரணங்களால் சூழ்நிலைகளால் பிரிந்து (20ஆம் பக்கம் பார்க்க)

## உட்கட்சி பூசலை தவிர்க்க கூட்டமைப்பைப் பதிவுசெய்க

### இரா. துரைரட்ணம் வேண்டுகோள்

தமிழ் மக்கள் அனைத்துக் கட்சிகளையும் நிராகரிக்க தயாராக இருக்கிறார்கள். இதில் எதுவித வேற்றுக் கருத்தும் இருக்க முடியாது. கட்சி அரசியல் செய்ய முயன்றால் மாற்றீடான கட்சி அரசியலுக்கு வரும்.

மேலும், எமக்குள் முரண்பாடுகள் எழுவதை தவிர்ப்பதற்கும் நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டும் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசின் கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராக சர்வதேசத்தின் குரலுக்காக நாங்கள் இணைந்து வென்றுள்ளோம். கூட்டு உழைப்பு மத்தியிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றியடைந்துள்ளது. இது ஒரு கூட்டு முயற்சி. யாருடைய தனிப்பட்ட முயற்சியுமல்ல.

யாரும் விலை (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# விலைகளை உயர்த்துவதில் அரசாங்கம் விடாப்பிடி

## வரப்போகிறது மேலும் சுமை - ஐ.தே.க

வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாகவே பொருட்கள் சேவைகளுக்கான விலையை உயர்த்துவதற்கு அரசாங்கம் முயற்சித்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

சீமெந்து, சிகரட், கோழி இறைச்சி, மதுபானம் உள்ளிட்ட பல பொருட்களின் விலை களை அரசாங்கம் ஏற்கெனவே உயர்த்தியுள்ளது.

எதிர்வரும் ஓரிரு நாட்களில் பெற்றோல் மற்றும் டீசலின் விலைகளும் உயர்த்தப் படும்.

மேலும் மேலும் மக்களை நெருக்கடிக்குள் ஆழ்த்தும்நோக்கில் அரசாங்கம் இவ்வாறு பொருட்கள் சேவைகளுக்கான விலையை உயர்த்தி வருகின்றது.

அரசாங்கம்65609 கோடி ரூபா கடன் பட்டுள்ளதாகவும் இதற்காக வருடாந்தம் 6500 கோடி ரூபா வட்டியாக அரசாங்கம் செலுத்தி வருவதாகவும் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தக் கடனைச் செலுத்துவதற்காக மக்கள் மீது மேலும் வரிச் சுமை திணிக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ந-11)

# சரத் பொன்சேகா நன்றி கெட்டவர்

## ஐ.தே.க விமர்சனம்

சரத் பொன்சேகா ஒரு நன்றி கெட்டவர் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றின் போது அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

நாளை கொழும்பில் நடைபெறவுள்ள ஜனநாயக தேசிய முன்னணியின் பேரணிக்கு, சரத் பொன்சேகா ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்கள் பலரை இணைத்துக் கொண்டுள்ளார்.

இந்த பேரணியில் ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் பங்கு கட்சியான ஜே.வி.பியோ, அல்லது ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் செயலாளர் விஜித்த ஹேரத்தோ கலந்து கொள்ளப் போவதில்லை என்று அறிவித்துள்ளது.

இந்த நிலையில், சரத் பொன்சேகா ஜே.வி.பியினரை அழைத்துக் கொள்ள முயற்சிக்காமல் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களை இலக்கு வைத்தே செயற்படுகிறார்.

இது கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது சரத் பொன்சேகாவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி வழங்கிய ஆதரவிற்கு அவர் காட்டும் நன்றி விசுவாசமா என்று திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார். (ந-11)


செல்லா சினிமா- யாழ்ப்பாணம்




10.30, 2.30, 6.30, 9.30

**காணி விற்பனைக்கு**

நீர்வேலி கிளாஸ் தொழிற்சாலைக்கு அருகில், பருத்தித்துறை வீதியில் குளத்திற்கு தென்புறமாக உள்ள 12 1/2 நிலப் பரப்பு வீட்டு நிலம் (வீடு உடைந்துவிட் டது) விற்பனைக்குண்டு. இதில் தென்னை மரங்களும் சமண்டலை மரங்களும் உண்டு. 23.10.2012 முன் தொடர்பு கொள்ளவும். (765)

TP: 0718475564, 0770242111

**தவறிவிட்டது** (சி-1327)

890413714 V இலக்க அடையாள அட்டை, லைசன்ஸ், ATM காட் உள்ளிட்டவற்றுடன் பேர்ஸ் ஒன்று ஆனைக்கோட்டைக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0776569819 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்.

**நல்லூர் உற்சவ கால அதிர்ஷ்ட லாப சீட்டிழுப்பு முடிவுகள்**

**அதிர்ஷ்ட இலக்க விபரம்**

யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தினால் உற்சவ காலங்களில் விற்பனை செய்யப்பட்ட ரிக்கெட்டுக்களின் அதிர்ஷ்ட இலக்கங்கள்.

| | |
|---|---|
| 1-ம் பரிசு | 33328 |
| 2-ம் பரிசு | 63634 |
| 3-ம் பரிசு | 44446 |
| 4-ம் பரிசு | 05500 |
| 5-ம் பரிசு | 27550 |

மேலும் ஆறுதல் பரிசுகள்

| | | |
|---|---|---|
| 6-ம் | பரிசு | 45560 |
| 7-ம் | பரிசு | 31302 |
| 8-ம் | பரிசு | 38801 |
| 9-ம் | பரிசு | 03850 |
| 10-ம் | பரிசு | 54487 |

ரிக்கெட்டினை பெற்ற யாவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

17.11.2012ம் திகதிக்கு முன்னர் அதிர்ஷ்ட பொருட்களை மாலை 3 மணிக்கு முதல் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

முகவரி:-

யாழ் விழிப்புலனற்றோர் சங்கம்
இல. 28, கோயில் வீதி,
முதலாம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (767)


# மகளை துஷ்பிரயோகித்த தந்தைக்கு 66 வருட கடூழிய சிறைத் தண்டனை

மகள்களை பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திய தந்தை ஒருவருக்கு 66 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அனுராதபுர உயர் நீதிமன்ற நீதவான் சுனந்த குமார ரத்நாயக்கவினால் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குற்றச் செயலில் ஈடுபட்ட குறித்த நபர், ஒரு லட்ச ரூபா நட்ட ஈட்டையும், ஒன்றரை லட்ச ரூபா அபராதமும் செலுத்த வேண்டுமென மேலும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அபராத மற்றும் நட்ட ஈட்டுத்தொகைகளை செலுத்தத் தவறினால் மேலும் 15 ஆண்டு சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

8 வயதான மூத்த மகளை பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தியமைக்காக 18 வருட சிறைத்தண்டனை அவருக்கு ஏற்கெனவே விதிக்கப்பட்டிருந்ததினாலேயே இந்தத் தீர்ப்பும் வழங்கப்பட்டுள்ளது.

எட்டு வருட கால சிறைத்தண்டனையை அனுபவித்து முடித்ததன் பின்னரே இரண்டாம் மகளை பாலியல் ரீதியாக வன் கொடுமைக்கு உட்படுத்தியதாக வழக்கு விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

முதலில் குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை எனத் தெரிவித்த குறித்த நபர் பின்னர் அனைத்து குற்றச்சாட்டுக்களையும் ஏற்றுக் கொண்டுள்ளார்.

முன்பும் சிறைத்தண்டனை அனுபவிப்பதற்கு முன்னர் இரண்டாவது மகளையும் குறித்த நபர் பாலியல் ரீதியாக துன்புறுத்தியுள்ளார் எனவும் குறிப்பிடப்படுகிறது. (ந-11)

# வவுனியா மன்னார் வீதியில் விபத்து கைக்குழந்தை உட்பட மூவர் படுகாயம்



(பூந்தோட்டம்)

வவுனியா மன்னார் வீதியில் குருமன் காட்டுச் சந்திக்கு அருகாமையில் ஜீப் ரக வாகனமும் முச்சக்கர வண்டியும் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையின் விபத்துக்கள் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீடொன்றின் முன்னால் வீதியில் செல்வதற்கு தயாரான நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியில் வவுனியாவில் இருந்து குருமன்காட்டுச் சந்தி நோக்கி பயணித்த ஜீப் ரக வாகனம் மோதுண்டதிலேயே முச்சக்கரவண்டியில் அமர்ந்திருந்த 8 மாத கைக்குழந்தை உட்பட இரு பெண்கள் காயமடைந்துள்ளனர்.

நேற்று மாலை4 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் குவிந்த பொதுமக்கள் முச்சக்கரவண்டியினுள் சிக்குண்டு இருந்தவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

இதனையடுத்து ஜீப் வாகனத்தின் சாரதி வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-266)

# இலங்கையை உன்னிப்பாக அவதானிக்கிறது இந்தியா!

## சுமந்திரன் சுட்டிக்காட்டு

13வது அரசியலமைப்புத் திருத்தம் மாகாண சபைகளுக்கு வழங்கியுள்ள அதிகாரங்களைப் பறிக்கும் திவிநெகும சட்டமூலம் தொடர்பான நிலைமைகளை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருவதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பயணத்தை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பிய அவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புதுடெல்லிப் பயணம் தொடர்பாக கருத்துத் வெளியிடுகையில்,

இலங்கை அரசாங்கத்துடனான பேச்சுக்கள் தடைப்பட்டதற்கான காரணங்களை இந்தியத் தலைவர்களுக்கு எடுத்து விளக்கியுள்ளோம். இருதரப்புப் பேச்சுக்களைத் தொடர இலங்கை அரசாங்கம் சம்மதித்தால் மட்டுமே, நாம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்குபற்றுவோம்.

இந்தப் பேச்சுக்களில் எட்டப்படும் உடன்பாடுகளை தெரிவுக்குழுவின் முன் கொண்டு போகலாம்.

இலங்கை அரசாங்கம அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதற்கு பதிலாக அதிகாரங்களை பறித்தெடுத்துக் கொள்ளும் எதிர்மாறான வேலையையே செய்கிறது என்பதை திவிநெகும சட்டமூலத்தை உதாரணம் காட்டி விளக் கினோம்.

இந்தியா இந்த சட்டமூலம் குறித்து ஏற்கெனவே அறிந்து வைத்துள்ளது.

13வது திருத்தம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்படவேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ந-11)

# புதிய கட்டிட திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்கு அ.த.க. பாடசாலையின் புதிய கட்டடத் தொகுதி திறப்பு விழா இன்று புதன்கிழமை காலை 10.00 மணிக்கு பாடசாலை அதிபர் வி. சிவனேசன் தலைமையில் இடம்பெறுவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்ரி அலன்ரின் கலந்து கொள்ளவுள்ளார். (ந-11)

# பரிசளிப்பு விழா

யா/சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை வியாழக் கிழமை காலை 9.00 மணிக்கு அதிபர் திருமதி எல். மகேஸ்வரன் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன், சிறப்பு விருந்தினராக யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரி.வை. ரவீந்திரனும் கௌரவ விருந்தினராக வணபிதா. ஜே.பி. அன்ரனியும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-136)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## இரக்கத்திலும் ஓர் இடைஞ்சல்

“இரக்கம் காட்டு; ஆனால், ஏமாந்து போகாதே!” இது மௌன குரு சுவாமி சொன்ன வாக்கு.

இந்தக் காலத்துக்கு பொருந்தக்கூடிய மிகவும் அவசியமான ஒரு பொன்மொழி. இவ்வுலகில் ஏமாற்றுபவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். அப்படி இருக்கும் போது ஒரு நல்ல காரியம் செய்தால்கூட மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

ஒரு வசதியான நபர் பத்தாயிரம் ரூபாவை எடுத்துக் கொண்டு தெருவில் இறங்கினார். பணம் தொலைந்து போய் விடும் என்பதற்காக அதை கவனமாக ஒரு பையிலே சுற்றி மூடி அதை எடுத்துக்கொண்டு புறப்பட்டார். ஆனால், அவர் அந்தப் பணத்துடன் சேர்ந்து பையையும் தொலைத்து விட்டார். பணம் இப்போது அவரிடமிருந்து போய் விட்டது.

அதன்பின் தான் பயணம் செய்த இடமெல்லாம் தேடிப் பார்த்தான். பணம் கிடைக்கவில்லை.

சரி... இனி என்ன செய்யலாம்? என்று யோசித்தார்.

நேராக ஒரு பத்திரிகை அலுவலகத்திற்குப் போனார்; விளம் பரம் ஒன்றை பத்திரிகையில் பிரசுரிக்குமாறு கொடுத்தார். “இது மாதிரி... ஒரு கைப்பை பணத்தோடு காணாமல் போய் விட்டது... அது யாராவது கண்ணிலே தென்பட்டால் தயவு செய்து இந்த முகவரிக்கு கொடுத்துதவுங்கள்...

அப்படி அதை கண்டெடுத்துக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் ரூபா பரிசு வழங்கப்படும் –என்று பத்திரிகைக்கு விளம்பரம் கொடுத்தார்.

அவரது பணம் ஒரு சாதாரண தொழிலாளியின் கையிலே கிடைத்து விட்டது. பணம் எடுத்தவரும் விளம்பரத்தைப் பத்திரிகையிலே பார்த்தார். அவரும் மிகவும் நேர்மையான மனிதன். அடுத்தவர்களின் பணம் நமக்கு எதற்கு? என்று நினைக்கிறவர்.

அந்தப் பத்திரிகை விளம்பரத்திலே இருந்த விலாசத்தைப் பார்த்தார். பணப்பையை எடுத்துக் கொண்டு நேராக உரிய விலாசத்தைச் சென்றடைந்தார். அந்த நபரிடம் பணப்பையைக் கொடுத்தார்; எண்ணிக்கொள்ளுமாறு சொன்னார். எவ்வளவு பொறுப்புணர்வு உள்ள மனிதன் இந்த நபருடைய பணப்பையை கொண்டு போய் கொடுத்திருக்கிறார்?

ஆனால், அந்த நபருக்குப் பணப்பை கிடைத்ததும் புத்திமாறிப் போய்விட்டது.

எதற்காக இந்த நபருக்கு அநாவசியமாக ஆயிரம் ரூபாவை நான் கொடுத்துதவ வேண்டும்? என்று யோசித்தார்.

பத்திரிகையிலே கொடுப்பேன் என்று விளம்பரப்படுத்தி விட்டு நேரிலே “இல்லை” என்று எப்படி சொல்வது?

அதனால் அவரை எப்படி ஏமாற்றலாம் என யோசித்தார்.

ஒரு முடிவுக்கு வந்தார். உடனே பணத்தை கண்டுபிடித்த நபரை கோபமாகப் பார்த்தார்.

“ஏய்!... இந்தப் பையிலே பத்தாயிரம் ரூபா பணமும்; இரத்தினக்கல் ஒன்றும் வைத்திருந்தேன். அந்தக் கல்லைக் காணவில்லை. நீதான் திருடி இருக்கிறாய்” என்றார்.

இது என்ன வம்பாகப் போய்விட்டது– என்று நினைத்தான். பணம் தவிர வேறு எதுவுமே பையினுள் இருக்கவில்லை என்று சொல்லிப் பார்த்தான். அவரோ கேட்கிற மாதிரி இல்லை. எப்படி கேட்பார்? நாடகம் இதோடு முடியவில்லை! பொலிஸ் நிலையம் வரைக்கும் போய்விட்டது.

பொலிஸ் நிலையம் சென்ற நபர், நீதிமன்றம் வரை வழக்கை கொண்டு சென்றார்.

வழக்கை நீதிபதி விசாரித்த போது, குறித்த நபர் “பொய் பேசுகிறார்” என்று நன்றாக புரிந்து கொண்டார். ஆனால், அவர் என்ன சொன்னார் தெரியுமா?

“ஐயா... நான் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவன். நான் என் வாழ்நாளிலே பொய் பேசியது கிடையாது. சத்தியமாக இந்தப் பையினுள் இரத்தினக்கல் வைத்திருந்தேன்” என ஒரேயடியாக கூறி முடித்தார். இதற்குத் தகுந்த மாதிரி சில பொய் சாட்சிகளையும் தயார் நிலையில் வைத்திருந்தார் மகா கில்லாடி.

இரக்கப்பட்டு பணத்தை எடுத்துக் கொடுத்தவரின் நிலைமை மிகவும் பரிதாபமாக இருந்தது.

நீதிபதி அனைத்தையும் அவதானித்துவிட்டு அந்த ஏமாற்றுப் பேர்வழியைப் பார்த்துச் சொன்னார்;

“ஐயா! பெரியவரே! உங்களை பார்த்தவுடனேயே நீங்கள் பொய்யே சொல்லமாட்டீர்கள் என்பது எனக்குப் புரிந்து விட்டது. அதுமட்டுமல்ல சாட்சி வேறு வைத்துள்ளீர்கள்.

அதனாலே காணாமல் போன உங்கள் பை இதுவாக இருக்காது. இதுவாக இருந்தால் இரத்தினக்கல் இங்கே இருந்திருக்கும். பை இன்னும் கிடைக்கவில்லையென்று மீண்டும் விளம்பரப் படுத்துங்கள் என்றார். அந்த நபர் பதறிப்போய் உண்மையை ஒத்துக் கொண்டார்.

அடுத்தவர்களுக்கு நல்லது செய்தால்கூட அதிலேயும் எவ்வளவு இடைஞ்சல் இருக்கிறது பார்த்தீர்களா?

நான் கூட சில சமயம் உதவி செய்கிறதாக நினைத்துக் கொண்டு உபத்திரவத்தில் மாட்டிக் கொள்ளும் சந்தர்ப்பமும் உள்ளது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதியர் பற்றாக்குறை நிலவுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் நிலவும் தாதிய வெற்றிடங்களை உடன் நிவர்த்தி செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ்.போதனா வைத்தியசாலையின் அரச தாதியர் சங்க அதிகாரியொருவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதியர் வெற்றிடமாகவுள்ளதால் தற்போது அங்கு பணிபுரியும் தாதியர்கள் நாளொன்றுக்கு 18 மணித்தியாலங்கள் வரை கடமை புரிய வேண்டியுள்ளது.

இதனால் அவர்கள் மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர்.

யாழ்.போதனாவில் கடமையில் ஈடுபடுவதற்கு ஆயிரத்து 500 வரையான தாதியர்கள் தேவை. ஆனால், தற்போது 390 தாதியர்களே கடமையில் ஈடுபடுகின்றனர்.

இந்நிலையில் ஆயிரத்து 500 தாதியர்கள் செய்யும் வேலையினை 390 தாதியர்கள் எவ்வாறு செய்வது. இதனால் வேலைப்பளு காரணமாக துன்பத்தை அனுபவிக்கின்றனர்.

வேலை நேரத்திற்கு மேலதிகமாக கடமையில் ஈடுபடுகின்ற போதிலும் அதற்கு தகுந்த மேலதிக நேரக் கொடுப்பனவும் வழங்கப் படுவதில்லை.

இத்தகைய பற்றாக் குறையினை நீக்குவதற்கு பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்க முடியும். எனினும் அதனை செய்வதற்கு உரியவர்கள் பின்னடிக்கின்றனர்.

மேலும் ஐந்து வருடங்களுக்கு மேலாகியும் தாதியர்களுக்காக விடுதி வசதி செய்யப்படவில்லை. இதனால் தாதியர்கள் மழை காலங்கள் உட்பட எந்த நேரத்திலும் சிரமத்தையே எதிர்நோக்க வேண்டியுள்ளது. விடுதி வசதி செய்து தரப்படாமையினால் தென்பகுதி தாதியர்கள் இங்கு பணியாற்ற பின்னிற்கின்றனர் என்றார். (அ-4)

# விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக 2010/ 2011 ஆம் ஆண்டுக்கான விரிவுரைகள் கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகியுள்ளதாக பதிவாளர் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் இன்று புதன்கிழமை விவசாயபீடம் மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம் என்பவற்றிற்கான விரிவுரைகள் நடைபெறும். அத்துடன் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை விஞ்ஞானபீட விரிவுரைகள் இடம்பெறுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# குங்கும அர்ச்சனை

யாழ்ப்பாணம் நல்லூர் நாவலர் வீதியிலமைந்துள்ள சீரடி சாயி மந்திரில் ஸ்ரீ கருவளர்த்த நாயகிக்கு குங்கும அர்ச்சனை நடை பெறவுள்ளதாக ஆலயத்தினர் அறிவித்துள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை தினமும் மாலை 4.30 மணிக்கு இவ்வர்ச்சனை நடைபெறவுள்ளது. இவ்வர்ச்சனையில் பங்கு கொள்ள விரும்புவர்கள் தினமும் மாலை 4 மணிக்கு வெற்றிலை, குங்குமத்துடன் வருமாறு கேட்டுள்ளனர். (அ-9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 55 | 40 | 30-50 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 75 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 35-40 | 70 |
| தக்காளி | 50 | 40 | 30 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 30 | 30 | 40 |
| கோவா | 90 | 80 | 60 | 80 |
| கரட் | 100 | 70 | 80-100 | 120 |
| பூசணி | 50 | 30 | 35-40 | 40 |
| புடோல் | 40 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 50 | 40 | 25-30 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 70 | 40-60 | 75 |
| பெரிய வெங்காயம் | 90 | 70 | 60 | 60 |
| பாகற்காய் | 140 | 110 | 70-100 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 30 | 50 |
| கருணைக் கிழங்கு | 70 | 60 | 50 | 70 |
| பயற்றங்காய் | 40 | 50 | 40 | 70 |
| லீக்ஸ் | 110 | 110 | 80 | 120 |
| பீற்றூட் | 70 | 40 | 40 | 60 |
| கறிமிளகாய் | 90 | 70 | 80 | 110 |
| முருங்கைக்காய் | 70 | 90 | 25-40 | 40 |
| போஞ்சி | 100 | 110 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 45 | -- | -- | 40 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 300 | 250 | 250 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 30 | 28-32 | 26-30 |

# இராசி பலன்

17.10.2012
(ஐப்பசி 01, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
துதியை பிற்பகல் 2.13 மணிவரை
சுவாதி காலை 7.34 மணிவரை
விசாகம் பின்னிரவு 5.58 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை
சுபநேரம் 4.32-6.02 மணிவரை
சித்தாமிர்தம்.

**மேடம்** விருந்தினர் வருகையுண்டு, தொழிலில் பங்குதாரரின் ஒத்துழைப்பு கிடைக்கும், ஆனைமுகனை வழிபட்டு அதிர்ஷ்டத்தை வரவழைத்துக் கொள்ள வேண்டிய நாள்.

**இடபம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரும், உடல் நலன் சீராகும், கடன் சுமை குறையும், செல்வ நிலை உயர எடுத்த முயற்சி வெற்றி தரும்.

**மிதுனம்** குடும்பத்தில் குதூகலம் கூடும், பிள்ளைகளின் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும், அம்பிகை வழிபாடு ஆனந்தம் தரும், சான்றோர்களின் சந்திப்புண்டு.

**கடகம்** பெற்றோர் மீது பிரியம் கூடும், தொழில் முன்னேற்றமுண்டு, தூரதேசச் செய்திகளால் நன்மையுண்டு, விருப்பங்கள் நிறைவேற வழிபாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள்.

**சிங்கம்** அரசியல் செல்வாக்கு மேலோங்கும், நண்பர்களால் நன்மையுண்டு, பணத் தேவைகள் பூர்த்தியாகும், உடன் பிறப்புக்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**கன்னி** மக்கள் போற்றும் வாழ்வமைய அம்பிகையை வழிபட வேண்டிய நாள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள்.

**துலாம்** தொழில் ரீதியாக பயணமொன்றை மேற்கொள்வீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், சான்றோர்களின் சந்திப்புண்டு, கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**தனுசு** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வருமானம் திருப்தி தரும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**மகரம்** புதிய திருப்பங்கள் ஏற்படலாம், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிட்டும், போசன சுகமுண்டு.

**கும்பம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பயணங்களால் பலனுண்டு, வழிபாட்டால் இன்பங்கள் கூடும், சிலருக்கு கட்டுப்பட்டு நடக்கும் சூழ்நிலை உருவாகும்.

**மீனம்** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், உறவினர் உங்கள் செயற்பாடுகளில் குறை கூறலாம், எடுத்த காரியங்கள் தாமதமாகும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோயால் நேற்று வரை 74 பேர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)


யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினமும் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட ஆறு பேர் அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை தொற்று நோய் தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர். இவ் டெங்கு நோயாளர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்ட டெங்கு நோயாளர்களில் 4 பேர் திருநெல்வேலியைச் சேர்ந்தவர்கள் என்றும் ஒருவர் நீர்வேலியைச் சேர்ந்தவரென்றும் மற்றொருவர் குருநகரைச் சேர்ந்தவரென்றும் குறிப்பிடப்படுகின்றது.

திருநெல்வேலியை சேர்ந்த டெங்கு நோயாளர்கள் நால்வரில் இருவர் தந்தையும் மகளுமாக உள்ளனர். இம் மாதத்தில் நேற்றுவரை 74 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் நாளொன்றுக்கு சராசரியாக குறைந்தபட்சம் 5 டெங்கு நோயாளர்கள் அனுமதிக்கப்படுவதோடு தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் இவ் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறு காய்ச்சல் தென்பட்டாலும் உடனடியாக வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு வலியுறுத்தப்படுகின்றது. (அ-4)




நன்றி: மிரர்

# யாழ்.தேர்தல் மாவட்டத்தில் வாக்காளர் எண்ணிக்கை குறைவடையும் அபாயம்

## தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தகவல்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.தேர்தல் மாவட்டத்தில் வாக்காளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவடைந்து செல்வதாகவும் வெளிநாட்டு பயணங்கள் இதற்கு முக்கிய காரணம் எனவும் யாழ்.தேர்தல் திணைக்கள வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.**

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ்.தேர்தல் திணைக்களத்தினால் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பதிவு நடவடிக்கையின் மூலம் 4 இலட்சத்து 82 ஆயிரத்து 344 வாக்காளர்கள் உள்ளனர்.

இதேவேளை, கடந்த 2010 ஆம் ஆண்டு 4 இலட்சத்து 84 ஆயிரத்து 791 வாக்காளர்கள் பதியப்பட்டிருந்தனர். இதன்படி கடந்த ஒரு வருடத்தில் 2 ஆயிரத்து 447 வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவடைந்திருந்தது.

வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவடைந்ததற்கு பல காரணங்கள் கூறப்பட்டிருந்தன. அதில் பிரதானமானது கிராம சேவையாளர்கள் உரியமுறையில் வாக்காளர்களைப் பதிவு செய்யவில்லை என்பதாகும். இதுதவிர மக்களுக்கும் வாக்காளராக பதிவு செய்வதில் அக்கறையின்மை. இதற்கு கடந்த கால சூழ்நிலைகளைக் காரணம் கூற முடியும்.

இவ்வறிக்கையில், இம்முறையும் வாக்காளர்களின் எண்ணிக்கை சடுதியாக குறைவடையும் அபாயம் உள்ளது. குடும்பத்துடன் வெளிநாடுகளுக்கு செல்வோரின் எண்ணிக்கை கடந்த காலங்களை விட தற்போது அதிகரித்துள்ளது. இம்முறை மட்டுமல்ல எதிர்காலத்தில் வாக்காளர்களின் எண்ணிக்கை சடுதியாக குறைவடையும்.

எனவே, வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவடைவதைத் தடுக்க சகல அரசியல் கட்சியினரும் கட்சி பேதத்தை மறந்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஏற்கனவே யாழ்.தேர்தல் மாவட்டத்திலுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவடைந்ததனால் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வெளிநாட்டிலுள்ள வாக்காளர்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்பு பதிவு செய்து கொள்ள முடியும் என யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் அறிவித்துள்ளார்.

வெளிநாட்டிலுள்ள தமது உறவினர்களை வாக்காளராக பதிவு செய்ய யாழ். தேர்தல் திணைக்களத்தினை நாட முடியும் எனவும் அவர் தெரிவித்திருந்தார். (அ-6)




# திவிநெகும பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த இன்று யாழில் நடைபவனி

(யாழ்ப்பாணம்)

இலங்கை சமுர்த்தி அதிகார சபை திவிநெகும சட்ட மூலம் ஊடாக திவிநெகும அபிவிருத்தி திணைக்களமாக மாற்றமுறுதல் தொடர்பாக சமுர்த்திப் பயனாளிகளை மாவட்ட மட்டத்தில் ஒன்று திரட்டி திவிநெகும பற்றிய அறிவூட்டுதலையும் விழிப்புணர்வையும் வழங்க உத்தேசிக்கப்பட்டு இன்று புதன்கிழமை பேரணி ஒன்றை நடத்தவுள்ளதாக யாழ். மாவட்ட சமுர்த்தி சங்க சமாசத் தலைவர் முத்தையா சங்கர லிங்கம் அறிவித்துள்ளார்.

இப்பேரணியானது முற்பகல் 10 மணிக்கு யாழ். மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகாமையில் ஆரம்பித்து மகாத்மா வீதி , ஆஸ்பத்திரி வீதி, கண்டி வீதியூடாக பிற்பகல் ஒரு மணிக்கு மாவட்ட செயலக முன்பாக நிறைவடையும்.

யாழ். மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் சங்கம், சமுர்த்தி முகாமையாளர்கள் சம்மேளனம் என்பவற்றின் ஏற்பாட்டில் மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்திப் பயனாளிகள் இணைந்து திவிநெகும சட்ட மூலத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரியே இப்பேரணி நடைபெறுகின்றது.

இப்பேரணி நிறைவில் கருத்துரைகள் வழங்கப்படும். (அ-6)


# நவராத்திரி விழா


(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் நவராத்திரி விழா நேற்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நடைபெறவுள்ளது.

நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ள மூன்றாம் நாள் நிகழ்வில் அம்பிகை கடாட்ஷம் எனும் தலைப்பில் பிரமச்சாரி ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் சிறப்புச் சொற்பொழிவை ஆற்றவுள்ளார். அத்துடன் அளவெட்டி காமாட்சி அம்மன் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (அ-9)







சித்தன்கேணி வட்டு. இந்துக்கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரியின் அதிபர் மங்கல விளக்கேற்றுவதையும் திருமதி கிருபாகரி இளங்கோவன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் மாணவிகளின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பரீட்சார்த்த விமானம் தரையிறக்கம்

(கொழும்பு)

இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமான அம்பாந்தோட்டை மத்தல விமான நிலையத்தில் முதலாவது பரீட்சார்த்த விமானம் தரையிறக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சார்த்த விமான தரையிறக்கம் நேற்றைய தினம் நடைபெற்றது.

குறித்த விமான நிலையத்தின் பயண கட்டுப்பாட்டு உபகரணங்களை பொருத்துவதற்காகவே இந்த பரீட்சார்த்த விமானம் தரையிறக்கப்பட்டதாக மத்தல விமான நிலைய உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன . (அ-2)

# கொட்டித் தீர்த்தது மழை; குளிர்ந்தன விவசாய நிலங்கள்

யாழ்.குடாநாட்டில் நேற்று இடி, மின்னலுடன் கடும் மழை பொழிந்தது. நீண்டகால வறட்சிக்கு பின்பு அண்மையில் பருவமழை பெய்ய ஆரம்பித்தது. பின்பு மழை மேகம் தொடர்ந்து ஏமாற்றமளித்துவந்த நிலையில் நேற்றுக் காலை தொடக்கம் கடும் மழை பொழிந்தது.

குடாநாட்டை பொறுத்தவரை பெரும் போக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் ஏற்கனவே விவசாய நடவடிக்கையில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது மழை பெய்ய ஆரம்பித்துள்ளது மகிழ்ச்சியை ஏற்படுத்தியள்ளது. விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தினாலும் வீதிதிருத்துப்பணிகளில் ஈடுபடுவோருக்கு பாரிய நெருக்கடியினை மழை கொடுத்துள்ளது.

குடாநாட்டின் பல பகுதிகளில் வீதி திருத்தப்பணிகள் மற்றும் பாலம் அமைத்தல், வீதிகளுக்கு காப்பெற்றிடுதல் போன்ற நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இந்தப் பணிகளுக்கு வரட்சியான காலநிலை ஏதுவாக அமைந்திருந்தது.

ஏற்கனவே வீதித் திருத்தப் பணிகளுக்காக போடப்பட்டுள்ள வீதித் தடைகள், கற்கள் ஏனைய பொருட்களினால் வீதியில் பயணிப்போர் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வரும் நிலையில் மழை பெய்ய ஆரம்பித்துள்ளது. திருத்தப் பணிகள் இடம்பெறாத வீதிகளினால் பயணிப்போர் வீதிகளில் உள்ள குழிகள், வீதித்தடைகளினால் ஏற்கனவே இடர்பாடுகளை எதிர்கொண்டு வருகின்றனர்.இந்நிலையில் மழையினால் வீதிகளில் தேங்கி நிற்கப் போகும் வெள்ளத்தால் நாள் தோறும் பெரும் துன்பங்கள் ஏற்படவுள்ளன. குடாநாட்டில் வீதி விபத்துக்கள் ஏற்கனவே அதிகரித்து விட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)



Cambridge Management College

OPEN DAY-21,22 October -2012

நேரம்- 9.00 முதல் 3.00 மணி வரை

யாழில் முதன் முறையாக UK இல் இருந்து வருகை தந்துள்ள ஆங்கிலேயர்களால் ஆங்கிலம் New Method இல் கற்பிக்கப்படுகின்றது.

Lecturers



Mr. Rob Horne
M.Phil in English
Qualified
Cambridge
Uni Examiner



Ms. Janette Smith
Master of
Education
(English)

தொழில் புரிவோர் (ஆசிரியர்கள், சட்டத்தரணிமார்கள், வர்த்தகர்கள்) பாடசாலைக் கல்வியை முடித்தவர்கள், வெளிநாடு செல்ல விரும்புவோர்களுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

உங்கள் பதிவுகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

Cambridge Management College
இல. 23, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம், (கச்சேரி பஸ்நிலையம் அருகில்)
தொ.பேசி : 0777740999, 0212221818
Email-cmcjaffna@gmail.com


# மாணவர்களுக்கு மாரடைப்பு ஏற்படக்கூடிய அபாயம்

## சுகாதார அமைச்சு தகவல்

பாடசாலை மாணவர்களுக்கு மாரடைப்பு ஏற்படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாடசாலை மாணவ மாணவியரில் 89 வீதமானவர்கள் உடற்பயிற்சி எதனையும் மேற்கொள்வதில்லை என தெரிவித்துள்ளது.

5 வயத்து முதல் 19 வயது வரையிலான மாணவ மாணவியர் நாளொன்றுக்கு குறைந்த பட்சம் ஒரு மணித்தியாலமேனும் உடற்பயிற்சி செய்ய வேண்டும்.பாடசாலை மாணவர்களில் 17 வீதமானவர்களும் மாணவிகளில் 30 வீதமானவர்களும் உடல் எடை கூடியவர்களாகக் காண ப்படுகின்றனர்.

பாடசாலை மாணவ மாணவியரின் 10 தொடக்கம் 15 வீதமானவர்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சில தசாப்தங்களுக்கு முன்னதாக நீரிழிவு, மாரடைப்பு போன்ற தொற்றாத நோய்கள் பெரியவர்களுக்கு மட்டுமே ஏற்படுவதாகவும் தற்போது மாணவ மாணவியருக்கு இந்த நோய்கள் ஏற்படுவதாகவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (அ-2)

# மாவட்டத்தில் முதலாமிடம்



சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக கலாசார மற்றும் இலக்கியப் போட்டிகள் மாவட்ட மட்டத்தில் அண்மையில் யா/ புனித ஜேம்ஸ் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இதில் சைவ வித்தியா விருத்திச் சங்க சைவச் சிறுவர் இல்ல மாணவி நா.சிந்துஜா மேற்பிரிவில் பங்குபற்றி பேச்சு மற்றும் தனிப்பாடல் போட்டிகளில் முதலாமிடத்தினைப் பெற்றுள்ளார்.

மேலும் இம்மாணவி எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை எம்பிலிப்பிட்டியில் நடைபெறவுள்ள தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## சரத் பொன்சேகாவுக்கு

# வெலிக்கடை சிறைச்சாலை 60 ரூபா கடன் வழங்க வேண்டும்

(கொழும்பு)

சரத் பொன்சேகாவுக்கு வெலிக்கடை சிறைச்சாலை அதிகாரிகள் 60 ரூபாய் கட்டணம் ஒன்றை செலுத்த வேண்டி இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தேவாரப் பெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வெலிக்கடைச் சிறையில் சரத் பொன்சேகா இருந்தபோது அங்குள்ள அழுக்குத் துணிகளை துவைக்கும் பிரிவில் பொன்சேகா ஒருநாள் பணியாற்றியுள்ளார்.

அதற்கு 60 ரூபாய் வேதனம் வழங்கப் பட்டிருக்க வேண்டும். ஆனால், அதனையும் சிறைச்சாலை அதிகாரிகள் சரத் பொன்சேகாவுக்கு வழங்கவில்வைல என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சாதாரண 60 ரூபாய் கட்டணத்தை வழங்க முடியாதுள்ள அரசாங்கம் எவ்வாறு மக்களின் பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு காணும் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (அ-2)


## கல்யாண மாலை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அத்தம் 2<br>உயரம்:-5'5.5"<br>கி.பா:-14.5<br>தொழில்:-A/L (Student visa London)<br>B/018 | பிறப்பு:- 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- திருவாதிரை 1<br>உயரம்: 5'3"<br>கி.பா:-22.5<br>தகைமை:-A/L Computer Diploma<br>G/589 |
| பிறப்பு:- 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-ஆயிலியம் 4<br>உயரம்:-5'8"<br>கி.பா:-74.25<br>தகைமை:-A/L (சுப்பர் மார்க்கெட் மலேசியா)<br>B/607 | பிறப்பு:- 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- கார்த்திகை1<br>உயரம்: 5'4.5"<br>கி.பா:-53<br>தொழில்: Bsc Ouantity Surview<br>G/067 |
| பிறப்பு:- 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-அச்சுவினி 1<br>உயரம்:-5'8"<br>கி.பா:-67<br>0 > Va : Bsc பொருளியலாளர் அவுஸ்திரேலிய PR<br>B/394 | பிறப்பு:- 1987 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரோகினி 2<br>உயரம்: 5'2"<br>கி.பா: 21.25<br>தகைமை:-A/L<br>G/342 |
| பிறப்பு:- 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-மூலம் 1<br>உயரம்:-6'2"<br>கி.பா:-83.25<br>தொழில்:-B.sc Program Assistant<br>B/351 | பிறப்பு:- 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பரணி 2<br>உயரம்: 5'2"<br>கி.பா: 24.75<br>தொழில்:- Bsc ஆசிரியர்<br>G/375 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி



## அகில இலங்கை இந்து மாமன்றம்

(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் கூட்டமைப்பு)

"இந்து ஆலயங்களின் முகாமைத்துவம் மற்றும் பிணக்குத் தீர்ப்புகள்"

கருத்தரங்கு

சட்டத்தரணிகளுக்கும் இந்து ஆலய முகாமையாளர்களுக்கும் பயன் தரவல்ல நிகழ்வு

இந்து ஆலயங்களின் முகாமைத்துவம் மற்றும் பிணக்குத் தீர்ப்புகள் நிர்வாகம் பற்றிய கருத்தரங்கு எதிர்வரும் சனிக்கிழமை (20.10.2012) மு.ப 8.45 தொடக்கம் பி.ப 3.00 மணிவரை யாழ்ப்பாணம், நல்லூர், கோவில் வீதி இல. 211/17 இல் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்ற பிராந்திய பணிமனையிலுள்ள இந்து ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெறும்.

திரு.கனகநாயகம் கனக-ஈஸ்வரன் (ஜனாதிபதி சட்டத்தரணி) தலைமையிலான வளவாளர்கள் குழு விரிவுரைகளும் விளக்கங்களும் தருவர்.

பதிவுக் கட்டணம் ரூபா 500/- (கருத்தரங்கு ஆவணங்கள், மதிய சைவ உணவு மற்றும் தேநீர் உட்பட) ஆலயங்களின் பிரதிநிதிகளிடமிருந்து சகாயக் கட்டணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து தொடர்பு கொள்க.

அகில இலங்கை இந்து மாமன்றம், இல. 91/5, சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தை, கொழும்பு 02, தொலைபேசி 011-2434990, 0712 723456

யாழ் பணிமனை : இந்து கலாசார நிலையம், இல. 211/17, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், தொலைபேசி 021-2221075

விண்ணப்பிக்க வேண்டிய கடைசித் திகதி 17.10.2012 (C-1324)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா. மனித உரிமை கூட்டத்தில்

# அரசசார்பற்ற அமைப்புக்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்க தயார்

## வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு



**ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையின் ஒரு காலப்பகுதியான சர்வதேச மீளாய்வு நடைபெறும் போது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற அமைப்புக்கள் கேட்கும் கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் யதார்த்தபூர்வமான பதில்களை வழங்க இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் தயாராக இருப்பார்கள் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார்.**

ஐ.நா மனித உரிமை பேரவைக்கு இரகசியமான முறையில் அரசாங்கத்திற்கு எதிரான ஆதாரங்களுடனான சமர்ப்பணங்கள் முன்வைக்கப்பட்டு இதனை பலதரப்பட்ட தமிழ் அரச சார்பற்ற அமைப்புக்களும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் பரிந்துரை செய்திருப்பதாகவும் வெளியாகியுள்ள தகவல்கள் குறித்து பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தவறான பரிந்துரைகளை செய்துள்ள சில அரசசார்பற்ற அமைப்புக்கள் இலங்கைக்கு எதிரான கொள்கையை கடைப்பிடிக்கின்றனர்.

இவை வேணும் என்றே அரசாங்கத்தின் மீது தவறான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றன.தற்போது உத்தியோகபூர்வ ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஆவணமான இலங்கை பற்றிய குறிப்பிட்ட கால ஆய்வறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டதென் றும் இங்கு கேட்கப்பட்ட பல கேள்விகளுக்கு பதில் கொடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை மீள்குடியேற்ற நடவடிக்கைகளையும் புனர்வாழ்வு செயற்பாடுகளையும் நிறைவேற்றி உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணத்தை அளித்திருக்கிறது.யுத்தத்தின் பின் அரசாங்கம் செய்து முடித்த சாதனைகளில் இதுவும் ஒன்று.

நவம்பர் மாதத்தில் நடைபெறும் ஐ.நா மனிதவுரிமை பேரவையில் இப்படியான கேள்விகளுக்கு இலங்கை ஆதாரபூர்வமான பதில்களை அளிக்கும் இலங்கை அரசாங்கத்தின் தேசிய நடவடிக்கை திட்டம் மனிதவுரிமைகளுக்கு ஊக்கமளித்து அதனை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என்று கற்றறிந்த பாடங்கள், நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகள் இப்போது நிறைவேற்றப்பட்டு வருகிறது.

விடுதலை புலிகள் இயக்கம் புதைத்த நிலக்கண்ணிவெடிகளை முற்றாக நீக்கிய பின்னர் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களில்சுமார் 3இலட்சம் பேரை நாம் குடியமர்த்தியுள்ளோம்.சிறுவர்களை ஆயுதம் தாங்கிய போராளிகளாக சேர்த்து கொள்ளும் அநீதிக்கு அரசாங்கம் இப்போது முற்றுப் புள்ளி வைத்திருக்கிறது.

யுத்தம் முடிவடைந்த பின்னர் நீதி விசாரணைக்கு அப்பாற்பட்ட முறையில் தன்னிச்சையாக மனித கொலைகள் புரிந்தவர்களுக்கு எதிராக விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்கள் குற்றமிழைத்திருந்தால் தண்டிக்கப்படுவார்கள்.

ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனிதவுரிமை கூட்டத்தொடருக்கு ஜனாதிபதியின் விசேட தூதுவரான அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையிலான தூதுக் குழு பங்கு கொள்ளும்.

இந்த தூதுக்குழுவில் சட்டமா அதிபர் திணைக்களம், வெளிவிவகார அமைச்சு, மீள் குடியேற்ற அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகளும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-2)

## நல்லூர் பிரதேசசபை

# தவிசாளர் தாக்குதலை கண்டித்து இன்று ஆர்ப்பாட்டம்

நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் மீதான தாக்குதலைக் கண்டித்து இன்று புதன்கிழமை தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஏற்பாட்டில் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று யாழ்.பஸ் நிலையம் முன்பாக முற்பகல் 11 மணியளவில் இடம்பெறவுள்ளது. இந்த விடயம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்மேலும் தெரிவிக்கையில், இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் நில அபகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்த நல்லூர் பிரதேச தபைத் தவிசாளர் மீது இனம் தெரியாத நபர்கள் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து முன்னர் அறிவிக்கப்பட்டவாறு இன்று கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெறும்.

திருநல்வேலி பாற்பண்ணைக்கு முன்பாகவுள்ள நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமான காணியை இராணுவத்தினர் அபகரித்ததோடு அதில் படை முகாம் ஒன்றினையும் அமைத்துள்ளனர்.

இந்நிலையில் இராணுவத்தினருக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்ய நல்லூர் பிரதேசசபை தீர்மானித்திருந்தது. இதற்கான நடவடிக்கையினை தவிசாளர் மேற்கொண்டிருந்தார்.

கடந்த 14 ஆம் திகதி இந்த காணி விவகாரம் தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது கொக்குவில் பகுதியில் வைத்து பிற்பகல் 3 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத நபர்கள் இரும்புக் கம்பியினால் தாக்குதல் மேற்கொண்டதோடு அவரிடமிருந்த ஆவணங்களையும் பறித்து சென்றிருந்தமை தெரிந்ததே. (அ-6)

# பப்பாசி இலைச்சாறு டெங்குநோய்க்கு மருந்து

பப்பாசி இலைச்சாறு டெங்கு நோய்க்கு உகந்த மருந்து என வைத்திய கலாநிதி சனத் ஹெற்றிகே கூறியுள்ளார்.

இவ்விடயம் 2008 ஆம் ஆண்டின் Sri Lanka Family Physicians Journal இல் வெளி வந்துள்ளது.

டெங்குநோய்க்கு மருந்தாக பயன்படும் பப்பாசி இலைச்சாற்றை பெறுவதற்கு பப்பாசி இலைகளை சுத்தமாக கழுவி நன்கு அரைக்கப்பட்ட பின்னரே பிழிந்தெடுத்தல் வேண்டும்.

இவ்வாறு பிழிந்தெடுக்கப்பட்ட சாற்றில் தண்ணீர், உப்பு, சீனி எதுவும் கலக்க கூடாது. அதிலும் பிரதானமாக பப்பாசி இலைகளை அரைக்கும் போது தண்ணீர் கலத்தல் கூடாது.

பிழிந்தெடுக்கப்பட்ட பப்பாசி இலைச் சாற்றை தினமும் இரு வேளைகள் உட்கொள்ளல் அவசியமானதாகும். குறிப்பாக ஒரு நேர மருந்தாக பெரியவர்கள் 10 தொடக்கம் 15 மில்லி லீற்றர் சாற்றையும் பிள்ளைகள் 5தொடக்கம் 10 மில்லி லீற்றர் சாற்றையும் பயன்படுத்தல் வேண்டும்.

குறித்த நோய்க்காக மருத்துவர் மருந்துகளைக் கொடுக்கலாம். எனினும் பப்பாசி இலைச்சாறு எந்த மருந்துக்கும் எதிர் விளைவுகளை ஏற்படுத்தமாட்டாது. இதற்கு பல மருத்துவர்களும் Independent Association of Medical Practitioners உம் தமக்கு ஆதரவும் ஊக்கமும் தருவதாக வைத்திய கலாநிதி சனத் ஹெற்றிகே தெரிவித்துள்ளார்.



டெங்கு நோயைப் பொறுத்தவரை பெரும் சேவையை செய்துள்ள பெருமை வைத்திய கலாநிதி சனத் ஹெற்றிகேவைச் சாரும் என Independent Association of Medical Practitioners இன் செயலாளர் வைத்திய கலாநிதி சமர நாயக்க கூறியுள்ளார்.

இப்பப்பாசி இலைச்சாறு புற்றுநோயாளருக்கு நன்மை பயப்பதுடன் Chemotherapy சிகிச்சை பெற்றுக் கொண்ட நோயாளருக்கும் Chemotherapy ஏற்படுத்தும் தீய எதிர் விளைவீகளை கட்டுப்படுத்த உதவுகிறது. இப்பப்பாசி இலைச்சாறானது ஏனைய மருந்துகளுடன் சேர்த்து பயன்படுத்தப்படுகின்றது என மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையின் ஆலோசக நிபுணர் வைத்திய கலாநிதி குணசேகர கருத்து தெரிவித்துள்ளார். இது தொடர்பான விளக்கமான கட்டுரை துளசி முத்துலிங்கத்தால் எழுதப்பட்டு கடந்த 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் Observer பத்திரிகையில் வெளிவந்துள்ளது.

**மூலம்**
**துளசி முத்துலிங்கம்**
**தமிழில்**
**சண்முகம்முத்துலிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களதான் மஞ்சுள மீது தாக்குதல் நடத்தினார்

## மங்களவின் கூற்றுக்கு விமல் சாட்டை

(கொழும்பு)

நீதிச்சேவைகள் ஆணைக்குழு செயலாளர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அமைச்சர் விமல் வீரவன்ச ஐக்கிய தேசிய கட்சியை குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவே இந்த தாக்குதலுக்கு திட்டமிட்டிருந்ததாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்த மங்கள சமரவீர போதைப் பொருளுக்கு அடிமையான ஒருவரைக்கொண்டு இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் பொலிஸார் அவரை கைது செய்வார்கள் என்றும் தெரிவித்தார்.

இந்த தாக்குதலுக்கு திட்டமிட்டதினாலேயே மங்கள சமரவீரவுக்கு இந்தத் தகவல் கிடைத்திருப்பதாக விமல் வீரவன்ச சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் மங்கள சமரவீரவின் மீது பொலிஸார் விசாரணை நடத்த வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.(அ-2)

# வெற்றி தோல்வியின்றி பிரச்சினை தீர்க்கப்பட்டது

## விரிவுரையாளர்கள் விவகாரம் குறித்து பசில் பெருமிதம்

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பிரச்சினை யாருக்கும் வெற்றி தோல்வி இன்றி தீர்க்கப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மஹாநாயக்கர்களின் ஆலோசனையின் அடிப்படையில் செயற்பட்டதாலேயே இந்தப் பிரச்சினைக்கு இலகுவாக தீர்வு காண முடிந்தது.

எவ்வாறாயினும் அரசாங்கம் தங்களுக்கு வழங்கிய உறுதி மொழிகள் குறிப்பிட்ட காலப்பகுதியில் நிறைவேற்றப்படாவிட்டால் மீண்டும் தொழிற் சங்க நடவடிக்கைகளை ஆரம்பிக்க விருப்பதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எச்சரித்துள்ளனர்.

தற்போது தற்காலிகமாகவே தங்களது போராட்டம் நிறைவுறுத்தப்பட்டுள்ளதாகவும் இந்தபோராட்டம் நிலையாக நிறுத்தப்படுவது அரசாங்கத்தின் செயற்பாடுகளிலேயே தங்கி இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# சுடப்பட்ட லயன் எயார் விமானத்தை அனுமதி கிடைத்ததும் மீட்போம்

## கடற்படைப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட லயன் எயாார் விமானம் உரிய அனுமதி கிடைக்கப் பெற்றதன் பின்னர் மீட்டெடுக்கப்படும் என கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

இரணைதீவிற்கு அருகாமையில் உள்ள கடற்பரப்பில் குறித்த விமானம் மூழ்கியுள்ளது. கடந்த 1998 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 24 ஆம் திகதி பலாலி ரத்மலான நோக்கிப் பயணித்த லயன் எயார் என்டனோவ் விமானத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் சுட்டு வீழ்த்தினர்.

இவ் விமானத்தில் பயணித்த 50 பேர் கொல்லப்பட்டனர். பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விடுத்த கோரிக்கைக்கு அமைய கடற்படைச் சுழியோடிகள் விமான இடிபாடுகளை கண்டு பிடித்துள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சிடமிருந்து உரிய அனுமதி கிடைக்கப் பெற்றதன் பின்னர் இடிபாடுகளை மீட்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஐ.தே.கட்சி பொதுக்கூட்டத்தில் உறுப்பினர்களிடையே பிணக்கு

ஐக்கிய தேசியக்கட்சியின் வருடாந்த பொதுக்கூட்டம் தொடர்பில் மீண்டும் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் பிணக்கு ஏற்பட்டுள்ளது.

கட்சியின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி சிறிகொத்தா தலைமையகத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக ஐக்கிய தேசியக் கட்சிகளின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இந்த பொதுக் கூட்டத்தில் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்தில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களே கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர் என்று கட்சித் தலைமை தெரிவித்திருந்தது.

இது தொடர்பில் கட்சியின் உறுப்பினர்கள் மத்தியில் பிணக்கு ஏற்பட்டுள்ளது. ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்கள் மாத்திரமே பங்கேற்கும் இந்த நிகழ்வில் ஏன் குறிப்பிட்ட சிலரை மாத்திரமே தெரிவு செய்து பங்கேற்க செய்ய வேண்டும் என்று உள்ளூராட்சி உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (அ-2)




# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1091-லண்டனில் பெரும் சூறாவளி இடம்பெற்றது.

★ 1346-இங்கிலாந்தின் மூன்றாம் எட்வேர்ட் ஸ்கொட்லாந்தின் இரண்டாம் டேவிட் மன்னனைச் சிறைபிடித்து பதினோராண்டுகள் லண்டன் கோபுரத்தில் அடைத்து வைத்தான்.

★ 1448-கொசோவோவில் ஹங்கேரிய இராணுவம் ஒட்டோமான் படைகளினால் தோற்கடிக்கப்பட்டனர்.

★ 1604-ஜேர்மனிய வானிலையாளர் ஜொகான்னஸ் கெப்லர் வானில் திடீரென மிக ஒளிர்வுள்ள விண்மீன் (எஸ்.என். 1604) தோன்றுவதைக் கண்டார்.

★ 1610-பதின்மூன்றாம் லூயி பிரான்சின் மன்னனாக முடி சூடினான்.

★ 1660- இங்கிலாந்தின் முதலாம் சார்ள்ஸ் மன்னனுக்கு மரண தண்டனையை அறிவித்த ஒன்பது பேர் தூக்கிலிடப்பட்டனர்.

★ 1662-இங்கிலாந்தின் இரண்டாம் சார்ள்ஸ் டன்கேர்க் நகரை 40 ஆயிரம் பவுணிற்கு பிரான்சுக்கு விற்றான்.

★ 1800-டச்சு குடியேற்ற நாடான குரக்காவோ இங்கிலாந்தின் கட்டுப்பாட்டில் வந்தது.

★ 1805-நெப்போலியனின் போர்கள்: ஊல்ம் நகரில் இடம்பெற்ற சமரில் அவுஸ்திரேலியப் படையினர் நெப்போலியன் பொனபார்ட்டின் படைகளிடம் வீழ்ந்தன.

★ 1806-ஹெயிட்டியின் மன்னன் முதலாம் ஜாக் படுகொலை செய்யப்பட்டான்.

★ 1907-மார்க்கோனி அட்லாண்டிக் நகரங்களுக்கிடையேயான தனது முதலாவது கம்பியில்லாத் தொடர்பை கனடாவின் நோவாஸ்கோசியாவுக்கும் அயர்லாந்துக்கும் இடையே ஏற்படுத்தினார்.

★ 1912-முதலாம் பால்க்கன் போர்: பல்கேரியா, கிரேக்கம், சேர்பியா ஆகியன ஒட்டோமான் பேரரசுடன் போரை அறிவித்தன.

★ 1917- முதலாம் உலகப் போரில் ஜேர்மனி, பிரித்தானியா மீதான தனது முதலாவது குண்டுத் தாக்குதலை நிகழ்த்தியது.

★ 1933-அல்பேர்ட் ஐன்ஸ்டைன் நாசி ஜேர்மனியில் இருந்து வெளியேறி ஐக்கிய அமெரிக்காவில் குடியேறினார்.

★ 1941-இரண்டாம் உலகப் போரில் முதற் தடவையாக ஜேர்மனிய நீர்மூழ்கிக் கப்பல் அமெரிக்கக் கப்பலைத் தாக்கியது.

★ 1961-பாரிசில் போராட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கான அல்ஜீரியர்கள் பொலிஸாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

★ 1965-1964 நியூயோர்க் உலகக் கண்காட்சி இரண்டாண்டுகளின் பின்னர் முடிவுற்றது. மொத்தமாக 51 மில்லியன் மக்கள் இக்கண்காட்சியைக் கண்டு களித்தனர்.

★ 1979-அன்னை தெரேசா அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார்.

★ 1998-நைஜீரியாவில் பெற்றோலியம் குழாய் வெடித்ததில் ஆயிரத்து 200 கிராமத்தவர்கள் உயிரிழந்தனர்.

★ 2003-தாய்ப்பே 101 உலகின் மிக உயரமான வானளாவி ஆனது.

★ 2006- ஐக்கிய அமெரிக்காவின் மக்கள் தொகை 300 மில்லியனை எட்டியது.

### பிறப்புக்கள்

★ 1906-கே.பி.ஹரன், தமிழ்ப் பத்திரிகையாளர் (இ.1981)

★ 1912- பாப்பரசர் அருள்ப்பர் சின்னப்பர் 1 (இ.1978)

★ 1965-அரவிந்த டி சில்வா, இலங்கை அணியின் துடுப்பாளர்

★ 1970-அனிஸ் கும்ப்ளே, இந்திய அணியின் சுழல் பந்தாளர்

★ 1972-எமினெம், அமெரிக்காவின் ராப் இசைக்கலைஞர்


### இறப்பு

★ 1981- கவிஞர் கண்ணதாசன் (பி.1927)

### சிறப்பு நாள்

★ உலக வறுமை ஒழிப்பு தினம்.

### கே.பி. ஹரன்



கே.பி. ஹரன் என்பவர் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் தலைசிறந்த பத்திரிகையாளராக இருந்தவர்.

**வாழ்க்கைக் குறிப்பு**

கிருஷ்ணசுவாமி பிராணதார்த்திஹரன் எனப்படும் கே.பி. ஹரன் தமிழ்நாடு தஞ்சை மாவட்டம் திருவையாறு என்னும் ஊரில் பிறந்தார். தனது 23 ஆவது வயது முதல் தமிழ்ப்பத்திரிகை உலகில் பல பத்திரிகைகளில் பணியாற்றினார்.

பத்திரிகைத் துறையில் 50 ஆண்டுகள் அனுபவங்களைப் பெற்றவர்.

ஈழத்தில் இவரது ஆன்மீகச் சொற் பொழிவுகள் பெயர்பெற்றவை.

**இறுதிக் காலம்**

1979 இல் சென்னை திரும்பிய இவர் தனது இறுதிக் காலத்தை மயிலாப்பூரில் செலவு செய்தார். இவர் 1981 இல் தனது 75 ஆவது வயதில் காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மச்சங்களின் மூலம் கிரகங்களின் ஆட்சி




(சென்றவாரத்தொடர்ச்சி...)

### சந்திரன் ஆட்சி பெற்றவர் (வெளுப்பு நிற மச்சம்)

எவருடைய உடல் மீது வெளுப்பாக ஒரு பெரிய மச்சமோ, அல்லது பல மச்சங்களோ இருந்தால் அத்தகையர்கள் சந்திர கிரகத்தின் தன்மையைக் கொண்டிருப்பார்கள்.

இவர்களது உடல் தோற்றம் அழகாக இருக்கும். வெள்ளை நிறமான தேகம். அதிக வியர்வை வழியும் தன்மையுடையதாக இருக்கும். முகம் வட்டமாக இருக்கும். அநேகமாக இந்த வகை நபர்கள் குணங்களிலும் உருவத்திலும் தமது தாயைப் போலிருப்பர்.

சந்திரத் தன்மையர் அநேகமாக தைரியமில்லாதவர்கள். எதையும் பயத்துடன் செய்வர். எதிலும் வீணாக மனதை உழப்புக் கொள்ளும் கோழைகள் எனலாம். பணிவும், அமைதியும் கொண்டிருப்பார்கள்.

தனிமையைக் காட்டிலும் மக்கள் நடுவே வாழ விரும்புவார்கள். இவர்களில் அதிக பணக்காரர்கள் இருப்பது அரிது. ஆயினும் வாழ்க்கைக்குரிய சாதாரண வசதிகளைப் பெற்றிருப்பார்கள்.

இவர்களில் பலர் சிறிய பெரிய வியாபாரங்கள் செய்து ஜீவிப்பர். சிலர் மற்றவர்களிடம் பணிபுரிபவர்களாகவும் இருக்கக் கூடும். பால், தயிர், வெண்ணெய் போன்ற திரவப் பொருட்களைக் கொண்டு சிலர் வியாபாரம் செய்வர். இவர்களில் பலருக்கு சங்கீதம் நன்றாகத் தெரிந்திருக்கும். இனிமையான குரலும் இருக்கும். இவர்களில் சிலர் ஜோதிட சாஸ்திரமும் கற்றிருப்பர். சித்திரக் கலையும் சிலர் கற்றிருக்கக் கூடும்.

இவர்களுக்கு வரக்கூடிய நோய்கள் மார்பு வலியும் வயிற்றுக் கோளாறும் தான். சில சமயங்களில் தலைவலியும் வரக் கூடும். இவர்களில் பலர் பிரயாணங்கள் அடிக்கடி செய்து கொண்டிருப்பார்கள்.

### செவ்வாய் ஆட்சி பெற்றவர் (சிவப்பு நிற மச்சம்)

எவருடைய தேகத்தின் மீது சிவப்பு நிறமாக மச்சங்கள் அதிகமாக இருக்குமோ அவர்கள் செவ்வாய்க்கிரகத்தின் தன்மை கொண்டவர்கள்.

செவ்வாய்த்தன்மையவர்களின் தலை சற்று சிறியதாக தோன்றும், வட்டமான முகம், விரிந்த கண்கள், சிவப்பு நிறமான உடல், சிறிய காதுகள், பெரிய மூக்கு, குட்டையான கால்கள், கட்டுமஸ்தான உடலமைப்பு இவையெல்லாம் ஒன்று சேர்ந்து இவர்களை செவ்வாய்த்தன்மையர்கள் என்று காட்டிக்கொடுத்து விடும். செவ்வாய்த்தன்மையர்கள் தைரியசாகக்காரர்கள். எந்த ஆபத்தான நிலைமையிலும் தைரியமாக சமாளிப்பார்கள். பிடிவாதக்காரர்கள். எதையும் துணிவுடன் செய்பவர்கள்.

சண்டைக்காரர்களானாலும் நியாயம் தவறாதவர்கள். அதிகமாக பூசிப்பவர்கள். நண்பர்களுடன் எப்பொழுதும் சேர்ந்தே இருப்பவர்கள். இவர்களில் சிலர் படைவீரர்களாகவோ பொலிஸ் உத்தியோகத்தர்களாகவோ இருப்பர். சிலர் தச்சுவேலை, இரும்புவேலை முதலியன செய்து சீவிப்பர். இன்னும் சிலர் திறமையாக சத்திரசிகிச்சை செய்யக்கூடிய மருத்துவர்களாகவும் இருப்பர். சிலர் மிக்க அறிவாளிகளாகவும் வேதாந்திகளாகவும் திகழ்வர்.

இவர்களுக்கு அவ்வப்போது காய்ச்சல், இரத்தக்கொதிப்பு போன்ற நோய்கள் வரக் கூடும்.

### புதன் ஆட்சி பெற்றவர்கள் (மாநிறமான மச்சம்)

எவருடைய உடல் மீதுள்ள மச்சங்கள் மாநிறமாக இருக்குமோ அத்தகையவர் புதனின் தன்மையர் என முடிவு செய்ய வேண்டும்.

எடுப்பான நெற்றியும் நீண்டமுகமும் சிறிய மூக்கும் கொண்டவர்கள். கைகளும் உடல்களும் நீண்டிருக்கும். புதனின்தன்மையர்கள், மிக்க அறிவாளியாக திகழ்வார்கள். கணிதம், சாஸ்திரம் இவைகளை நன்கு கற்றறிந்தவர்கள், எப்பொழுதும் இலக்கண, இலக்கியம் சம்பந்தமான எண்ணங் களுடன் ஆராய்ச்சியுடனும் காலம் கழிப்பார்கள்.

இவர்களுக்கு நரம்புகள் சம்பந்தமான நோய்கள் வரக்கூடும். அறிவும் குணமும் ரூபமும் செல்வமும் சமமாக உள்ள பெண்களுடன் இளம் வயதிலேயே திருமணம் நடந்து விடும். இவர்களில் சில உத்தியோகங்களில் நன்கு விளங்குவார்கள். இவர்களில் சிலர் பல புத்தக ங்களை எழுதி அதன் மூலம் வருவாய் பெறுப வர்களாகவும் இருப்பர்.

மற்றும் சிலர் பத்திரிகைகளுக்கு செய்திகளை அனுப்புபவர்களாகவோ கதை, கட்டுரைகளை அனுப்புபவர்களாகவோ ஜீவனம் செய்வர். புத்தகங்களை அச்சிட்டோ அல்லது மற்றவரிடம் வாங்கியோ விற்பனை செய்யும் புத்தக வியாபாரிகளும் இந்தப் புதனின் தன்மையை சேர்ந்தவர் உண்டு.

சீடர்களுக்கு வேதாந்த உபதேசம் செய்து சிஷ்யார்ஜனம் செய்யும் மடாதிபதிகளும் சிலர் இருக்கக்கூடும்.

### குரு ஆட்சி பெற்றவர் (நீல நிற மச்சம்)

எவருடைய தேகத்தில் நீல நிற மச்சங்கள் அதிகளவில் இருக்குமோ அவர்கள் குரு (வியாழன்) கிரகத்தின் தன்மையுள்ளவர்கள் என்று முடிவு செய்ய வேண்டும்.

அத்தகையவர்களிடம் குரு கிரகத்திற்கு ஜோதிட சாஸ்திரத்தில் கூறியுள்ள உருவம் சுபாவம் முதலியன காணப்படும். இவர்களது உடல் உயரமாகவும் உயரத்திற்கு தக்கபடி புஷ்டியாகவும் இருக்கும். பரந்த நெற்றியும் நீண்ட மூக்கும் அகன்ற வாயும் இருக்கும். உருவத்தில் பெரிய தலையும் நீண்ட மூக்கும் வட்டமான தாடைகளும் இவர்களுக்கு உண்டு.

இந்த குருத்தன்மையுள்ள நபர்கள் சற்று கர்வம் படைத்தவர்கள். உலக விவகாரங்களை திறம்பட செய்யும் ஆற்றலிலுள்ள நவீன நாகரிகத்திற்கு அதிக இடம்தராமல் பழைய பண்பாட்டையே பேணி வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

தெய்வபக்தியும் தானம் செய்யும் தன்மையும் இயற்கையாக பெற்றவர்கள். அவர்களில் பலர் பிறவியிலிருந்தே பணக்காரர்களாக திகழ்ந்து பிறந்து தனது திறமையால் மேலும் பணம் ஈட்டி வாழ்க்கையை நன்கு வகுத்துக் கொள்வார்கள்.

இவர்களுக்கு பித்தத்தினால் சில நோய்கள் வரக்கூடும். பணத்திலும் குணத்திலும் சமமான மனைவியை காலத்தில் மணந்திருந்தாலும் கணவன்-மனைவி இடையே ஒற்றுமை குறைவாகி மனம் வருந்துவர்.

கல்வி நிலை யங்களில் ஆசிரியராக பணியாற்றுபவரும் புராண பிரசங்கங்கள் செய்பவரும் சிலர் இருக்கக்கூடும்.

### சுக்கிரன் ஆட்சி பெற்றவர் (மஞ்சள் நிற மச்சம்)

எவருடைய உடலின் மீது மஞ்சள் நிறமான மச்சம் அதிகமாக இருக்குமோ அத்தகையவர்களை சுக்கிரன் கிரகத்தின் தன்மையுடையவர்களாக முடிவு செய்ய வேண்டும்.

நீண்ட கழுத்தும், முகமும் எடுப்பான நெற்றியும் வட்டமான கண்களும் உள்ளவர்கள் சுக்கிரன் தன்மையர். உடல் வெளுப்பாக இருக்கும். இவர்களிடம் ஆண்மை தனத்தை விட பெண்மைத்தனம் அதிகளவில் காணப்படும். எல்லோரையும் தன்பக்கம் இழுக்கக்கூடிய அழகிய மேனியர் இவர். இவர்கள் எப்பொழுதும் அழகாக தம்மை அலங்காரம் செய்து கொள்வதில் விருப்பம் காட்டுவார்கள். காம உணர்ச்சி அதிகமானவர்களாகையால் அதற்காக காலத்தையும் பணத்தையும் அதிகமாக செலவு செய்பவர்கள். இவர்களுக்கு இளமையிலேயே தக்க குணவதியும் அனுகூலவதியுமான மனைவி கிடைப்பாள். கணவன்-மனைவியிடையே அன்பும் பாசமும் நிலவும். இவர்களில் பலர் நாடகங்கள், சினிமாக்கள் முதலிய தொழில்களை திறம்பட நடத்தி அதன் மூலம் நன்கு பணம் சம்பாதிப்பவர்கள்.

மற்றும் சிலர் பெண்களுக்கு தேவையான சில அலங்கார பொருட்களை கொண்டு வியாபாரம் செய்பவர்கள். சித்திரங்கள் தீட்டி அத்துறையில் புகழ்பெற்று பணம் ஈட்டுபவர்களும் உண்டு. இவர்களில் பலருக்கு சங்கீதம் நன்றாக தெரியும். சிலர் அதன் மூலம் வாழ்க்கையையும் நடத்தக்கூடும். சிலர் போன்ற தொழில்களை செய்வர். ராமா, சினிமா நடிகர்களும் சிலர் இந்த சுக்கிரத்தன்மையர் இருப்பர்.

### சனி ஆட்சி பெற்றவர் (கறுப்பு நிற மச்சம்)

எவருடை தேகத்தின் மீதுள்ள மச்சங்கள் கறுப்பாக இருக்கின்றனவோ அவர்கள் சனி பகவானின் தன்மை மிக்கவர்கள் என்று முடிவு செய்ய வேண்டும்.

இவர்களுடைய உடல் உயரமாக இளைத்துக் காணப்படும் காதுகள் உருவத்தில் பெரிதாக இருக்கும். நீண்ட முகமும் பள்ளம் விழுந்த தாடையும் சிறிய கண்களும் மெல்லிய கழுத்தும் அகன்ற வாயும் மூக்கும் சனிக்கிரக தன்மையருக்கு இருக்கும்.

வாழ்க்கையில் சுகம் என்பது இவர்களுக்கு இருப்பது அரிது. வசதிகள் இருப்பினும் எதையோ கொள்ளையிட்டவர்கள் போல் துக்கம் தோய்ந்த முகத்துடனே இருப்பர். பிறரை தாம் வெறுப்பது போல பிறராலும் தாமும் வெறுக்கப்படுவர். ஒவ்வொரு சமயம் தம்மைத்தாமே வெறுத்துக் கொண்டு தற்கொலை செய்து கொள்ளவும் துணிவு கொள்வார்கள். எதையும் வேகமாக செய்யும் குணம் இவருக்கு இருக்காது. எதிலும் மந்தக்குணம் படைத்தவர்கள் சோம்பேறிகள் என பெயர் பெற்று வெறுக்கப்படுவார்கள்.

இவர்களில் பலர் பயிர்த்தொழில் செய்து ஜீவனம் செய்வார்கள். அலுவலகங்களிலும் தொழிற்சாலைகளிலும் சேவகம் புரிபவர்களும் சிலர். சுரங்கங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களும் சிலர் இருப்பர். பொதுவாக சனித்தன்மை உடையவர்கள் உடல் உழைத்து ஊதியம் பெறும் நபர்களாக இருப்பர். (முற்றும்)

# இளைஞர்களின் அரசியல் எதிர்காலத்துக்கு வேட்டு

## அரசை சாடுகிறார் சஜித்

(கொழும்பு)

இளைஞர்களின் அரசியல் எதிர்காலத்தை சூன்யமாக்க அரசாங்கம் முயற்சித்து வருவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அண்மையில் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட தேர்தல் தொடர்பான சட்டமூலம் சாதகமானதல்ல. எனது தந்தையின் காலத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் 40 வீதம் இளைஞர்களின் பங்களிப்பை உறுதி செய்ய வேண்டுமென வலியுறுத்தியிருந்தார்.

இதற்கான சட்டங்களும் இயற்றப்பட்டிருந்தது. எனினும் தற்போதைய அரசாங்கம் தேர்தல்களில் இளைஞர்கள் பங்கேற்பது தொடர்பில் புதிய சட்டத்தில் குறிப்பிடவில்லை.

இதன்மூலம் இளைஞர்களின் அரசியல் எதிர்காலம் சூன்யமாக்கப்படக்கூடிய அபாயம் நிலவுகின்றது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# தூக்குத்தண்டனை விதித்தாலும் பேரணியில் கலந்து கொள்வேன்

## ரங்கே எம்.பி. உறுதி

(கொழும்பு)

தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டாலும் ஐக்கிய பிக்குகள் முன்னணியினால் ஒழுங்கு செய்யப்பட்ட பேரணியில் கலந்து கொள்வதனை தடுக்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

தனியாக இந்த பேரணியில் பங்கேற்கப் போவதில்லை எனவும் கட்சி ஆதரவாளர்களுடன் இணைந்து கலந்து கொள்ளப் போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பேரணியில் கலந்து கொள்ளக் கூடாது என கட்சி விதித்துள்ள தடை உத்தரவினை தாம் ஏற்றுக்கொள்ள போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆட்சி தொடர்ந்தும் நீடிக்க வேண்டுமென விரும்பும் தரப்பினரே நாளை வியாழக்கிழமை நடைபெறும் போராட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சி கலந்து கொள்ளக்கூடாது என தடை விதித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

73




கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

# நிசங்கமல்லன்

### நிசங்கமல்லன்

பராக்கிரமபாகுவின் பின்னர் இலங்கையின் அரசாட்சி சிறப்பானதாக அமையவில்லை. பராக்கிரமபாகுவின் சகோதரியின் மகனும், சிறந்த அறிவாளியும் கவிஞனுமாகிய அவனது மருமகனும் விஜயபாகு II (பண்டித விஜயபாகு) என்ற நாமத்துடன் அரசகட்டிலேறினான். அரச வாரிசாக இவன் இருந்தபோதும் ஆரம்பத்தில் இவன் கலிங்க வாரிசாக இருந்தமையால் இவனுக்கும் எதிராகவே அமைச்சர்களும் பிரதானிகளும் விளங்கினர். எனினும் அந்த எதிர்ப்புகளை அடக்கி வெற்றி கொண்ட விஜயபாகு புலத்திநகரிலிருந்து ஆட்சி செலுத்தினான். பௌத்தமத வளர்ச்சிக்குப் பல தொண்டாற்றினான். ஓராண்டு காலம் விஜயபாகுவின் நல்லாட்சி நிலவியது. (கி.பி 1186- கி.பி 1187) விஜயபாகுவின் நண்பனாகப் பழகிய கலிங்கதேசத்தவனான மகிந்தன் என்பவன் தீபாணி என்பவனோடு சேர்ந்து சதி செய்து மன்னனைக் கொன்று 5 வது மகிந்தனாக அரசனானான். (கி.பி1187) ஆனால், அவனால் ஆக ஐந்து நாட்கள் மட்டுமே அரசாளமுடிந்தது. படைத்தளபதி, அமைச்சர்கள், பிரதானிகளின் ஆதரவோடு அவன் அரசனாக முயற்சிக்கவில்லை. அதனால் ஐந்தாம் நாளே தூக்கி எறியப்பட்டான்.




நிசங்கமல்லனால் கட்டப்பட்ட வட்டதாகே சைத்தியம்

### நிசங்கமல்லன்

அவனின் பின்னர் கலிங்க நிசங்கமல்லன் (கி.பி 1187- கி.பி1196) என்பவன் ஆட்சி பீடமேறினான். கலிங்க மன்னர்களுள் மிகவும் பெருமைக்குரியவனும் புகழ்பெற்றவனும் நிசங்கமல்லன் ஆவான். பொலநறுவை மன்னர்களுள் கடைசிச் சிங்கள மன்னன் இவனே. கி.பி. 1187 ஆம் ஆண்டு பொலநறுவைச் சிம்மாசனத்தில் அமரந்த நிசங்கமல்லனின் ஆட்சி 9 ஆண்டுகள் மட்டுமே நிலைத்ததாயினும் அக்குறுகிய காலத்துள் அவன் தன் பெயரை நிலைநாட்டக் கூடிய பணிகளை ஆற்றியுள்ளார். அவனது பெருமைகளைச் சூளவம்சம் ஏனோ சில செய்யுள்களுள் அதுவும் சமயப் பணிகளைப்பற்றி மட்டும் கூறிச் சென்றுள்ளது. ஆனால், அவன் பொறித்துவிட்டுச் சென்றுள்ள ஏராளமான கல்வெட்டுக்கள் அவன் பெருமைகளை எடுத்தியம்புகின்றன. இலங்கையில் மிக அதிகமான கல்வெட்டுக்களை விட்டுச் சென்றுள்ள மன்னர்களில் முதன்மையானவன் நிசங்கமல்லனாவான். பொலநறுவையிலுள்ள கல்பொத்த (கல்புத்தகம்) இவற்றில் முக்கியமானதாகும். நீண்ட பெரும் கல்லொன்றில் சாசனம் பதியப்பட்டுள்ளது.

இவன் கலிங்க தேசத்தியத்தின் சிங்கபுரத்தைச் சேர்ந்தவன். ஸ்ரீஜய கோபமகாராஜா பார்வதி மாதேவி தம்பதியின் புதல்வனாவான். மகா பராக்கிரமபாகு வாரிசில்லாமல் மரணமடைந்தான். அதன்பின்னர் அவனது மருமகன் முறையிலானான நிசங்கமல்லன் உரிமை கோரி ஆட்சிப் பீடமேறினான். விவாக உறவின் மூலம் பராக்கிரமபாகுவின் மருமகனாகினான். மகாபராக்கிரமபாகுவின் பின்னர் இலங்கையைச் சிதறவிடாது பாதுகாத்தவன் நிசங்கமல்லனாவான். நிசங்கமல்லனின் சமயப் பணிகளைக் குறிப்பிடும் அவனால் கட்டப்பட்ட சைத்தியங்கள் என ரன்கொத்விகாரை, வட்டதாகே சைத்தியம் என்பனவாம். நிசங்கமல்லன் கட்டுவித்த ஏனைய கட்டிடங்களாக நிசங்கலதா மண்டபம், நிசங்கலதா சபாமண்டபம், ஏழு மாடிகளைக் கொண்ட சத்மகல் பிரசாதய என்பனவுள்ளன. அவன் சில காலம் புலத்திநகரிலிருந்து ஆட்சி செலுத்தினான். புத்ததாதும் ஜயகலமும் வைப்பதற்காக ஒரு சைத்தியம் கட்டுவித்தான். ஒன்பது ஆண்டுகள் அமைதியாகவும் சிறப்பாகவும் ஆட்சி புரிந்து மரணமானான்.



நிசங்கமல்லன் அமைத்த கல்புத்தகம்

### நிசங்கமல்லனின் பின்னர்

அவன் பின்னர் அவனது ஒரு மகனான வீரபாகு என்பவன் ஆட்சிப்பீடமேறினான். ஒரு நாளில் தன் ஆட்சியைத் தன் சகோதரனான விக்கிரமபாகு என்பவனிடம் பறிகொடுத்தான். அவனாலும் மூன்று மாதங்களே ஆட்சியை வைத்திருக்க முடிந்தது. அவனிடமிருந்து ஆட்சியை நிசங்கனின் மைத்துனனாகிய சோழகங்கன் என்பனிடம் பறிகொடுத்தான். சோழகங்கன் ஒன்பது மாதங்கள் ஆட்சி செலுத்தினான் என்கிறது சூளவம்சம்.

கீர்த்தி என்ற சேனாதிபதி மன்னனைக் கைது செய்து அவனது விழிகளை அகற்றிக் கொன்று விட்டு மகாபராக்கிரமபாகுவின் மனைவியான லீலாவதியின் உதவியுடன் மூன்றாண்டுகள் ஆட்சி புரிந்தான். (கி.பி.1197-கி.பி1200) லீலாவதி பாண்டியத் தொடர்புடையவள். அதனால் கலிங்க குலத்தவர் எதிர்த்தனர். அவர்கள் நிசங்கமல்லனின் சகோதரன் சாகசமல்லனை அரசனாக்கினர். அவன் இரண்டாண்டுகள் அரசனாக விளங்கினான். அவன் பின்னர் படைகளின் தலைவனாக விளங்கிய ஆயாசமன்தன் என்வபன் நீதியாகவும் சட்டப்படியும், கீர்த்தி நிசங்காவின் மனைவியான கல்யாணவதியின் துணையுடன் ஆறு ஆண்டுகள் ஆட்சி புரிந்தான்.

ஆயாசமன்தின் பின்னர் தர்ம அசோகன் என்ற இளவரசன் பொம்மை அரசனாகக்கொண்டு ஓராண்டு ஆட்சி புரிந்தான். அவன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது மூன்று மாத குழந்தையாக இருந்தான். அவ்வேளை சோழநாட்டிலிருந்து படையெடுத்துவந்த அனகங்கன் என்பவன் இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொண்டான். அதன்பின்னர் பதினேழு நாட்கள் மட்டுமே ஆட்சி புரிய அவனால் முடிந்தது. ஏனெனில் அனகங்கனின் தளபதியான கலுநாகன் அரசனைக் கொன்றுவிட்டு, மகா பராக்கிரமபாகுவின் மனைவியான லீலாவதியின் துணையுடன் (முன்னரும் ஒரு தடவை ஆண்டவள்) ஓராண்டு ஆட்சி செலுத்தினான். அவ்வேளை தென்னிந்தியாவிலிருந்து தமிழர்படையுடன் வந்த லோகிசாரன் என்ற மன்னன் இலங்கையைக் கைப்பற்றி புலத்திநகரிலிருந்து ஒன்பது மாதங்கள் அரசாண்டான்.

(தொடரும்)



நிசங்க மல்லன் காலத்து வெள்ளி நாணயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிநீருக்காக 2 கிலோ மீற்றர் தூரம் நடக்கும் ஊரணி மக்கள்

(யாழ்ப்பாணம்)

**குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக 2 கிலோ மீற்றருக்கு நடந்து செல்ல வேண்டியுள்ளதாக புத்தூர் கிழக்கு (ஜே/278) ஊரணி மக்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.**

குறித்த பகுதியில் சுமார் 75 குடும்பங்கள் தற்போது வசித்து வருகின்றனர். இந்தப் பிரதேசம் கடலையண்டிய பிரதேசமாக இல்லாவிடினும் குடிமனைகளையண்டிய பகுதிகளில் சதுப்பு நிலங்கள் காணப்படுவதனால் நிலத்தடி நீரை குடிப்பதற்கு பயன்படுத்த முடியாதுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

தமது குடிநீர் தேவையை பூர்த்தி செய்யுமாறு பல தரப்பட்டவர்களிடமும் வேண்டுகோள் விடுத்தும் இதுவரை எந்தப்பயனும் இல்லை எனவும் தெரிவித்தனர்.

கடந்த 2011 ஆம் ஆண்டு முற்பகுதியில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் குறித்த பகுதிக்கு குழாய் மூலம் குடிநீர் வழங்குவதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஆனால், இன்றுவரை குழாய் மூலம் நீர் வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட பணியுடனேயே அந்த வேலைத்திட்டம் உள்ளது.

இது தொடர்பில் எந்த அதிகாரிகளும் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை.

மேலும் குறித்த பகுதியில் வாழும் மக்கள் கூலி வேலை செய்வதையே தமது பிரதான தொழிலாக கொண்டுள்ளனர்.

குடும்பத்தலைவர்கள் மற்றும் ஆண்கள் தொழில் நிமித்தம் சென்று விட்டால் வீட்டிலுள்ள பெண்களே சுமார் 2 கிலோ மீற்றர் வரை நடந்து சென்று தண்ணீர் எடுத்து வருகின்றனர்.

குறித்த தண்ணீர் தொட்டியிலும் போதுமானளவு நீர் இருப்பதில்லை எனவும் முற்பகல் 10 மணிக்குப் பின்பு சென்றால் தண்ணீர் எடுக்க முடியாது எனவும் அப்பகுதி மக்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

குடாநாட்டில் யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின்பு பல அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுவதாக கூறப்படுகின்ற போதும் பல பிரதேசங்களில் இவ்வாறான அவல நிலைகள் தொடர்கதையாகவுள்ளதை மறுக்க முடியாது. (அ-6)

## பிரதேச சபைகளுக்கு குடிநீர் பவுசர்கள்

(மல்லாவி)

முல்லை.மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேச சபைகளுக்கான நீர்த்தாங்கி பவுசர்கள் பிரதேச சபை தவிசாளர்களிடம் முல்லை.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கையளித்தார்.

இந் நீர்த்தாங்கி பவுசர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முல்லை.மாவட்ட அரச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளது. இதில் துணுக்காய்,மாந்தை கிழக்கு, புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச சபைகளுக்கான நீர்த்தாங்கி பவுசர்களே கையளிக்கப்பட்டுள்ளன.

இவை கடும் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள இப்பிரதேச மக்களுடைய குடிநீர்த் தேவையினை பூர்த்தி செய்ய பெரிதும் உதவும் என இந்நீர்த்தாங்கிகளைப் பெற்றுக் கொண்ட பிரதேச சபை தவிசாளர்கள் கருத்து தெரிவித்தனர். (அ-3-15)

# நாட்டில் அநீதி ஏற்படும்போது தட்டிக் கேட்காத பேரினவாதிகள்

## கொழும்பு மாநகரசபை உறுப்பினர் குற்றச்சாட்டு

(பூந்தோட்டம்)

தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை மதிக்காத கட்சிகள் பிரிவினை பற்றி கவலைப்பட்டு அறிக்கை விடுவது கேலிக்கூத்தானதும் ஏற்றுக்கொள்ள முடியாததும் ஆகும் என ஜனநாயக மக்கள் முன்னணி ஊடக செயலாளரும் கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான சி.பாஸ்கரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், போர் முடிந்த மூன்று வருட காலத்தில் அரசியல் தீர்வு பற்றியோ அன்றேல் மக்களின் அடிப்படை தேவைகள் பற்றியோ இல்லையேல் வாழ்வாதார பிரச்சினைகள் பற்றியோ சிந்திக்காத அரசு, அரசு சார்ந்த இனவாதக் கட்சிகள் இன்று கூட்டமைப்பு இந்தியா சென்றதைப் பற்றி கூக்குரலிடுவது எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாது.

வடமாகாணத்தில் அண்மைக் காலங்களில் நடைபெற்ற அகிம்சை போராட்டங்களில் எமது கட்சி உட்பட பங்குபற்றிய கட்சி அங்கத்தவர்கள் மீதும், மக்கள் மீதும் கழிவு எண்ணெய் ஊற்றி தாக்குதல், வாகன தாக்குதல் மற்றும் மக்களை பலவந்தமாக காடுகளில் அடிப்படை வசதிகளற்ற நிலையில் மீள் குடியேற்றம் என நிர்க்கதி நிலையில் விட்டமையுடன் சிறைக்கைதிகளை விடுதலை செய்யக்கோரிய போது உயிரை விடுதலை செய்து விண்ணுலகம் அனுப்பியமை போன்ற வேளைகளில் கூட ஓர் அறிக்கையோ இல்லையேல் நாட்டு ஒற்றுமை பற்றியோ ஒரே மக்கள் என்றோ சிந்திக்காமல் வேற்றாத்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொண்ட பெரும்பான்மை இனவாத கட்சிகள் இன்று கூட்டமைப்பு இந்தியா சென்றபோது மாறி மாறி அலறி அடித்துக்கொண்டு அறிக்கை விடுவது எதற்காக?

அண்மையில் கூட்டமைப்பை பயன்படுத்தி பிரிவினைக்கு இந்தியா முயற்சி என குணதாச அமரசேகரவும் இந்தியாவுடன் ஜனாதிபதிக்கு இரகசிய உடன்படிக்கையின் விளைவே கூட்டமைப்பின் விஜயம் என ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவும் தெரிவித்த கருத்துக்கள் எதற்காக என்ன தேவைக்காக இலங்கையில் ஐக்கியமாக வாழ்வதற்கு சகல வழிகளில் தமிழ் மக்கள் சம்பந்தமாக உள்ளனர் என்ற செய்தியை மேதினத்தன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் தேசியக்கொடியை தூக்கிக் காட்டிய பின்னராவது இவர்கள் உணர்ந்து தமிழ் மக்களும் எமது நாட்டு மக்கள் என்ற தோரணையில் நடந்து கொண்டிருக்க வேண்டும்.

இல்லையேல் அரசை வழிப்படுத்தி இருக்க வேண்டும். அதை விடுத்து இன்றுகூட அடிப்படை வசதிகள் கூட செய்யாமல் மீண்டும் மீண்டும் இனவாத, மதவாதக் கருத்துக்களை தெரிவித்து மக்களை மேலும் மேலும் மீளாத் துயரத்தில் தள்ளாமல் இருப்பதே இவர்கள் இலங்கைக்குச் செய்யும் நன்மை பயக்கும் செயல் என தெரிவித்தார். (அ-2-266)

# பல்கலை.மானியங்கள் ஆணைக்குழு வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை

## பேராசிரியர் ஒன்றியம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளதாக பல்கலைக்கழக பேராசிரியர் ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணப்பாடுகளுக்கு அமைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சில சுற்றுநிருபங்களை இதுவரையில் வாபஸ் பெற்றுக்கொள்ளவில்லை என பல்கலைக்கழக பேராசிரியர் ஒன்றியத்தின் தலைவர் டாக்டர் நிர்மல் ரஞ்சித் தெவ்சிறி தெரிவித்துள்ளார்.

வாக்குறுதிகளின் அடிப்படையிலேயே கடந்த வியாழக்கிழமை பேராட்டத்தை கைவிட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். பல்கலைக்கழக பேராசிரியர்கள் வேறு பணிகளில் ஈடுபடுவதனை தடுக்கும் வகையில் வெளியிடப்பட்டிருந்த சுற்றுநிருபம் வாபஸ் பெற்றுக் கொள்ளப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சுற்றுநிருபமானது பல்கலைக்கழக பேராசிரியர்களின் சுதந்திரத்தை மீறும் வகையில் வெளியிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த சுற்றுநிருபத்தை வாபஸ் பெற்றுக் கொள்ளுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு உயர்கல்வி அமைச்சின் செயலாளர் எழுத்து மூல கோரிக்கை விடுத்துள்ளார்.

எனினும் இதுவரையில் சுற்றுநிருபம் வாபஸ் பெற்றுக்கொள்ளப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மூன்று மாதத்திற்கான சம்பளங்களும் இன்னமும் உறுதி அளிக்கப்பட்டதனைப் போன்று வழங்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

வாக்குறுதிகள் உரிய முறையில் நிறைவேற்றப்படாவிட்டால் மீளவும் தொழிற்சங்கப் போராட்டங்களை நடத்த நேரிடும் என நிர்மல் ரஞ்சித் தெவ்சிறி குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## கணித பாட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. (சா/த) பரீட்சை கணித பாட செயலமர்வு எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமையன்று காலை 9.30 மணி தொடக்கம் 12.30 மணிவரை நடைபெறவுள்ளது.

சைவ பரிபாலன சபையினால் நடத்தப்படும் சைவ சமய பரீட்சையைத் தொடர்ந்து பி.ப. 1.30 மணியிலிருந்து க.பொ.த. (சா/த) கணித பாடத்துக்குரிய செயலமர்வு திட்டமிட்டபடி நடைபெறும் என வடமாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) க.கிருபாகரன் அறிவித்துள்ளார். (அ)





யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் இவ்வாண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கான கௌரவிப்பு விழா அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் சு.சிவபாத சுந்தரம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தேசியக் கொடியேற்றுவதையும் அருகில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரன் நிற்பதையும் பாடசாலையின் அதிபர் உரையாற்றுவதையும் கௌரவிக்கப்பட்ட மாணவர்களுடன் விருந்தினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தின் கடன் எல்லை 6 ஆயிரம் கோடியை எட்டுகிறது

இவ்வாண்டின் அரசாங்கத்தின் கடன் எல்லையை ஆறாயிரம் கோடி ரூபாவினால் அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

முப்படை, இலங்கை மின்சாரசபை மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஆகியவற்று க்கு செலுத்த வேண்டிய கடனுக்காக ஆறா யிரம் கோடி ரூபாவுக்கு திறைசேரி கடன் பத்திரங்களை விநியோகிப்பதே அரசின் கடன் எல்லையை அதிகரிப்பதற்கு காரணமாகியு ள்ளது.

இந்நிலையில் பெற்றோலிய கூட்டுத்தாப னத்துக்கு முப்படையினர் வழங்க வேண்டிய கடனுக்காக 950 கோடி ரூபாவுக்கும் இல ங்கை மின்சார சபையினால் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு வழங்க வேண்டிய கட னுக்காக 50, 50 கோடி ரூபாவுக்கும் திறை சேரியின் கடன் பத்திரங்கள் விநியோகிக்கப் படவுள்ளன.

அந்த வகையில் இவ்வாண்டின் அரசா ங்கத்தின் கடன் எல்லை ஒரு இலட்சத்து 13 ஆயிரத்து 900 கோடி ரூபாவிலிருந்து ஒரு இலட்சத்து 19 ஆயிரத்து 900 கோடி ரூபா வாக 6 ஆயிரம் கோடி ரூபாவினால் அதி கரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு சமனாக அரசாங்கத்தின் மொத்தச் செலவீனம் 2 இலட்சத்து 19 ஆயிரத்து 400 கோடி ரூபாவிலிருந்து 2 இலட்சத்து 25 ஆயிரத்து 400 கோடி ரூபாவாக 6 ஆயிரம் கோடி ரூபாவினால் அதிகரிக்கப்படுகின்றமை குறிப் பிடத்தக்கது. (அ-2)

# கற்பிட்டி உச்சிமுனை தீவில் 450 ஏக்கரில் ஹோட்டல்

(கொழும்பு)

கற்பிட்டி உல்லாசப் பயணத்துறை வலயத் துக்குட்பட்ட உச்சிமுனை தீவின் சுமார் 450 ஏக்கர் நிலப்பரப்பில் நட்சத்திர ஹோட்டலொ ன்றை அமைக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் குறித்த நிலப்பரப்பினை 107 கோடி ரூபாவுக்கு 99 வருட குத்தகைக்கு விட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வரையறுக்கப்பட்ட செயார் பே ரிசோர்ட் (தனியார்) நிறுவனத்தினால் மேற்படி ஹோட் டல் நிர்மாணிக்கப்படவுள்ளது. இந்த விடுதி நிர்மாணத்துக்காக மேற்படி நிறுவனத்தினால் 16 கோடி அமெரிக்க டொலர்களை செலவிட அந்நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் சுமார் 810 உல்லாசப் பயண அறைகளை கொண்ட ஸ்பா ஹோட்டலொன்றும் அதிசொகுசு வாய் ந்த அறைகள் 150 அடங்கிய 5 நட்சத்திர ஹோட்டலொன்றும் 150 அறைகள் கொண்ட களப்பு பிரதேச விலா ஹோட்டலொன்றும் கொல்ப் விளையாட்டு மைதானமொன்றும் இந்த ஹோட்டல் நிர்மாணத்துக்குள் உள்ளட ங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

## விஜித ஹேரத்திற்கு சொந்தமான

# மடிக்கணனியை நீதிமன்றில் ஒப்படைக்குமாறு உத்தரவு

(கொழும்பு)

விஜிதஹேரத்திற்கு சொந்தமான மடிக் கணனியை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு கடுவலை நீதவான் லங்கா ஜயரத்ன உத்தர விட்டுள்ளார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் விஜித ஹேரத் வசித்து வந்த போரே காஹந்தொட்ட பிரதேசத்தில் உள்ள வீட்டை உடைத்து மடிக் கணனி மற்றும் இரண்டு கையடக்கத் தொலைபேசிகளை கொள்ளையிட்டதாக நீதிமன்றத்தில் குற்றம் சுமத்தப்பட்ட சந்தேக நபர் தான் அந்த குற்றத்தை செய்யவில்லை என நீதிமன்றத்தில் தெரிவித்ததை கவனத் தில் எடுத்துக்கொண்ட நீதவான் இந்த உத் தரவை பிறப்பித்துள்ளார்.

கொள்ளைச்சம்பவம் இடம்பெற்று நீண்ட காலத்திற்கு பின்னர் சந்தேக நபர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தார்.

அத்துருகிரிய போரே காஹந்தொட்ட பிரதேசத்தில் வசித்து வந்த விஜித ஹேரத் 2010 ஆம் ஆண்டு செப்டெம்பர் 7 ஆம் திகதி நாடாளுமன்ற கூட்டத்தில் கலந்து கொள்ள சென்று விட்டு வீடு திரும்பிய போது வீட்டின் கதவுகள் உடைக்கப்பட்டு வீட்டில் இருந்த அலுமாரி ஒன்றை திறந்து அதில் இருந்த மடிக்கணனி மற்றும் இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் திருடப்பட்டுள்ளதாக அத்து ருகிரிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினருக்கு சொந்த மானது எனக் கூறப்படும் மடிக்கணனியை வழக்கு பொருளாக பொலிஸ் நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்த போதிலும் பின்னர் அதனை நாடாளுமன்ற உறுப்பினருக்கு வழங்க நடவ டிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

சந்தேக நபரின் விளக்கத்தை கவனத்தில் எடுத்து கொண்ட நீதவான் மீண்டும் மடிக் கணனியை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டதுடன் சந்தேக நபரை அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி நீதி மன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட் டார். (அ-2)

## ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில்

# தேசிய டிப்ளோமா சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆயிரத்து 39 ஆசிரியர்களுக்கு கற்பித்தலில் தேசிய டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை டி.கே.டபிள்யூ கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் காலை அமர்வின் உரையினை விருந்தினராக வருகை தரவுள்ள கொழும்பு பல்கலைக்கழக கல்விப்பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் சோ.சந்திரசேகரம் ஆற்றவுள்ளார். மாலை அமர்வின் உரையினை விருந்தினராக வருகைதரவுள்ள மகரகம தேசிய கல்வி நிறுவக உதவிப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி டி.ஏ.ஆர்.ஜே.குணசேகர நிகழ்த்தவுள்ளார். (அ-2)



வடமாகாண கல்வி அமைச்சில் சரஸ்வதி பூசை ஆரம்ப நிகழ்வு வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நேற்று நடை பெற்றதை படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

# ஒரு பாலத்திற்கு இரண்டு தரம் அடிக்கல் நாட்டுகின்றனர்

## ஆசியாவின் அதிசயம் இதுதானோ – அரியம் எம்.பி.

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் மண்முனைத்துறைப் பால த்திற்கு அடிக்கல் நாட்ட முன்னர் அமைச்சர் முரளிதரன் வந்தார். நேற்றையதினம் அமைச் சர் பசில் ராஜபக்ஷ வந்துள்ளார். இன்னுமொரு நாள் ஜனாதிபதியின் ஆலோசகரோ அல்லது நாமல் ராஜபக்ஷவோ வந்து அடிக்கல் நாட்டி னாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை என கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பி னர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மண்முனைத்துறை போக்கு வரத்திற்கு பாலம் கட்டுவதற்கான ஆரம்ப பணிகளுக்கு அடிக்கல் நாட்டுவிழாவிற்கு நேற்றைய தினம் அமைச்சர் பசில் ராஜபக்ஷ வருகை தந்துள்ளார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த போதே பாராளுமன்ற உறுப்பினர் பா.அரிய நேத்திரன் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

மட்டக்களப்பு மண்முனை போக்குவரத் திற்கு பாலம் கட்டுவதாக கூறி நேற்றைய தினம் இரண்டாவது தடவையாக அரசாங்கம் அடிக்கல் நாட்டுவிழா நடாத்துவது வேடிக் கையாகவுள்ளது. அரசாங்கமும் அரசாங் கத்தின் அமைச்சர்களும் மண்முனை பால த்தை வைத்து அரசியல் செய்கின்றார்கள்.

கடந்த 1978 ஆம் ஆண்டு அப்போது அமைச்சராக இருந்த இராசதுரையினால் மண்முனைத்துறை பாலத்திற்கான முதலா வது அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றது. பின்னர் தமிழர்களின் போராட்டம் காரணமாக அது கைவிடப்பட்டிருந்தது. அதன் பின்னர் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக உருவான பாதிப்புகளை கருத்திற்கொண்டு ஜப்பான் அரசாங்கத்தினால் மண்முனைத் துறைப் பாலத்திற்கான நிதி ஒதுக்கீடு செய் யப்பட்டிருந்தது.

ஆனால் மேற்படி பாலத்திற்கு தாங்கள் தான் நிதியொதுக்கியது போன்று அரசாங் கத்தின் பிரதியமைச்சர் முரளிதரன் கிழக்கு மாகாண சபை தேர்தல் பிரசாரத்திற்காக அண்மையில் அவசர அவசரமாக மண் முனைத்துறை பாலத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவினை நடத்தியிருந்தார்.

இந்நிலையில் நேற்றையதினம் மீண்டும் இரண்டாவது தடவையாக பொருளாதார அபி விருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஜப்பான் நாட்டு அதிகாரிகளுடன் வருகை தந்து மண் முனைத்துறைப் பாலத்திற்கான அடிக்கல் நாட்டுவிழாவினை நடத்தியுள்ளார்.

மேற்படி நிகழ்வானது அரசாங்கத்தின் அரசியல் வங்குரோத்து நிலைமையை எடுத் துக்காட்டுவதுடன் வெளிநாட்டு பிரதிநிதிக ளையும் பொதுமக்களையும் ஏமாற்றும் செயற்பாடாகவும் உள்ளது.

தேர்தலுக்கு செங்கற்கல்லும் வெளிநாட்டு பிரதிநிதிகள் வரும்போது கருங்கல்லுமென ஒரே பாலத்திற்கு இரண்டு தடவைகள் அடிக் கல் நாட்டும் ஆசியாவின் ஆச்சரியமாகவே தற்போது இலங்கை அரசாங்கம் மாறியுள்ளது.

எத்தனை தடவைகள் யார் வந்தாலும் அவர்களை கொண்டு அடிக்கல் நாட்டுவிழா நடத்த இங்கு பல அதிகாரிகள் இருக்கின் றார்கள். அவர்கள் மக்களுக்கு சேவை செய் வதை விட அரசாங்க அமைச்சர்களுக்கே அதிகம் சேவை செய்கிறார்கள்.

ஜப்பான் அரசாங்கத்தின் நிதிகளை பெறு வதற்காக ஏற்கனவே அடிக்கல் நாட்டப்பட்ட பாலத்திற்கு மீண்டும் ஜப்பான் அரசாங்க அதிகாரிகளை கொண்டு அடிக்கல் நாட்டு விழாவை நடத்தி ஜப்பான் அரசாங்கத்தையும் ஏமாற்றப் பார்க்கிறது என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாத இராசி பலன்

## 17.10.2012 - 16.11.2012



## மிதுனம்

மிருகசீரிஷம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

**கூட்டுக்கிரக யோகத்தால் கூடுதல் இலாபம் உண்டு!**

**எழுத்தின் மூலமும் பேச்சின் மூலமும் எல்லோரையும் கவரும் மிதுன இராசி நேயர்களே!**

ஆன்மீகத்தில் சிறந்தவர்களாக விளங்குவீர்கள். எப்பொழுதும் சிந்தனை ஒளியில் சிறகடித்துப் பறப்பீர்கள். முன்னெச்சரிக்கை உணர்வு உங்களிடம் இருப்பதால் தான் முன்னேற்றத்துக்குரிய தடைகளை வென்று முதலிடம் பிடிக்கிறீர்கள். எதையும் யாரிடமும் மனம் விட்டுப்பேசுவீர்கள். மறைத்து வைத்துப் பேசத்தெரியாததால் ஒருசில சமயங்களில் நட்பைக் கூடப் பகையாக்கிக் கொள்வீர்கள்.

உங்களுக்கு இந்த ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது தனாதிபதி சந்திரன் சகாய ஸ்தானாதிபதி சூரியனுடன் இணைந்து பஞ்சம ஸ்தானத்தில் இணைந்து சஞ்சரிப்பதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடர்வீர்கள். அரசுவழி ஆதரவு கிட்டும். அரசியல்வாதிகளால் சில பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வீர்கள்.

எந்தக் காரியத்திலும் இதுவரை தடைகள் உருவாகியிருக்கலாம். இனி மேல் தொட்டகாரியங்கள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். வெற்றிக்குரிய செய்திகள் வந்துகொண்டே இருக்கும். வேற்று மதத்தினரும் இனத்தவரும் உங்களுக்கு உதவிக் கரம் நீட்டுவர்.

## தொட்ட காரியம் அனைத்திலும் வெற்றி கிடைக்கும் தொல்லை தந்த எதிரிகள் தானாகவே விலகுவர்

கூட்டு முயற்சியில் இலாபம் கிடைக்க இந்த கூட்டுக்கிரக யோக அமைப்புகள் பலன் கொடுக்கப் போகின்றன. பஞ்சம ஸ்தானத்தில் இணைந்திருக்கும் நான்கு கிரகங்களும் பலவிதத்தில் உங்களுக்கு நற்பலன்களை வாரிவழங்கும்.

குறிப்பாக உச்சம் பெற்ற சனியின் பார்வை உங்கள் இராசிக்கு பதினொராம் இடத்தில் பதிவதால் அச்சமில்லாத வாழ்க்கைக்கு அடித்தளமிடுவீர்கள். ஆற்றல் மிக்கவர்கள் உங்கள் பின்னணியாக இருந்து உதவிக்கரம் நீட்டுவர். கருநிறக் காகம் ஏறி என்ற சனிக்கவசத்தைப்பாடி சனீஸ்வர வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**எதிர்பாராத வாய்ப்புகள் இல்லம் வரும் நேரம்!**

ஒக்டோபர் 23 ஆம் திகதி கன்னி இராசியில் சுக்கிரன் நீச்சம் பெறப் போகிறார். விரயாதிபதி நீச்சம் பெறும் இந்த நேரத்தில் விழிப்புணர்ச்சியின்றி செயற்பட்டால்கூட இலாபம் வந்து கொண்டே இருக்கும். அதேநேரத்தில் 5 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் சுக்கிரன் விளங்குவதால் பிள்ளைகள் வழியில் நல்ல காரியங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் கைகூடி வரும். உறவினர்களின் கல்வி நலன் கருதியும் கல்யாண வாய்ப்புகளைக் கருதியும் ஒரு தொகையைச் செலவிடும் வாய்ப்பு உண்டு.


**சப்தம செவ்வாயின் சஞ்சாரம்!**

எதிர்வரும் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி 7ஆம் இடத்தில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக உத்தியோக மாற்றம், இடமாற்றம் ஒரு சிலருக்கு ஏற்படும். உறவினர் பகை நட்பாக விளங்கிய நிலை மீண்டும் பகையாக மாறலாம். உடன் பிறப்புகளையும் அனுசரித்து செல்லும் சூழ்நிலை உருவாகும். குரு வக்ர இயக்கத்தில் இருப்பதால் பெரும் பான்மையான பாதிப்புகள் ஏற்படாது. 7, 10 க்கு அதிபதி வக்ரம் பெறும் பொழுது குடும்பத்திற்கு தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்பு கிட்டும். வாகன மாற்றம் செய்ய முன்வருவீர்கள்.

இம்மாதம் இனிய மாதமாக அமைய புதன்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

இம்மாதம் ஆரோக்கியம் சீராகும். ஆசைகள் பூர்த்தியாகும். கணவன், மனைவி உறவில் கனிவு கூடும். கடல் தாண்டி வரும் செய்தி காதினிக்க வைக்கும். பழைய உறவை புதுப்பித்துக் கொள்வீர்கள். சொத்துக்களை விற்று விட்டோமே என்று கவலைப்பட்டவர்கள் மீண்டும் சொத்துக்களை வாங்கும் வாய்ப்புகள் கைகூடி வரும். தாய்வழி ஆதரவு உண்டு. செவ்வாய் பெயர்ச்சிக்கு பின் உடன்பிறப்புகளால் ஒ்ரு பிரச்சினை ஏற்பட்டு அகலும். உங்கள் இராசிலேயே உங்கள் குடும்ப உறுப்பினர்கள் யாரேனும் இருந்தால் அதற்குரிய பரிகாரங்களை செய்து கொள்வது நல்லது.

## ஜோதிடக் கலைமாமணி சிவல்புரி சிங்காரம்



## கடகம்

புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

**இடமாற்றம், ஊர்மாற்றம் ஏற்கும் சிந்தனை மேலோங்கும்!**

**பிறர் மனதை அறியும் சக்திகொண்ட கடக இராசி நேயர்களே!**

நாலும் தெரிந்தவர்கள் நீங்கள். நாட்டம் முழுவதும் பொது நலத்தில் இருந்தாலும் வாழ்வின் பிற்பாதியில் சுயநலமும் சூழ்ந்து கொண்டிருக்கும். தான் சார்ந்த சமூகத்தை உயர்த்த வேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும். சாதனை நிகழ்த்த ஆசைப்படுவீர்கள். தன்னம்பிக்கை உங்களின் மூன்றாவது கையாக இருக்கும். ஆபூர்வ விடயங்களை அறிந்து கொள்வீர்கள். அதிகப்படியான ஆர்வத்தை வரவழைத்துக் கொள்வீர்கள்.

உங்களுக்கு இந்த ஐப்பசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இராசிநாதன் சந்திரன் 4 ஆம் இடத்தில் சனியுடன் கூடி மாதத் தொடக்கம் அமைகிறது. அர்த்தாஷ்டம சனியின் ஆதிக்கம் ஒரு புறம் இருந்தாலும் செவ்வாய் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து குருவால் பாரக்கப்படுவதால் குருமங்கள யோகம் செயற்படப்போகிறது. எனவே, குடும்பத்தில் நீண்டநாட்களாக நடைபெறாத சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும்.

கேதுவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் ஆரோக்கியத்தில் அடிக்கடி தொல்லைகள் உருவாகலாம். அவசரப்பட்டு எந்த ஒரு முடிவும் எடுத்து விடவேண்டாம். குறிப்பாக கோபத்தை தவிர்ப்பது நல்லது. முன் கோபத்தின் காரணமாக முன்னேற்றத்தின் பாதையில் சில இடையூறுகள் வரலாம். இந்த இடையூறுகளை சந்திக்காதிருக்க இருகரம்கூப்பி வழிபட வேண்டிய தெய்வம் சனிபகவான்தான்.

காலைநேரத்தில் காகத்துக்கு அன்னம் வைத்தும் மாலைநேரத்தில் சனி பகவானுக்கு அர்ச்சனை செய்தும் வழிபட்டு வந்தால் நாளும்பொழுது சந்திக்கும் பிரச்சினைகள் நல்லபடியாக முடியும். வெளிநாட்டுத் தொடர்பு அல்லது வெளிமாநிலங்களுக்கு அழைப்புகள் வந்து சேரலாம். வரும் அழைப்புக்களை ஏற்றுக்கொள்ள முன்வரும் பொழுது உங்கள் சுய ஜாதகத்தையும் ஒருமுறை பரிசீலனை செய்து பாருங்கள்.

நல்ல வலுவான தெசாபுத்திகள் நடக்கும் பட்சத்தில் எதை ஏற்றுக் கொண்டாலும் அது சிறப்பாகவே இருக்கும். பொதுவாக இம்மாதத்தில் இரண்டாமிடத்தில் சுக்கிரன் இருப்பதால் பணப்புழக்கத்திக்கு குறைவு ஏற்படாது. யாருடைய பணமாவது உங்கள் கையில் புரண்டுகொண்டே இருக்கும்.

**நினைத்ததை நிறைவேற்றும் நீச்ச சுக்கிரன்**

ஒக்டோபர் 23 ஆம் திகதியில் கன்னி இராசியில் சுக்கிரன் நீச்சம் பெறுகிறார். இதன் விளைவாக உங்களுக்கு நல்ல மாற்றம் வந்து சேரப்போகிறது. குறிப்பாக இளைய சகோதரத்தால் ஏற்பட்ட சச்சரவுகள் அகலும். வழக்குகளில் வெற்றிகிடைக்கும். வருமானம் பெறுவதற்காக போட்ட திட்டம் நிறைவேறும். குறை சொல்லியவர்களே பாராட்டும் அளவிற்கு நடந்து கொள்ளப் போகிறீர்கள். இடம், பூமி வாங்கும் யோகம் உருவாகும்.

**செவ்வாயப்பெயர்ச்சியின் பலன்கள்**

எதிர்வரும் நவம்பர் 6 ஆம் திகதியில் தனுசு இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். 5க்கு அதிபதி 6 சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளால் சில விரயங்கள் ஏற்படும் குழந்தைகளின் முன்னேற்றம் கருதி சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வாங்கிய சொத்துக்களை விற்றுவிட்டு புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும். தொழில் செய்பவர்கள் கூட்டாளிகளில் ஒருசிலரை மாற்றம் செய்ய நினைப்பர். ஒருசிலர் தொழில் மாற்றமே செய்வதென முடிவெடுத்து அதற்கான ஆயத்தப்பணிகளை மேற்கொள்வர்.

குரு வக்ரம் பெற்றிருக்கும் இந்த நேரத்தில் பாக்கிகள் வசூலாகி பலவசப் படுத்தும், வாங்கல், கொடுக்கல்களை ஒழுங்கி செய்துகொள்வீர்கள். வீட்டுக்குத்தேவையான விலையுயர்ந்த பொருட்களையும் அத்தியாவசியப் பொருட்களையும் மாதக் கடைசியில் வாங்கும் சூழ்நிலை உருவாகலாம்.

இம்மாதம் விநாயகர் வழிபாடு விருப்பங்களை நிறைவேற்றும். வெள்ளிக்கிழமை விரதமும் நல்ல பலன்களை வழங்கும்.

இம்மாதம் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். அருகில் இருப்பவர்கள் மற்றும் அடுத்த வீட்டில் வசிப்பவரிடம் பகைமை கொள்ளாமல் இருப்பது நல்லது. பிறரை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் உங்களிடமே வந்து சேரலாம் மாதத்தின் மையப்பகுதியில் ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. கணவன், மனைவிக்குள் கனிவு கூடும். உடன்பிறப்புக்களை நம்பிச் செய்த காரியம் தாமதப்படலாம். அர்த்தாஷ்டம சனி இருப்பதால் நரம்பு எலும்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் ஏற்படலாம். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம். **(தொடரும்)**

## குருமங்கள யோகம் செயற்படப் போகின்றது; நினைத்த காரியம் தடையின்றி நடக்க வாய்ப்புண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அம்பிகைபாகன் ஆளுமைத்தடம்' நூல் வெளியீடு

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் முருகேசு கௌரிகாந்தன் எழுதிய 'அம்பிகைபாகன் ஆளுமைத் தடம்' எனும் நூல்வெளியீடும் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் அறிஞர் ச.அம்பிகைபாகனின் 90 ஆவது பிறந்தநாள் விழாவும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி விவேகானந்த மண்டபத்தில் அதிபர் எம்.மகேந்திரன் தலைமையில் நடைபெறும்.

ஆரம்ப நிகழ்வுகளாக வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம்பெறும்.

இந்நிகழ்வின்போது யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வி.கே.கணபதிப்பிள்ளை, பேராசிரியர் இ.குமாரவடிவேல், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன், வைத்தீஸ்வராவின் முன்னாள் அதிபர் சிவ.சரவணபவன்(சிற்பி), கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் வாழ்த்துரையினை வழங்கவுள்ளனர்.

நூலின் வெளியீட்டுரையினை யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலமொழி போதனை மையத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் ஆற்ற நூலின் ஆய்வுரையினை வைத்தீஸ்வராக் கல்லூரியின் முன்னாள்அதிபர் என்.வன்னியசிங்கம் நிகழ்த்துவார்.

நூலின் முதற்பிரதியை கலாநிதி அ.பாலசுப்பிரமணியம், கலாநிதி அ.செந்தில்செல்வன், திருமதி ஆனந்தகௌரி நவானந்தன், கிராம அலுவலர் மா.இராமலிங்கம் ஆகியோர் பெறவுள்ளனர்.

அத்துடன் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளது. (அ-2)

# கரைச்சி பி.செயலகத்தின் பண்பாட்டு விழா நாளை

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தின் பண்பாட்டு விழா நாளை வியாழக் கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரைச்சி பிரதேச செயலரும் பண்பாட்டு பேரவையின் தலைவருமான கோபாலபிள்ளை நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கிளிநொச்சி அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இதன்போது கரைஎழில் சஞ்சிகை வெளியிடப்படவுள்ளதுடன் கலைஞர்கள் 7 பேரும் கௌரவிக்கப்படவுள்ளனர். இந்நிகழ்வில் பப்பிரவாகன் நாட்டுக் கூத்து, சத்தியவான் சாவித்திரி இசை நாடகம், கிராமிய நாடகம் ஆகிய கலைநிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (அ-2)

# இலங்கையில் ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டியது அவசியம்

## சர்வதேச நாணயநிதியம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டுமென சர்வதேச நாணயநிதியம் அறிவித்துள்ளது.

இதற்கமைய உலக அளவிலான போட்டியை முறியடித்து ஏற்றுமதித் துறையில் இலங்கை முன்னேற வேண்டுமென சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கிளைப் பொறுப்பாளர் கோஷி மாதாய் தெரிவித்துள்ளார்.

நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கும் கடன்பெறு வீத்திற்கும் இடையில் சமனிலையின்மை காணப்படுகின்றது. இதற்காக நடுத்தர மற்றும் நீண்டகாலத் தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டும்.

கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்தத் தேசிய உற்பத்திக்கு சார்பாக கடன் அதிகளவு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்காது கடன்களை மீளச் செலுத்த முடியாது என்றார். (அ-2)

# மஞ்சுள மீது தாக்குதல் நடத்திய ஒரு நபர் கூட கைதாகவில்லை

## கயந்த எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ன மீது தாக்குதல் நடத்திய ஒரு நபரைக் கூட பொலிஸாரினால் இதுவரை கைது செய்ய முடியாது போயுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக குற்றம்சுமத்தியுள்ளார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த தாக்குதல் சம்பவம் நடந்து ஒரு வாரம் சென்றுள்ள நிலையிலும் இதுவரை குற்றவாளிகள் சுதந்திரமாக நடமாடி வருகின்றனர். எனினும் அமைச்சர் இந்த விடயம் தொடர்பாக நகைப்புக்குரிய கருத்துக்களை வெளியிட்டு சம்பவத்தை மூடி மறைக்க முயற்சித்து வருகின்றனர் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறான சம்பவம் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காத நிலையில் சர்வதேசம் மேலும் இலங்கையில் தலையீடுகளை மேற்கொள்ள வழிவகுக்கும் எனவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# துப்பாக்கி முனையில் 15 இலட்சம் ரூபா கொள்ளை

(கொழும்பு)

உனவட்டுன உல்லாசப் பயணிகள் ஹோட்டலொன்றின் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக வங்கியிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட 15 இலட்சம் ரூபா பணம் மோட்டார் சைக்கிள்களில் வந்த கொள்ளையர்கள் சிலரால் துப்பாக்கி முனையில் கொள்ளையிடப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளொன்றில் இந்த பணம் எடுத்துச் செல்லப்பட்டபோது யக்தெஹிமுல்ல பகுதியில் வைத்து வழிமறித்துள்ள மோட்டார் சைக்கிள்கள் இரண்டில் வந்த கொள்ளையர்கள் அதனை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார். (அ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பழமொழிகளில் மருத்துவம்

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

பழமொழிகளில் கற்பனையின் பங்கு குறைவு. அனுபவத்திற்கே அதிக இடம். எனவே, உண்மை அனுபவங்களின் உறைவிடமாக பழமொழிகளைக் கருதலாம். எமது பண்டைய மருத்துவர்கள் தம் மருத்துவ அனுபவ அறிவைப் பாதுகாக்கும் பெட்டகமாக பழமொழிகளைப் பயன்படுத்தினர். இப் பழமொழிகளை ஆய்வு நோக்குடன் அணுகினால் பல அரிய மருத்துவ உண்மைகளை விளங்கிக்கொள்ள முடியும். பெரும்பாலான சித்தர்கள் பாமர மக்களும் புரியும் வகையில் மருத்துவக் கோட்பாடுகளை எளிமைப்படுத்தி கூறியிருப்பது வாய்மொழியாக அவை பரப்பப்பட்டு பழமொழியாகி இன்றும் கிராமப்புற மக்களிடையே சுருங்கிய வடிவில் காணப்படுகின்றன.

**❖ ஒரு போது உண்பான் யோகி**
**இருபோது உண்பான் போகி**
**முப்போது உண்பான் ரோகி**

நோய் வருவதற்கும் குறைவதற்கும் தீர்வதற்கும் உரிய காரணங்களில் உணவும் ஒன்றாகும். அளவான உணவே வளமான வாழ்வைத் தருகிறது. மிகையான உணவு உடலில் நோயை உண்டாக்குகிறது. சில வகை நோய்கள் உணவுக் கட்டுப்பாட்டிலேயே குணமாகி விடுகின்றன. இவ்வாறு பல்வகையில் செயற்படும் உணவு பற்றிய கோட்பாட்டினை இப்பழமொழி விளக்குகிறது.

**❖ ஆற்று நீர் வாதம் போக்கும்**
**அருவி நீர் பித்தம் போக்கும்**
**சோற்று நீர் இரண்டும் போக்கும்**

ஆற்று நீர் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கும் நீராகும். ஆற்று நீரில் தாதுப் பொருட்களும் மூலிகை மருந்துகள் கலந்த பொருட்களும் கலந்து வருவதால் வாதம் போன்ற நோய்கள் வராமல் தடுக்க வல்லது. அருவி நீரிலும் மருத்துவ மூலிகைகள் கலந்து வருவதால் பித்தம் சம்பந்தமான நோய்களும் போகும். சோற்று நீர் (நீராகாரம்) வாதம், பித்தம் போக்கும். சோற்று நீர் உட்கொள்வதால் உடலுக்கு நல்லது என்பதையும் உடலுக்கு குளிர்ச்சியையும் கொடுக்கக்கூடியது. அத்துடன் குடலில் ஏற்படும் தாபிதத்தை (புண்களை) தணிக்கக் கூடியதாகவும் இருக்கிறது. எனவே, நீராகாரம் உண்ணுதல் உடல் நலனுக்கு சிறந்ததாகும்.



**❖ ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை வைத்தியன்**

ஆயிரம் வேர் என்பது இங்கு ஆயிரக்கணக்கான மூலிகைகளின் வேரை எடுத்து மருந்து தயாரித்தவனையே ஆயிரம் வேரைக் கொன்றவன் ஆக கருதப்படுகிறது. ஆயிரம் வேரைக்கொன்று மருந்து தயாரித்து அதன் மூலம் மருத்துவ சிகிச்சை அளிப்பவன் கூட அரை வைத்தியன். அதாவது முழுவதும் மருத்துவம் செய்ய முடியாதவனாக கருதப்படுகிறது. ஏனெனில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மூலிகைகளை வைத்தியன் அறிந்திருத்தல் அவசியமாகும்.

**❖ பத்து மிளகிருந்தால் பகைவன் வீட்டிலும் சாப்பிடலாம்**

மிளகு தாவரத்தின் விதையல்ல. உலர் கனியாகும். இம் மிளகிற்கு நஞ்சகற்றி (Antidote) மருத்துவச் செய்கை உண்டு. அத்துடன் நோயை உருவாக்கும் கிருமிகளை அழிக்கும் தன்மையும் உண்டு. எனவே, உணவு நஞ்சானால் மிளகை அவித்துக் குடித்தால் உணவு நஞ்சில் ஏற்படும் தாக்கத்திலிருந்து எம் உடலை பாதுகாத்துக் கொள்ளலாம்.

**❖ வள்ளல் தாய் போல் பிள்ளையை வளர்க்கும்**

வள்ளல் கீரையில் உயிர்ச்சத்து A, கல்சியம், பொஸ்பரஸ் ஆகிய சத்துக்கள் உள்ளதால் தாய்க்கும் சேய்க்கும் அத்தியாவசியமாகிறது. அதே நேரம் வள்ளல் கீரையில் தாய்ப்பாலை அதிகம் சுரக்கச் செய்யும் தன்மையும் உண்டு.

**❖ காலில் மிதிபடும் செடிகள் வரும் காலனை வென்றிடும் வெடிகள்**

அதாவது எமது பிரதேசத்தில் எங்கு பார்த்தாலும் பலவித மருத்துவ குணமுள்ள செடி இன மூலிகைகள் பரம்பிக் காணப்படுகின்றன. இவற்றிற்கு நோய்களை அழிக்கும் ஆற்றல் உண்டு என்பதே அதன் கருத்தாகும்.

**❖ காலையில் இஞ்சி கரும்பகல் சுக்கு**
**மாலையில் கடுக்காய் மண்டலம் உண்ண**
**கோலையூன்றி கூனி நடப்பவன்**
**கோலை வீசி குலுங்கி நடப்பானே**

அதாவது காலையில் இஞ்சியை தோல் நீக்கி சிறுசிறு கீற்றாக சீவி தேனில் கலந்தோ அல்லது வேறு விதத்தில் பதப்படுத்தியோ பயன்படுத்தினால் உணவுக்கால்வாய்த் தொகுதியை சீர்படுத்தி அத்துடன் வயிற்றுப் பகுதியில் கொழுப்பு அதிகம் படிவதையும் தடை செய்யும். நண்பகல் சுக்கு (வேர்க்கொம்பு) தோல் சீவி பொடித்து அரித்து 1-2 கிராம் அளவு எடுக்கும் போது உணவை ஜீரணிக்கும் தன்மை உள்ளதாலும் குடலில் சேர்ந்துள்ள மேலதிக வாயுவை அகற்றும் தன்மை உள்ளதாகவும் இரவில் கடுக்காய் உலர் கனியின் தோலை ஊறவைத்து குடிப்பதால் (30-60 மில்லி) காலையில் இலகுவாக மலத்தை வெளியேற்றுவதுடன் உடலை பலமாக வைத்திருக்கவும் உதவும்.

**❖ காட்டில் கொல்லுவது புலி**
**வீட்டில் கொல்லுவது புளி**

அதாவது புளியை கூடுதலாக பயன்படுத்தும் போது அதனுடைய அமிலத்தன்மையால் குடல்புண் நிலைமை அதிகரிக்கலாம். அத்துடன் உயர்குருதி அமுக்கத்தை அதிகரிக்கக்கூடியதாக இருக்கும். எனவே, புளியை குறைத்து பயன்படுத்துவது சிறந்தாகும். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

252

## ஏரிக்குள் இரத்தினமாலை

அரசன் ஒருவன் வேட்டையாட வீரர்களுடன் காட்டிற்குச் சென்றான். களைப்பு அடைந்த அவன் அங்கிருந்த ஏரிக்கரையில் தங்கினான்.

ஏரியைப் பார்த்த அவன் வியப்படைந்தான். அதன் நடுவில் இரத்தினமாலை ஒன்று பளபளத்துக் கொண்டிருந்தது.

வீரர்களைப்பார்த்து அவன் ஏரியில் குதியுங்கள். அந்த இரத்தினமாலையைத் தேடி எடுத்து வாருங்கள் என்று கட்டளையிட்டான்.

வீரர்கள் பலர் ஏரிக்குள் குதித்தார்கள். யாராலும் அந்த மாலையை எடுத்து வரமுடியவில்லை.

தண்ணீரை இறைத்தால் மாலை கிடைக்கும் என்று நினைத்தான் அவன்.

தன் நாட்டு மக்களை எல்லாம் அங்கு வரவழைத்தான். ஏரித் தண்ணீரை இறைக்குமாறு கட்டளையிட்டான்.

தண்ணீர் முழுமையும் அவர்கள் இறைத்தார்கள். பின்பு சேற்றில் இறங்கிய அவர்கள் இரத்தின மாலையைத் தேடினார்கள். இரத்தினமாலை அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

மீண்டும் ஏரியில் தண்ணீர் நிரம்பியது. அதன் நடுவில் இரத்தினமாலை தெரிந்தது.

மீண்டும் தண்ணீரை இறைக்கச் செய்தான் அரசன். இப்பொழுதும் இரத்தினமாலை கிடைக்கவில்லை.



என்னசெய்வது? எப்படி இரத்தினமாலையை எடுப்பது என்று குழம்பினான் அவன்.

தன் நாட்டிலிருந்த அறிஞர் ஒருவரின் நினைவு அவனுக்கு வந்தது.

அவரை அங்கு வரவழைத்தான்.

அறிஞரே இந்த ஏரியைப்பாருங்கள். இரத்தினமாலை ஒன்று பளபளக்கிறது. அதை எடுக்கப் பல முயற்சிகள் செய்துவிட்டேன்.

வீரர்களையெல்லாம் குதித்துத் தேடச் சொன்னேன். இரண்டு முறை தண்ணீரை எல்லாம் இறைத்தும் பார்த்தேன். இருந்தும் இரத்தினமாலை எனக்குக் கிடைக்கவில்லை.

எப்படியாவது நீங்கள் அதை எடுத்துத் தரவேண்டும் என்றார்.

சிந்தனையில் ஆழ்ந்தார் அவர்.

இரத்தினமாலை ஏரிக்குள் இருக்க வாய்ப்பு இல்லை. இருந்திருந்தால் அரசருக்குக் கிடைத்திருக்கும். வேறு எங்கே அது இருக்கக்கூடும் என்று நாலாபக்கமும் பார்த்தார்.

ஏரிக்கரையில் உயர்ந்து வளர்ந்திருந்த பனை மரத்தைப் பார்த்தார். அதன் பின்னாலிருந்து கதிரவனின் ஒளிக்கதிர்கள் வீசிக்கொண்டிருந்தன. அந்த ஒளி ஏரியில் விழுந்தது.

உண்மை அவருக்குப் புரிந்தது.

இந்த மரத்திலுள்ள கூட்டில்தான் இரத்தினமாலை இருக்கவேண்டும். அதன் விம்பமே ஏரியில் தெரிகிறது என்ற முடிவுக்கு வந்தார்.

அரசே ஒரு பெரிய பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வரச்சொல்லுங்கள் என்றார் அவர்.

அரசன் கட்டளையிட்ட வீரர்கள் பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வந்தார்கள்.

அந்தப் பாத்திரத்தை ஏரிக்கரையில் வைத்தார் அவர்.

பாத்திரத்தில் இருந்த தண்ணீரிலும் முத்துமாலை தெரிந்தது.

அதை அரசனிடம் காட்டிய அவர் அரசே! இரத்தினமாலை ஏரியில் இல்லை. அதன் விம்பம்தான் ஏரியில் தெரிகிறது. அதே விம்பம் பாத்திரத்தில் உள்ள தண்ணீரிலும் தெரிகிறது.

கரையில் உள்ள பனை மரத்தில் பறவைக்கூடு உள்ளது. அந்தக்கூட்டில் இரத்தினமாலை இருக்கவேண்டும். வீரர்களை மரத்தில் ஏறி எடுத்து வரச் சொல்லுங்கள் என்றார் அவர்.

அரசன் கட்டளையிட வீரர்கள் மரத்தில் ஏறினார்கள்.

கூட்டிலிருந்த இரத்தினமாலையை எடுத்துவந்தார்கள்.

அந்த இரத்தின மாலையைப் பார்த்து மகிழ்ந்தான் அரசன்.

அவரின் அறிவுக் கூர்மையைப் பாராட்டினான் அரசன். அவருக்கு நிறைய பரிசுகள் அளித்துச் சிறப்பித்தான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திவிநெகும சட்ட மூலத்தை இந்தியா அவதானிக்கிறது

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

திவிநெகும சட்ட மூலம் தொடர்பில் இந்திய அரசாங்கம் உன்னிப்பாக அவதானித்து வருவதாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இதனை உள்நாட்டு ஊடகம் ஒன்றிற்குத் தெரிவித்துள்ளார். திவிநெகும சட்ட மூலம் தொடர்பில் இந்திய அரசாங்கத்தின் கருத்துக்கு கொண்டு வரப்பட்டது.

இந்த சட்ட மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பறிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் 13 ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுலாக்க வேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாடு தகர்க்கப்படுகிறது.

இந்த நிலையில் இந்தச் சட்ட மூலம் தொடர்பான அபிவிருத்திகளை இந்திய மத்திய அரசாங்கம் உன்னிப்பாக அவதானித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழர்களுக்கு எந்த காலத்திலும் அதிகாரப் பகிர்வினை வழங்கும் எண்ணத்தில் அரசாங்கம் இல்லை என்பதற்கு இந்தச் சட்ட மூலம் ஒரு எடுத்துக் காட்டு என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# நவராத்திரி



வீரத்தின் அதிபதியே
துர்க்கையம்மா
முதல் மூன்று நாளுமுனை
முன்நிறுத்தி பூஜை செய்து
மனதிலே உனை நிறுத்தி
பாமாலை பாடி நின்றோம்
அருள்தருவாய்
வீரத்தின் அதிபதியே
துர்க்கையம்மா
அருள் பொழிவாய்.

ர.விதுஷன்
தரம் 5
யா/நாவாந்துறை றோ.க.த.க.பா

## சிறந்த தபால் ஊழியர் தெரிவானார்

அகில இலங்கை ரீதியில் தபால் தொலைத் தொடர்பு அமைச்சால் நடத்தப்பட்ட சிறந்த தபால் ஊழியரைத் தெரிவதற்கான மதிப்பீட்டில் பூநகரி பிரதம தபால் நிலையத்தைச் சேர்ந்த ப.மகேந்திரராஜா வடமாகாணத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார். இதேவேளை தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவருக்குரிய வடமாகாண மட்டத்தில் நடத்தப்படவுள்ள கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை மன்னாரில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2-84)

# ஊழியர் சேமலாப நிதி வழக்கு ஒத்திவைப்பு

ஊழியர் சேமலாப நிதியை முறைகேடான வகையில் பயன்படுத்தியதாகக் கூறி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

11 தொழிற்சங்கங்கள் இணைந்து தாக்கல் செய்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

ஊழியர் சேமலாப நிதியை வேறு நிறுவனங்களில் முதலீடு செய்ய நடவடிக்கை எடுத்ததால் தொழிலாளர்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், நிதி அமைச்சின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர உள்ளிட்ட 9 பேர் மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர். (அ-2)


**BUTTERFLY INTERNATIONAL SCHOOL**

**Main Street, Chankanai**

**ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை**

யாழ்ப்பாண மாவட்டத்தில் தரம் வாய்ந்த முன்னணி ஆங்கில மொழி மூலமான பாலர் பாடசாலையான **Butterfly International School** இற்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| வயது 2+ முதல் வயது 3+ வரை | வயது 3+ முதல் வயது 4+ வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |
| **Play Group** | **Montessori** | **PreSchool** |

- சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட Dr.Maria montessori இன் Method இல் உள்ளக, வெளியக, விளையாட்டுக்கள், அனுபவமும் அர்ப்பணிப்பும் கூடிய ஆசிரியர்களினாலான கற்கை நெறிகள்.
- சிறார்களின் திறமைகளை வெளிக்கொணரும் நிகழ்ச்சிகளில் சகலரும் பங்கு பெறுவர்.
- விளையாட்டுப்போட்டி, English Concert முத்தமிழ் விழா, சித்திரக்கைவேலைக் கண்காட்சி, Graducation Ceremony

*பாடசாலை மாணவர்களுக்கான விசேட ஆங்கில வகுப்புக்கள்*

- தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை பாடசாலை பாடத் திட்டத்திற்கு அமைய ஆங்கில பாடநெறிகள்.

*பாடசாலை மாணவர்களுக்கான கணனி கற்கை நெறிகள்*

- 3 வயது முதல் 11 வயது வரையான மாணவர்கள் இக்கணனி கற்கை நெறியில் இணையமுடியும்.

*விசேட ஆங்கில வகுப்புக்கள், கணனிகற்கை நெறிகள், வாரநாட்களிலும், சனி,ஞாயிறு தினங்களிலும் நடைபெறும்.*

**புதிய வகுப்புக்கள் அனைத்தும் விஜயதசமி அன்று 24.10.2012 புதன்கிழமை ஆரம்பமாகும்.**
**அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை இன்றே முந்துங்கள்.**
**விஜயதசமி அன்று ஏடு தொடக்கும் நிகழ்வு காலை 9.00 மணி-12.00 மணிவரை இடம்பெறும். பதிவுகளை முன் கூட்டியே மேற்கொள்ளவும்.**

Director,
(761) Butterfly International School



**தங்கப் பவுணுக்கு அதிகூடிய பணம் தரும் வங்கி**


24 கரட்
ரூ. 48,500/-

22 கரட்
ரூ. 44,500/-



ரூ. 50,000/- அல்லது அதற்கு மேற்பட்ட சகல அடகுக் கொடுக்கல் வாங்கல்களுக்கும்* சுடுநீர் போத்தல் ஒன்று இலவசம்

NDB
பொன்னயம்
அடகுச் சேவை



இச்சலுகையை பின்வரும் NDB கிளைகளில் பெறமுடியும்

| | | | |
|---|---|---|---|
| அம்பாறை | யாழ்ப்பாணம் | மாத்தறை | வவுனியா |
| மட்டக்களப்பு | கல்முனை | நீர்கொழும்பு | வத்தளை |
| சிலாபம் | கண்டி | புத்தளம் | சுன்னாகம் |
| காலி | கொட்டாஞ்சேனை | இரத்தினபுரி | நாவலப்பிட்டி |
| ஜா-எல | மாத்தளை | திருகோணமலை | அளுத்கம |

அழையுங்கள் 011 2 44 88 88

இச்சலுகை 2012 செப்டெம்பர் 26 முதல் நவம்பர் 26 வரை மட்டுமே

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
இருப்பு உள்ளவரை மட்டுமே

AA (lka) Fitch Rating

(சி/1325)

NDB வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிரிபோலி சிறையிலிருந்து 120 கைதிகள் தப்பியோட்டம்

(டிரிபோலி)

லிபிய தலைநகர் டிரிபோலி யில் அல் ஜுடைடா என்ற இடத்திலுள்ள மத்திய சிறையிலிருந்து 120 கைதிகள் சிறைக் கம்பிகளை உடைத்து தப்பியோடியுள்ளனர்.

லிபிய தலைநகர் டிரிபோலியிலிருந்து அல்ஜுடைடா என்ற இடத்தில் மத்திய சிறை உள்ளது. இது லிபியாவில் உள்ள மிகப்பெரிய சிறை ஆகும். இங்கு பலதரப்பட்ட கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இங்கிருந்து 120 கைதிகள் சிறை கம்பிகளை உடைத்து கொண்டு தப்பியோடிவிட்டதாக தேசிய பாதுகாப்பு அமைப்பின் தலைவர்காலெத்அல்ஷரீப்தெரிவித்துள்ளார்.

தப்பியோடியவர்களில் பெரும்பாலானவர்கள் ஆபிரிக்காவில் இருந்து இங்கு வந்து சட்டவிரோதமாக குடியேறியதால் கைது செய்யப்பட்டவர்கள்.

அவர்கள் வன்முறையில் ஈடுபடலாம் என்ற அச்சம் நிலவுவதால் அவர்களை பிடிக்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் சிறையில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதியும் சர்வாதிகாரியுமான முவம்பர் கடாபி சிர்தே நகரில் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி பிடிபட்டு அடித்து கொல்லப்பட்டார். அந்த முதலாம் ஆண்டு நினைவு நாளுக்கு ஒரு வாரத்துக்கு முன்பு கைதிகள் தப்பியுள்ளனர். எனவே, அவர்கள் கடாபியின் ஆதரவாளர்களாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. (அ-2)

# ஆப்கானில் ஏற்பட்ட வன்முறையால் 4 இலட்சம் பேருக்கு பார்வை இல்லை

ஆப்கானிஸ்தானில் நடந்த போர் மற்றும் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மட்டும் மொத்தம் 4 இலட்சம் பேர் வரை பார்வையிழந்தவர்கள் உள்ளனர் என்று வெளியாகியுள்ள தகவல் அதிர்ச்சியை வழங்கியுள்ளது.

உலக பார்வையிழந்தோர் தினத்தை முன்னிட்டு ஆப்கானிஸ்தானின் பொதுமக்கள் சுகாதாார அமைப்பு சார்பான (Kaneshka Baktash எனும் பேச்சாளர் ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் பேட்டியளித்த போது இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு வருடமும் 25 ஆயிரம் பேர் நோய் மற்றும் பிற காரணங்களால் பார்வை இழந்து வருவதாக குறிப்பிட்டார்.

இருப்பினும் தீவிரவாதத்துக்கெதிரான யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் ஆப்கானில் வசித்து வரும் பார்வையிழந்தோர் தொகை எதிர் வரும் காலத்தில் குறைய வாய்ப்புள்ளது எனவும் இதற்கு சான்றாக அவர்களுக்கு சுகாதார வசதிகள் அதிகளவில் வழங்கப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அதாவது 10 வருட காலமாக ஆப்கானின் கிராமப் பகுதிகளில் மருத்துவ முகாம்கள் அமைத்து சுகாதார வசதிகளை பெருக்கியிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஆப்கானில் நோயுற்றவர்களில் 80 % அதாவது 28 மில்லியன் மக்கள் தலிபான்களின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் இருந்தே மருத்துவ வசதிகளை பெற்று வருவதாக அதிகாரிகள் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கைதிகள் 6 பேரையும் விடுவிக்க வேண்டும்

## அல்கொய்தாவை கோருகிறது பிரான்ஸ்

அல்கொய்தா தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரெஞ்சு நபர்கள் ஆறு பேரை உடனே விடுவிக்குமாறு பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கோய்ஸ் ஹோலன்டே வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாலியின் வடக்கு பகுதியினை அக்கிம் என்ற அல்கொய்தாவினர் தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இவர்கள் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ஆறு நபர்களை பிணைக் கைதிகளாக பிடித்து வைத்துள்ளனர்.

ஐ.நா.சபையில் கடந்த 13 ஆம் திகதி மாலியின் ஒருங்கிணைப்பு குறித்து எடுத்த தீர்மானத்திற்கு ஹோலண்டே ஆதரவு தெரிவித்தது, இஸ்லாமிய போராட்டக்காரர்களுக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் ஹோலண்டே அல்கொய்தா தீவிரவாதிகளை ஒழித்து விட்டு வடக்கு பகுதியை தென்பகுதியுடன் இணைத்து ஒரே நாடாக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்நிலையில் வடக்கு மாலியின் இஸ்லாமியர்களின் தலைவரான ஓமர் ஹமாஹா கூறுகையில், இந்த இயக்கத்தினரை மிரட்டுவதால் அவரது நாட்டு பிணைக்கைதிகளுக்கு அவரே நரகத்தின் வாயிலை திறந்து வைத்துள்ளார். மாலிக்குள் பிரான்சின் தலையீடு இருந்தால் பிரெஞ்சு நபர்கள் கொல்லப்படுவது உறுதி என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் மேற்கு ஆபிரிக்காவிலும் பிரான்சிலும் கூட எங்களால் பிரெஞ்சுகாரர்களை பிணையக் கைதிகளாக வைத்திருக்க முடியும். அது எங்களுக்கு ஒன்றும் சிரமமான வேலை கிடையாது என்றும் தெரிவித்துள்ளார். (அ-2)

# இரண்டாவது அணுகுண்டு சோதனையை நடத்தும் சீனா

ஆசியாவின் அச்சுறுத்தல் நாடான சீனா தனது இரண்டாவது அணுகுண்டு சோதனையை 48 ஆண்டுகளுக்குபின்புநடத்தவுள்ளது.

தனது முதல் அணுகுண்டு சோதனையை கடந்த 1964 ஆம் ஆண்டு ஒக்டோபர் 16 ஆம் திகதி ஜிங்ஜியான் உய்கூர் மாகாணத்தின் மாலான் பகுதியில் வெற்றிகரமாக நடத்தியது.

அதன் பின்னர் கடந்த 1996 ஆம் ஆண்டு அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தின்படி அணு சோதனை நடத்துவதை நிறுத்தி வைத்தது.

இந்நிலையில் சீனா தனது இரண்டாவது அணு சோதனையை மீண்டும் அதே இடத்தில் நடத்தவுள்ளது. தற்போது சீனாவில் அணுகுண்டு சோதனை நடத்தப்பட்ட அந்த இடம் சுற்றுலாத் தளமாக உள்ளது.

மேலும் அணு சோதனைக்காக சீன அரசு 944 மில்லியன் டொலர்கள் முதலீடு செய்துள்ளது. மீண்டும் ஒரு அணுகுண்டு சோதனையை நடத்த சீன விஞ்ஞானிகள் இரவு, பகலாக முயற்சி செய்து அதற்கான பணிகளில் தீவிரமாக களமிறங்கியுள்ளனர். (அ-2)

# சேது சமுத்திர திட்டத்தால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு

## திட்டத்தை கைவிடக் கோரி உச்சநீதிமன்றத்தில் மனு

சேது சமுத்திரத்திட்டம் தேவையில்லை என்ற கருத்தை வலியுறுத்தி உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மனுத்தாக்கல் செய்துள்ளது. சேது சமுத்திரத்திட்டத்தை மாற்று வழிப் பாதையில் செயற்படுத்துவது குறித்த சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்ய ஆர்.கே.பச்செளரி தலைமையில் மத்திய அரசு குழு அமைத்தது.

அந்த குழு இராமர் பாலத்துக்கு சேதம் ஏற்படாமல் சேது சமுத்திரக் கால்வாய் திட்டத்தை மாற்று வழித்தடத்தில் செயற்படுத்துவது பொருளாதார சுற்றுச்சூழல் ரீதியாக சாத்தியமில்லை என்று அறிக்கை தாக்கல் செய்தது.

இது தொடர்பாக தமிழக அரசின் நிலைப்பாட்டை விளக்கும் பதில் மனு மாநில தலைமைச் செயலர் தேவேந்திரநாத் சாரங்கி சார்பில் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டது.

அதன் விபரம் இராமர் பாலத்துக்கு சேதம் விளைவிக்காமல் தனுஷ்கோடி கரையை உடைத்து சேது சமுத்திரக்கப்பல் கால்வாய்த் திட்டத்தை 4ஏ தடத்தில் நிறைவேற்றுவது சாத்தியமற்றது என்று நிபுணர் குழு கூறியுள்ளதை தமிழக அரசும் ஏற்றுக் கொள்கிறது.

தனுஷ்கோடியில் 0.8 கி.மீ. தூரத்தில் கடல் மணலைத்தோண்டி அகழ்வுப் பணி மேற்கொள்ள கடலோர ஒழுங்கு முறை ஆணையத்தின் ஒப்புதலை பெறவேண்டும்.

ஆனால், தமிழ்நாடு கடலோர பாதுகாப்பு மேலாண்மை ஆணையம் இதுவரை இத்திட்டத்தை ஆய்வு செய்யவில்லை.

ஆகையால் மாற்று வழியில் இத்திட்டத்தை செயற்படுத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

பாரம்பரியம் மிக்க புராதனச் சின்னமாக இராமர் பாலத்தை தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்க வேண்டும் என்று முதல்வர் கடந்த மார்ச் மாதம் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

எனவே, யுனெஸ்கோ சர்வதேச அமைப்பின் விதிமுறைகளை பூர்த்தி செய்யும் பாரம்பரியம் மிக்க இராமர் பாலத்தை தேசிய நினைவுச் சின்னம் என அறிவிக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது. (அ-2)



எடின்பர்க்கில் உள்ள ஆன்ட்ருஸ் இல்லத்தில் இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் (இடது) மற்றும் ஸ்கொட்லாந்து பிரதமர் அலக்ஸ் சல்மாண்டு இருவருக்கும் இடையே வரலாற்று சிறப்புமிக்க ஒப்பந்தம் இடம்பெற்று கைலாகு வழங்குவதை படத்தில் காணலாம்.

# அலாஸ்கா விமான நிலையத்தில் வெடிகுண்டு மிரட்டலால் பரபரப்பு

அமெரிக்காவில் உள்ள அலாஸ்கா டெட் ஸ்டீவன்ஸ் ஆங்கோரேஸ் என்ற சர்வதேச விமான நிலையத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுவிக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த விமான நிலையுத்திலிருந்து பயணம் செய்ய வந்த ஒரு பயணியின் பொதியில் வெடிகுண்டு இருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதைத் தொடர்ந்து பயணிகள் அனைவரும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு அருகேயுள்ள விமான் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டனர்.

பின்னர் பயணிகள் பொதிகள் சோதனையிடப்பட்டன. ஆனால், வெடிகுண்டு எதுவும் இல்லை. வெறும் மிரட்டல் என தெரிய வந்தது.

எனவே, அங்கு விமானங்கள் தரை இறங்க அனுமதிக்கப்பட்டது. ஆனால், விமானங்களில் பயணிகள் ஏற தடை விதிக்கப்பட்டது.

தற்போது இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது. பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது. (அ-2)

# உலகில் பணக்காரர்கள் மிகுந்த நாடு சுவிஸ்

உலகில் அதிக பணக்காரர்கள் வாழும் நாடாக சுவிட்சர்லாந்து விளங்குவதாக கிரெட் சுவிஸ் வெளியிட்ட வருடாந்திர உலகளாவிய சொத்து அறிக்கை தெரிவித்துள்ளது.

இங்கு ஒரு நபருக்கான சொத்து மதிப்பு 439,874 சுவிஸ் ஃபிராங்க் ஆகும். டொலரில் கணக்கிட்டால் அதாவது 468,000 டொலர் ஆகும். 2000 ஆம் ஆண்டின் தனிநபர் வருமானத்தை விட இது இரண்டு மடங்காகும்.

முதல் பத்து உலகப் பணக்கார நாடுகளில் எட்டு நாடுகள் தனது தனிநபர் சொத்து மதிப்பில் 4-17 சதவீதம் வரை சரிவைச் சந்தித்தன. அமெரிக்காவும் ஜப்பானும் மட்டுமே சிறிதளவு அதாவது ஒரு சதவீதம் உயர்ந்து காணப்பட்டன.

மேலை நாடுகளில் சொத்து மதிப்பு சரிந்ததற்குக் காரணமாக யூரோ மண்டலத்தில் ஏற்பட்ட நெருக்கடி, குறைந்த வட்டி விகிதம் போன்றவற்றை கூறலாம். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது வாழ்க்கை பெரும் கடமைகளுக்காக அளிக்கப்பெற்றுள்ளதே தவிர சுய நலத்திற்காக அல்ல. ~ஆப்ரே டிவிர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## அன்பார்ந்த ஆசிரியர்களே 'சாட்டை' படத்தை கட்டாயம் பாருங்கள்

குருவாய் வருவாய் அருள்வாய் குகனே! என்று திருப்புகழ் தந்த அருணகிரிநாத சுவாமிகள் முருகனை வேண்டி நிற்கின்றார். அறிவு ஞானத்தை இறைவன் நமக்கு தருவதாக இருந்தாலும் அதனைக் குருவடிவிலேயே தர முடியும் என்பதை மேற்போந்த வரிகள் சான்று படுத்தி நிற்கின்றன.

அதனாலோ என்னவோ தாரமும் குருவும் தலைவிதிப்படியென்று நம் பழமொழி கூறிநிற்கின்றது.

நல்லகுரு வாய்த்துவிட்டால் ஒருவனின் வாழ்வு உயர்நிலை நோக்கி நகரும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

அதனால்தான் உலகில் எவருக்கும் இல்லாத மதிப்பு ஆசானுக்கு உண்டு. அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தனக்கு கற்பித்த ஆசிரியரைக் கண்டதும் ஆசனத்தை விட்டெழுந்து மரியாதை செலுத்தினாராம்.

எனவே ஆசிரியத்துவத்திற்கு முன்பாக எந்த பதவியும் பட்டமும் உயர்ந்து நின்றுவிட முடியாது என்பது திண்ணம்.

இங்கு குறிப்பிடு கருத்தென்பது நல்லாசானுக்கு உரியவை.

ஆசிரியர்களால் அழிந்து போன மாணவர்கள், பாடசாலைகள், சமூகங்கள் என ஏராளம் உண்டு. அத்தகைய ஆசிரியர்கள் காலகாலமாக மற்றவர்களால் திட்டப்படுவார்கள்.

. எனவே புனிதமான ஆசிரியர்த் தொழிலைப் புனிதமாக போற்றுகின்ற பக்குவம் சமகால ஆசிரியர்களிற்கு மிகவும் அவசியம்.

ஒரு ஆசிரியர் நினைத்தால் ஆக்கவும் முடியும் அழிக்கவும் முடியும் என்பதற்கப்பால் ஒரு ஆசிரியனின் அப்பழுக்கற்ற–தன்னலமற்ற தூய பணியால் மக்கள் சமூகம் மிக உன்னதமான வாழ்வை, உயரிய பண்பாட்டுடனும், ஒழுக்க நெறியுடனும் வாழ முடியும் என்பதற்கு ஆசிரியர்கள் பலர் சான்றாக உள்ளனர்.

அதேநேரம் ஒரு நேர்மையான ஆசிரியர் தன் கடமையைசெவ்வையாகசெய்வதில்சந்திக்கின்ற சவால்கள்ஏராளம்என்பதையும்ஏற்றுத்தான்ஆகவேண்டும்.

இவையெல்லாம் நடைமுறையில் உள்ளவையாயினும் இவற்றையெல்லாம் மிக அற்புதமாக உள்ளடக்கியதாக 'சாட்டை' என்றதிரைப்படம்வெளிவந்துள்ளது.

திரைப்படத்திற்கு விளம்பரம் செய்வது நமது நோக்கன்று. ஒரு ஆசிரியனால் ஒரு பாடசாலையில் ஏற்பட்ட உயர்வு அதற்கான அவரின் அணுகு முறை, அத்தகைய உயர்ந்த ஆசிரியனுக்கு பிற ஆசிரியர்கள் கொடுத்த தொந்தரவு, சமூகம் கொடுத்த பரிசு என அத்தனையும் உள்ளடக்கியதாக தயாரிக்கப்பட்ட சாட்டைப் படத்தின் முழுமையிலும் ஒரு நல்லாசிரியனுக்கு பின்னால் இருக்கக் கூடிய மாபெரும் சக்தியாகிய மாணவர் சக்தியின் பலம், இவையெல்லாவற்றையும் பார்த்த போது எங்கள் ஆசிரியர்கள் கட்டாயமாக சாட்டை படத்தை பார்க்க வேண்டும் என்று நம் உள்ளம் எண்ணிக் கொண்டது.

நூறு செயலமர்வுகளை நடத்தியதை விட சாட்டை ஒரு படம் பல நல்லாசிரியர்களை உருவாக்க வழிவகுக்கும் என்பது நம் முடிவு.

அன்புக்குரிய கல்வி அதிகாரிகளே! சாட்டை படத்தை ஆசிரியர்கள் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள். பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பனவும் சாட்டையைப் பார்ப்பது உத்தமம்.

எல்லாவற்றுக்கும் மேலாக காட்டாதனவெல்லாம் காட்டிநிற்கும் இன்றைய திரைப்பட உலகில் இப்படியொரு சிந்தனை எழுந்துள்ளதெனில் மனிதம் இன்னமும் வாழ்கின்றது என்று மார்தட்டிக் கூற முடியும்.

# முன்னாள் போராளியின் வாக்குமூலத்தை யாழ்.மேல் நீதிமன்று ஏற்கவில்லை!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் தாக்குதல்களில் 160ற்கும் மேற்பட்ட இராணுவத்தினரினை கொன்று குவித்த புலிகளின் களத்தாக்குதல் அணிக்கு தலைமை தாங்கியவர் என கருதப்படும் நபரின் குற்றஒப்புதல்வாக்குமூலம்யாழ். மேல் நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

வன்னி நிலப்பரப்பில் நடைபெற்ற இறுதிக்கட்ட உக்கிர மோதல்களின் போது 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் திகதியன்று முல்லைத்தீவு பொக்கணை பிரதேசத்தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் பளை பெரிய தம்பகாமத்தினை சேர்ந்த பால சுப்பிரமணியம் ரவிக்குமார் (வயது 34) என்பவர் கைது செய்யப்பட்டார்.

மூன்று வருடங்களாக பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்ட இவர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து ஆயுதப்பயிற்சி பெற்றமை, 2006ஆம் ஆண்டு ஒக்ரோபர் 11ஆம் திகதி முகமாலை கண்டல் என்னும் பிரதேசத்தில் நடைபெற்ற இராணுவத்தினருக்கு எதிரான தாக்குதலில் 75 பேர் கொண்ட விடுதலைப் புலிகளின் போர் அணியினருக்கு தலைமை தாங்கியமை, 2006ஆம் ஆண்டு ஆனிமாதம் 6ஆம் திகதி அதே இடத்தில் நடைபெற்ற இராணுவத்தினருக்கு எதிரான முறியடிப்பு சமரில் பங்கேற்றிருந்த 46 விடுதலைப் புலிகள் கொண்ட தாக்குதல் அணியினருக்கு தலைமை தாங்கியமை, அதே ஆண்டு ஓகஸ்ட் 11ஆம் திகதி வன்னியில் நடைபெற்ற முதலாம் கட்ட சமரின் போது 80 இராணுவத்தினரையும், இரண்டாம் கட்ட சமரின் போது 82 இராணுவத்தினருக்கும் உயிர் இழப்பினை ஏற்படுத்திய விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணியினருக்கு தலைமை தாங்கினார், 2000ஆம் ஆண்டு சித்திரை 28ஆம் திகதி தொடக்கம் 2008ஆம் ஆண்டு வைகாசி 25ஆம் திகதிவரை கல்லடி எனும் பிரதேசத்தில் போரின் போது காயப்பட்ட புலிகளுக்கு மருந்து மற்றும் உணவு கொண்டு சென்றமை போராயுதங்களினை விநியோகித்தமை போன்ற பல குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு கடந்த பங்குனி மாதம் யாழ்.மேல் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது குறித்த நபரினால் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் குறித்த நபரினால் சுயமாக வழக்கப்படவில்லையென அவரது சட்டத்தரணி மு.றெமிடியஸ் வாதாடிய நிலையில் மேற்படி வழக்கினை விசாரணை செய்த ஆணையர் அந் நபரினால் வழங்கப்பட்டதாக கூறப்பட்ட வாக்கு மூலம் அவரினால் சுயமாக வழக்கப்பட வில்லையென்றும் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் அது நிரூபிக்கப்படவில்லையெனவும் கூறி வாக்கு மூலத்தினை நிராகரித்தார்.

குறித்த நபருக்கு எதிராக யாழ்.மேல் நீதிமன்றில் 5 வழக்கு காணப்படுவதோடு வவுனியா மேல் நீதிமன்றிலும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் தொடர்பில் மேலதிக சான்று உண்டா என ஆராய்வதற்காக குறித்த வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் மீண்டும் எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

## அமைச்சர் ரிஷாட்டின் மனு உயர் நீதிமன்றால் நிராகரிப்பு

(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்த சம்பவம் தொடர்பாக தனக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கிலிருந்து தன்னை முற்றாக விடுதலை செய்யுமாறு கோரி, அமைச்சர் ரிஷாட் பதியுதீன் நேற்று உயர் நீதிமன்றில் மேன்முறையீட்டு மனுவொன்றை தாக்கல் செய்தார்.

இச்சம்பவம் தொடர்பாக சட்டத்தரணிகள் சிலர் அமைச்சருக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இதற்கு எதிராக பதியுதீன் தாக்கல் செய்த அடிப்படை எதிர்ப்பு மனு நிராகரிக்கப்பட்டதுடன், எதிர்வரும் பெப்ரவரி மாதம் வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் போவதென நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்தத்தீர்ப்பை இரத்துசெய்து வழக்கை விசாரணைக்கு எடுக்காது, தாம் நீதிமன்றத்தை அவமதித்ததாக கூறப்படும் குற்றச்சாட்டிலிருந்து தன்னை விடுதலை செய்யுமாறு அமைச்சர் உயர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ந-11)

## இலங்கை மீனவர்கள் 5 பேரை கொள்ளையர்கள் தாக்கினர்

தெவிநுவர கரைக்கு அப்பால் சென்று கொண்டிருந்த 5 இலங்கை மீனவர்கள் கடற்கொள்ளையர்களினால் தாக்கப்பட்டு கடலில் வீசப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வணிகக் கப்பலொன்றில் சென்றவர்களினால் 2 மீனவர்கள் காப்பாற்றப்பட்டு கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படைப்பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

இவ்விரு மீனவர்களிடமும் விசாரணை மேற்கொள்வதற்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடலில் வீசப்பட்டதாகக் கூறப்படும் ஏனைய 3 மீனவர்கள் பற்றிய தகவல் எதுவும் இவர்களுக்கு தெரியவில்லையெனவும் கடற்படைப்பேச்சாளர் குறிப்பிட்டார். (அ-2)

## மடு வனப் பகுதியில் மரம் வெட்டிய இருவர் கைது

மன்னார்- மடு வனப்பகுதியில் இடம் பெற்று வந்த சட்டவிரோத மரக் கடத்தலை வன வள அதிகாரிகள் முற்றுகையிட்டுள்ளனர்.

இதன்படி வெட்டி கடத்திச் செல்லப்பட்ட மரக்கட்டைகளுடன் இரு சந்தேக நபர்களை வவுனியா வன இலாகா அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட மரக்கட்டைகளின் பெறுமதி 10 இலட்சத்திற்கும் அதிகம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மடு வனத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி குறித்த மரக்கட்டைகள் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபர்கள் வவுனியா மாவட்ட நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு பின் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-2)

## இஸ்ரேல்-பாலஸ்தீன முரண்பாடு முடியவேண்டும்

இஸ்ரேலுக்கும்–பாலஸ்தீனத்திற்கும் இடையில் காணப்படுகின்ற நீண்டகால முரண்பாடுகள் நல்ல முறையில் தீர்த்துக்கொள்ளப்பட வேண்டியது மிகவும் முக்கியமானதென்று, ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் வதிவிட பிரதிநிதி பாலித ஹோகன்ன மீண்டும் வலி யுறுத்தியுள்ளார்.

ஏற்கெனவே அவர் இது தொடர்பில் கடந்தசிலவாரங்களுக்குமுன்னர் அறிக்கையொன்றை விடுத்திருந்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஐக்கிய நாடுகளில் பாதுகாப்புச் சபையில் இடம்பெற்ற மத்தியகிழக்குநிலைமை தொடர்பிலான கருத்தாடலின் போது பாலித ஹோகன மீண்டும் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்குமிடையில் நீண்டகாலமான பிரச்சினை காணப்படுகிறது. இதுவே மத்திகிழக்கின் பதற்ற நிலைக்கு முக்கிய காரணம் எனவும் அவர் குறிப்பிட்டார். (ந-11)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### எதுசெய்தாலும் பலன் நமக்கே!



கடவுள் பிரமாண்டமான பெரிய வட்டம் போன்றவர். அந்தவட்டத்தின் மையம். எங்கும் எல்லா இடங்களிலும் அமைந்து இருக்கிறது. அந்த மையம்தான் மனிதன்.

நம்முடைய தெய்வீக இயல்பை வெளிப்படுத்த ஒரே வழி. மற்றவர்கள் தங்கள் தெய்வீக இயல்பை வெளிப்படுத்தும்படி அவர்களுக்கு உதவி செய்வதுதான். தனியாக வேறு ஒரு கடவுள் இல்லை. இந்த உண்மையை எவ்வளவோ தவங்களுக்குப் பின்னர் நான் புரிந்து கொண்டிருக்கிறேன். மக்களுக்குச் சேவை செய்பவன் உண்மையில் கடவுளுக்குச் சேவை செய்பவனாகிறான்.

தன்னலமற்ற மனப்பான்மைதான் ஆன்மீக வாழ்வின் அடிப்படை. இதை கொண்டே ஒருவரின் ஆன்மீகத் தேடுதலை சோதிக்கவேண்டும். சுயநலம் இல்லாதவனே ஆன்மீக வாழ்க்கையைப் பெற்றவனாகிறான்.

தீமையைச் செய்வதனால் நாம் நமக்கும் மற்றவர்களுக்கும் தீமை செய்கிறோம். நன்மையைச் செய்வதனால் நாம் நமக்கும் மற்றவர்களுக்கும் நன்மை செய்து கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





லயன்ஸ் கிளப்பின் அனுசரணையில் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுத் தொடரில் வெற்றியீட்டிய விசுவமடு தோழர்கள் விளையாட்டுக்கழக வீரர்களையும் பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.

## உதைபந்தாட்ட போட்டிக்கான கலந்துரையாடல்

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 14,16,18,வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சங்கப் போட்டிக்கான போட்டி நிரல் தயாரித்தல் தொடர்பான கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை 2 மணியளவில் வலயக்கல்வி அலுவலக மண்டபத்தில் நடைபெற்றது.

எனவே வடமராட்சி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் விளையாட்டு துறை பொறுப்பாசிரியர்கள் தவறாது நேரகாலத்துடன் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.


வடமராட்சி(YMCA)யினால் நெல்லியடியில் அண்மையில் நடாத்தப்பட்ட வலைப்பந்தாட்ட போட்டி இடம் பெறுவதை படத்தில் காணலாம்.(படங்கள் எஸ்.செல்வதீபன்)

## யாழ்.மாவட்ட கிரிக்கெட் கழக தரவரிசை; கொக்குவில் மத்திய ச.ச. நிலையம் முன்னிலை

யாழ்.மாவட்ட கிரிக்கெட் கழகங்களுக்கிடையிலான தரவரிசையில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி 141.7 புள்ளிகளுடன் முன்னிலையில் உள்ளது.

சென்ரல் விளையாட்டு கழகம் ஜோர் வெப்ஸ்டர் வெற்றிக் சின்னத்தினை வழங்குவதற்காக யாழ்ப்பாணத்தை சேர்ந்த கிரிக்கெட் கழகங்களின் தரப்பட்டியலை 2010 ஆம் ஆண்டிலிருந்து தயாரித்து வருகின்றது.

2010 ஆம் ஆண்டு ஆரம்பித்த இந்த வெற்றிச் சின்ன தரப்பட்டியலில் தொடர்ந்து இரண்டு வருடங்களும் யாழ்ப் பாண பல்கலைக்கழக அணி முன்னிலை பெற்று வெற்றி சின்னத்தை தட்டிச் சென்றது.

இவ்வருட புள்ளிகள் கணிப்பீட்டின் படி முடிவடைந்த போட்டிகளின் அடிப்படையில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி 141.7 புள்ளிகளுடனும் முன்னிலையில் உள்ளது. இவ்வணி தாம் விளையாடிய 27 போட்டிகளில் 21 போட்டிகளில் வெற்றிபெற்று உள்ளது.

ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் 111.4 புள்ளிக ளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகமும் 93.3 புள்ளிகளை பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

## சென் அன்ரனீசை வென்றது பற்றிக்ஸ் கல்லூரி



ஊர்காவற்றுறை சென்அன்ரனீஸ் கல்லூரி அணிக்கெதிரான சிநேக பூர்வ காற்பந்தாட்ட போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டி சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

வயது அடிப்படையில் நடைபெற்ற இப்போட்டி நான்கு பிரிவுகளாக இடம்பெற்றது.

14,16,18,20 ஆகிய நான்கு வயதுப் பிரிவு அணிகள் மோதின. இதில் 14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டி 2:0 என்ற கோல் கணக்கிலும் 16 வயது பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டி 2:0 என்ற கோல் கணக் கிலும் 18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் 2:0என்ற கோல் கணக்கிலும் 20 வயது பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் 9:0 என்ற கோல் கணக்கிலும் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றது.


இரு கல்லூரிக்கும் இடையில் வருடாவருடம் இப்போட்டி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய ரீதியிலான சதுரங்கப் போட்டி

யாழ். மாவட்ட சதுரங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்தில் நடைபெற்ற தேசிய சதுரங்கப் போட்டிக்கான தெரிவுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் கொழும்பு றோயல் கல்லூரியில் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள தேசிய சதுரங்கப் போட்டியில் பங்குபற்றவுள்ளனர்.

நவம்பர் மாதம் 2,3,4 ஆம் திகதிகளில் இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

பெண்களுக்கான திறந்த போட்டி, ஆண், பெண் இருபா லாருக்குமான திறந்த போட்டி என இரண்டு பிரிவுகளாக நடைபெற்ற இந்தத் தேசியப் போட்டிக்கான தெரிவுப் போட் டிகள் ஒக்டோபர் 5,6,7 ஆம் திகதிகளில் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெற்றது.



இந்த சதுரங்கப் போட்டிக்கான தெரிவுப் போட்டிகளில் ஜொலிஸ்ரார் நைற்விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தினையும் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி இரண்டாம் இடத்தினையும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் சென்ரர் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டன.

பெண்களுக்கான திறந்த போட்டியில் அளவெட்டி அரு ணோதயா கல்லூரி முதலாம் இடத்தினையும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி இரண்டாம் இடத்தினையும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோர்க்ஷயர் அணியை வென்றது சிட்னி சிக்ஸர்ஸ்



சம்பியன்ஸ் லீக் இருபது - 20 தொடரின் நேற்றைய முதலாவது போட்டியில் சிட்னி சிக்ஸர்ஸ் அணி இலகுவான வெற்றியைப் பெற்றுள்ளது. யோர்க்ஷயர் அணிக்கெதிரான போட்டியில் சிட்னி சிக்ஸர்ஸ் அணி 8 விக் கெட்டுக்களினால் இலகுவான வெற்றியைப் பெற்றது.

நியூலான்ட்ஸ் மைதானத்தில் இடம் பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற் சியில் வெற்றிபெற்ற யோர்க்ஷயர் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.


இதன்படி முதலில் துடுப்பெடுத் தாடிய யோர்க்ஷயர் அணி 20 ஓவர் களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 96 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

முதலாவது விக்கெட்டுக்காக 30 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, அதன்பின்னர் ஒரு கட்டத்தில் 12.3 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 62 ஓட்டங்களுடன் காணப்பட்டது. ஆனால் அதன் பின்னர் விக்கெட்டுக் களைத் தொடர்ச்சியாக இழந்த அவ் வணி, ஓட்டங்களைப் பெறவும் தவறியது.

துடுப்பாட்டத்தில் யோர்க்ஷயர் அணி சார்பாக ஜோ றூட் 24 பந்துகளில் 25 ஓட்டங் களையும், பில் ஜக்ஸ் 19 பந்துகளில் 21 ஓட்டங் களையும், அடம் லித் 25 பந்துகளில் 18 ஓட் டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சிட்னி சிக்ஸர்ஸ் அணி சார் பாக மிற்சல் ஸ்ரார்க் 4 ஓவர்களில் 22 ஓட்டங் களுக்கு 3 விக்கெட்டுக்களை யும், பற்றிக் கம்மின்ஸ் 4 ஓவர்களில் 13 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ஷேன் வோட்சன் 4 ஓவர்களில் 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக் களையும், ஜோஸ் ஹேஷல்வூட் 4 ஓவர்களில் 9 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், மோசஸ் ஹென்றிக்கஸ் 2 ஓவர்களில் 10 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட் டையும் கைப்பற்றினர்.

97 ஓட்டங்களை வெற்றியிலக் காகக் கொண்டு துடுப்பெடுத்தா டிய சிட்னி சிக்ஸர்ஸ் அணி 8.5 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந் தது. முதலாவது விக்கெட்டாக ஷேன் வோட் சன் இலகுவாக ஆட்டமிழந்த போதிலும், மைக் கல்லாம், பிரட் ஹடின் இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி மிக இலகுவான வெற்றி இலக்கை அடைந்தனர்.




துடுப்பாட்டத்தில் சிட்னி சிக்ஸர்ஸ் அணி சார்பாக மைக்கல் லாம்ப் 24 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும், பிரட் ஹடின் 21 பந்துகளில் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் யோர்க்ஷயர் அணி சார்பாக றியான் சைட்பொட்டம், அஷீம் ரபிக் ஆகி யோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். போட்டியின் நாயகனாக சிட்னி சிக்ஸர்ஸ் அணி யின் தலைவர் பிரட் ஹடின் தெரிவானார்.

# ஆக்லாந்திடம் வீழ்ந்தது கொல்கத்தா

சம்பியன்ஸ் லீக் இருபது - 20 தொடரின் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் ஆக்லாந்து ஏசஸ் அணி வெற்றி பெற்றது.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் ஆக்லாந்து ஏசஸ் அணி 7 விக்கெட்டுக்களால் இலகுவாக வெற்றி பெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கொல் கத்தா நைட் ரைடர்ஸ் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

முதலாவது விக்கெட்டை 10 ஓட்டங்களுக்கே இழந்த அவ்வணி, அதன்பின்னர் ஒரு கட்டத் தில் 8.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 72 ஓட்டங்களைப் பெற்று பலமான நிலையில் காணப்பட்டது.

ஆனால் அடுத்த 9 பந்துகளில் ஓட்டங்கள் எவையும் பெறப்படாததோடு 3 விக்கெட்டுக் களும் இழக்கப்பட்டன.

தொடர்ந்து வந்த வீரர்கள் சிறப்பாக ஆடாத தன் காரணமாக அவ்வணியால் சிறப்பான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக்கொள்ள




முடிந்திருக்கவில்லை.

துடுப்பாட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி சார்பாக பிரண்டன் மக்கலம் 35 பந்து களில் 40 ஓட்டங்களையும், மன்விந்தர் பிஸ்லா 24 பந்துகளில் 38 ஓட்டங்களையும், யூசுப் பதான் 19 பந்துகளில் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆக்லாந்து ஏசஸ் அணி சார்பாக அஷார் மஹமூட் 4 ஓவர்களில் 16 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையு, கைல் மில்ஸ், மைக்கல் பேட்ஸ், ரொனி ஹீரா ஆகி யோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.


138 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஆக்லாந்து ஏசஸ் அணி 17.4 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமே இழந்து வெற்றி இலக்கை அடைந் தது.

அதிரடியான ஆரம்பத்தைப் பெற்றுக் கொண்ட அவ்வணி 3 ஓவர்களில் 37 ஓட்டங் களைப் பெற்றது.

அதன்பின்னரும் தொடர்ச்சியான இணைப் பாட்டங்கள் பகிரப்பட அவ்வணிக்கு மிக இலகு வான வெற்றி கிடைக்கப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஆக்லாந்து ஏசஸ் அணி சார்பாக அஷார் மஹமூட் 42 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்களையும், லூ வின் சன்ட் 12 பந்துகளில் 20 ஓட்டங்களையும், மார்ட்டீன் கப்ரீல் 26 பந்துகளில் 25 ஓட்டங் களையும் அன்ரூ கிறசன் 15 பந்துகளில் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி சார்பாக சுனில் நரேன் 4 ஓவர்களில் 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும்,



லக்ஷ்மிபதி பாலாஜி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக ஆக்லாந்து ஏசஸ் அணி சார்பாக சகலதுறைப் பெறுபேறு களை வெளிப்படுத்திய அஷார் மஹமூட் தெரி வானார்.

# சர்வதேச டெனிஸ் தரவரிசை பெடரர் தொடர்ந்து முதலிடம்



சர்வதேச டென்னிஸ் போட்டியில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கான தரவரிசைப்பட் டியல் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் ஆடவர் ஒற்றையர் பிரிவுப் பட்டி யலில் ரோஜர் பெடரர் 12 ஆயிரத்து 165 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் உள் ளார்.

ஏற்கெனவே 300 வாரங்கள் முதலிடத்தி லிருந்து வரலாறு படைத்த பெடரரின சாதனை மேலும் தொடர்கிறது.

செர்பிய வீரர் நோவக் ஜோகோவிச் 2 ஆவது இடத்தில் உள்ளார். இவர் பெடரரை விட 195 புள்ளிகளே பின்தங்கியுள்ளார்.

மொஸ்கோ, வியன்னா மற்றும் ஸ்டாக் ஹோம் உள்ளிட்ட நகரங்களில் வரும் வாரங் களில் டென்னிஸ் போட்டிகள் நடைபெற வுள்ளன. இப்போட்டிகளின் முடிவில் பெடரரை பின்னுக்குத் தள்ளி ஜோகோவிச் முதலிடத்தை பிடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சமீபத்தில் ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென் னிஸ் போட்டியில் ஜோகோவிச் சம்பியன் பட் டம் வென்றார். 3 ஆவது இடத்தில் பிரிட்டன் வீரர் ஆண்டி முர்ரே உள்ளார்.

ஆடவர் இரட்டையர் பிரிவு தரவரிசைப் பட்டியலில் அமெரிக்காவின் பொப் பிரயின், மைக் பிரயின் இருவரும் தலா 10 ஆயிரத்து 100 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளனர்.

பெலாரசின் மேக்ஸ் மிர்னி, கனடாவின் டேர்னியல் நெஸ்டர் இருவரும் தலா 8 ஆயிரத்து 430 புள்ளிகளுடன் 3ஆம் இடத் தில் உள்ளனர்.

இந்திய வீரர் லியாண்டர் பயஸ் 7 ஆயி ரத்து 455 புள்ளிகளுடன் தொடர்ந்து 5 ஆவது இடத்திலேயே உள்ளார். இவர் ஷாங்காய் மாஸ் டர்ஸ் டென்னிஸ் இரட்டையர் பிரிவு ஆட்டத்தில் செக்குடியரசின் ரடேக் ஸ்டெபானெக்குடன் இணைந்து சம்பியன் பட்டம் வென்றார்.

அதேசமயம் மற்றொரு இந்திய வீரர் ரோஹன் போபண்ணா 4 இடங்கள் முன் னேறி 10ஆம் இடத்தைப் பிடித்தார். மகேஷ் பூபதி 2 இடங்கள் முன்னேறி 16ஆம் இடத் தைப் பிடித்தார்.

ஷாங்காய் மாஸ்டர்ஸ் இரட்டையர் பிரிவு போட்டியில் போபண்ணா-பூபதி இரண்டாம் இடம் பிடித்தது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தெரிவுக்குழுவுக்கு வராவிட்டால்...

இது தொடர்பில் அரசாங்கம் மேலும் குறிப்பிடுகையில்,

அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்ள் பாரா ளுமன்றத் தெரிவுக்குழுவின் கதவுகள் திறந்தே உள்ளன. இதில் கலந்து கொண்டு தமிழ் மக்க ளின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வைப் பெற் றுக் கொள்ள கூட்டமைப்பு முயற்சிக்க வேண்டும்.

இந்தியாவிடம் தீர்வுக்காக கையேந்துவதால் எவ்வித பலனும் கிடைக்கப் போவதில்லை என்றும் அரசாங்கம் தெரவித்துள்ளது. இது குறித்து அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடக அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல கூறு கையில், சம்பந்தன் தலைமையிலான கூட்ட மைப்புக் குழுவினர் இந்தியாவுக்குச் சென்று இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு குறித்துப் பேசியுள்ளனர்.

இந்தியாவால் எவ்வித நடவடிக்கையையும் எடுக்க இயலாது ஏனெனில் இலங்கை ஒரு சுயாதீனமான நாடு. மக்கள் ஆணையில் ஆட்சிபீடம் ஏறியுள்ள அரசே உள்ளது. எனவே தனது மக்களின் பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்க வேண்டும் என்று உள்நாட்டு அரசுக்குத் தெரியும். ஏனையநாடுகளால்தலையிடமுடியாது.

இதனைப் பலமுறை கூறியுள்ளோம். நிலையான அரசியல்தீர்வுக்கு நிரந்தர இட மாக பாராளுமன்ற தெரிவுக்குழுவை அமைச் சரவையே அங்கீகரித்துள்ளது. இதற்கான சூழல் காணப்படுகின்றது.

எனவே இதனை முறையாகப் பயன் படுத்தி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொள்ள கூட்டமைப்பு முயற் சிக்க வேண்டும். இதை விட்டு இந்தியாவிடம் தீர்வைக் கோருவது வேடிக்கையான விடயம் எனக் கூறியுள்ளார். (ந-11)

# ஆஸி பிரதிநிதி...

அவர்கள் தமது இலங்கை விஜயம் குறித்து குறிப்பிட்டதாக அவுஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எதிர்வரும் ஒரு மாத காலப்பகுதிக்குள் தமது இலங்கை விஜயம் அமையும் என்றும், இதன் போது இலங்கையில் பல்வேறு அரச அதிகாரி களை சந்தித்து, இலங்கையர்களை அவுஸ்தி ரேலியா நோக்கி படகேறவிடாமல் தடுப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ந-11)

# 'ஆசியா'...

தெரிவித்துள்ளார்.மேலும் ஆசியக் கண்டத்தின் பெறுமதி மற்றும் அடையாளம் தொடர்பில் ஜனாதிபதி மாநாட்டில் கருத்து வெளியிட்டார்.

அதேபோன்று ஆசியா ஏனைய நாட்டின ரின் விளையாட்டு மைதானம் அல்லவென்றும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு ஜனாதிபதி உள்ளிட்ட தூதுக்குழுவினர் நேற்று முன்தினம் குவைத்திற்கு சென்றனர்.

இலங்கை குழுவினரை குவைத் ராஜ்ஜி யத்தின் மன்னர் ஷேக் சபா அகமட் வரவேற்றார்.

இதேவேளை, ஆசிய வலய நாடுகளின் 31 அரச தலைவர்கள் ஆசிய ஒத்துழைப்பு அமை ப்பின் மாநாட்டில் பங்கேற்றுள்ளனர். (ந-11)

# இனப் பிளவை ஏற்படுத்த...

வாழ்ந்த இந்த நாட்டு மக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இன்று ஒன்று படச் செய்கின்ற மிகப் பெரும் வேலைத்திட்டம் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பல்வேறுபட்ட காரணங்களால் மத ரீதி யாக, இன ரீதியாக, பிரதேச, மொழி ரீதியாக பிரிந்து பல ஆண்டுகாலமாக மிக மோசமான சூழ்நிலையில் வாழ்ந்த மக்கள் அனைவரை யும் ஒன்றபடுத்தி ஒன்றுபட்ட சமூகமாக கொண்டு செல்ல ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

அதற்காக பாலங்களை அமைத்து பாதை களை அமைத்து மக்களை ஒன்று சேர்ப்பதற் கான பணியை ஜனாதிபதி மேற்கொணடு வரு கின்றார். மதரீதியாக, மொழிரீதியாக, பிளவு பட்டிருந்த மக்களை ஒன்றுபடுத்துவதற்காக மதத் தலைவர்கள், பிரதேச தலைவர்கள், அரசியல் தலைவர்கள் உட்பட அனைவரும் ஒன்றுபட்டு பாடுபட்டு நிற்கின்றனர்.

நாங்கள் பிளவுபட்டு இருப்போமானால் மீண்டும் இந்த நாட்டிலே பிரச்சினைகள் ஏற் படுவதோடு எங்களுக்கு இடையில் குழப்பங்கள் ஏற்பட்டு நாங்கள் எல்லோரும் துன்பங்களுக் கும் துயரங்களுக்கும் உள்ளாகுவோம்.

ஆகவேதான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அனைத்து இனங்களையும் ஒன்றுபடுத்தி சகல இனங்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு ஒற்றுமையுடன் சமாதானத்துடன் ஐக்கியத்துடனும் சுபீட்சமான எதிர்காலத்தை வழங்கமுடியும் என எதிர்பார்க்கின்றார்.

ஜனாதிபதி, இந்தியா மற்றும் ஜப்பானுக்கு சென்று பாலங்களை அமைத்து வீடுகள் இல் லாதவர்களுக்கு வீடுகளை அமைத்து மின் சாரங்களை கொடுத்து இந்த பிரதேசங்களை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றார்.

துரதிர்ஷ்டவசமாக இந்த நாட்டை மீண்டும் பிளவுபடுத்த விரும்பு கின்ற இந்த தலைவர்கள் இந்தியா, ஜப்பான் உட்பட நாடுகளுக்கு சென்று இந்த நாட்டுக்கு உதவ வேண்டாம். பொருளாதாரத்தை கட்டியெழுப்ப உத விகளைச் செய்ய வேண்டாம் என்று வேண்டுகோள் விடுப்பது கண்டு நாங் கள் மனவேதனை அடைகின்றோம்.

இருந்தபோதிலும் இந்த நாட்டு மக்களின் அதிர்ஷ்டம் ஜனாதிபதி எந்த நாட்டுக்குச்சென்று உதவிகளை கேட்கும் போது யாரும் கொடுக்க வேண்டாம் என்று தடுத்தபோதும் ஜனாதிபதியின் வேண்டுகோளின் பேரில் உங்களுக்காக இவ்வளவு கோடிக்கணக்கான நிதியொதுக் கீட்டை செய்துள்ளதை யிட்டு நாங்கள் மிகவும் சந்தோசமடைகின்றோம் என தெரிவித்துள்ளார். (ந-11)


ஆங்கில மொழியினை சிறப்பாக பேச வயது வேறுபாடின்றி அனைவரினதும் ஒரே தெரிவு

FEEL THE BRILLIANT FUTURE
E-CITY
COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி சந்தி அருகில்
SPOKEN ENGLISH COURSE
New Batch: 20.10.2012 @ 7.30 A.M
(sat/sun 7.30 A.m - 10.00 A.M)
Contact: 0774924166 / 0777364362
பாடநெறி முடிவில் சர்வதேச சான்றிதழ்கள்
தலை சிறந்த ஆங்கில கல்லூரி
(779)



MOBILE PHONE
REPAIRING COURSE
நீங்கள் பாடசாலை கல்வியை இடைநிறுத்தியவரா? சுயதொழில் ஒன்றை செய்ய எதிர்பார்ப்பவரா? வேலைசெய்து கொண்டு பகுதி நேரமாக வருமாணம் ஈட்ட வேண்டுமா?
Free
Toolkit
The Guide to Success Book
1000 Secrets DVD CD
உங்கள் எதிர்காலத்திற்கு......
மாதம் 150,000/-க்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர தொழில் வாய்ப்பு
சர்வதேச தரத்திலான டிப்ளோமா சான்றிதல்.
திருத்தும்துறையில் பத்து வருடம் அனுபவம் வாய்ந்த ஆசிரியரும் இலங்கையில் 1000 க்கு மேற்பட்ட மாணவர்களை உருவாக்கிய முதல்தர ஆசியர்
Ganesh.K
கட்டணம் 9500/=
- பாடநெறிக்கு செலுத்திய கட்டனத்தை முதல் மாதத்திலே சம்பாதித்துகொள்ள முடியுமா முதலீடு
- நவீனமான MOBILE போன் REPAIR பன்னும் முறைகள் பயிற்றுவிக்கப்படும்.
- மிககுறைந்த செலவில் மிக சிறிய இடத்தில் மிக குறைந்த முதலீட்டில் ஆரம்பிக்கக்கூடிய ஒரு சிறந்த சுயதொழில்
(சி-1326)
4 Days Course
5 வது நாளில் தொழிலை ஆரம்பிக்க உங்களுக்கு 100% நாங்கள் உத்தரவாதம் வழங்குவோம்.
பதிவுகளுக்கு விரையுங்கள்
27வது பிரிவு வவுனியாவில் ஆரம்பம்
19,20,21,22, October 2012
SUN BRITISH COLLEGE
No:-26, Station Road, Vavuniya.
T.P:-0770 58 46 58, 024 2226649
14வது பிரிவு யாழ்பாணத்தில்ஆரம்பம்
25,26,27,28 October 2012
IISEEES NALLUR CAMPUS
No:-762, Point Petro road, Nallur Jaffna.
T.P:-0770 58 46 58, 021 2224728


# உட்கட்சி பூசலை தவிர்...

பேசவும் முடியாது.தனிநபராக விலைபேசும் உரிமையும் இல்லை. வாக்களித்த மக்கள் முகம் தெரியாமல் வாக்களித்துள்ளனர். நாமம் தெரி யாமல் வாக்களித்துள்ளனர். மக்கள் எந்த நோக் கத்துக்காக வாக்குகளை அளித்தார்களோ அந்த நோக்கம் நிச்சயம் பாதுகாக்கப்படும்.

இங்கு தெரிவு செய்யப்பட்ட அனைத்து மாகா ண சபை உறுப்பினர்களும் எமது இலட்சியம் நிறைவேறும் வரையில் உறுதியுடன் செயற் படுவோம்.

தமிழ் மக்களும் சலுகைக்காக பயன்ப டுத்தப்படும் ஒரு கருவியாகவே பார்த்தனர். ஆனால் இன்று அது மாற்றமடைந்துள்ளது..

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் ஊடாகத் தான் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று ஐ.நா.தொடக்கம் சர்வதேச சமூகம் வரையில் உறுதியாக இருக்கின்றன.

அந்த வகைக்குள் நாங்கள் உட்படுத்தப் பட்டுள்ளோம். நாங்கள் திணிக்கப்பட்டுள்ளோம். இதில் நாங்கள் தெளிவாக இருக்க வேண்டும். தேர்தல் ஊடாகத்தான் நாங்கள் சாதிக்க முடி யும் என்ற சூழ் நிலைக்கு நாங்கள் நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளோம். ஆகவே நாங்கள் தேர்தல்களில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்

கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற நிலை மைகள் வேறு. வட மாகாணத்தில் உள்ள நிலைமைகள் வேறு. வடக்கு மாகாணம் தமிழ் மக்களுக்கு உரிய மாகாணம். கிழக்கு மாகா ணம் மூவின மக்களும் வாழும் மாகாணம். இந்த மாகாணத்தில் அரசியல் செய்யும் அதி காரம் என்பது எமது கையில் இல்லை. இந்த அரசியல் அதிகாரம் இல்லாத வேளையில் இந்த அரசியல் அதிகாரத்தை நிலைநாட்ட நாங்கள் எவற்றை செய்ய வேண்டும் என் பது தொடர்பில் த. தே. கூட்டமைப்பு முடிபெடுத்தே ஆக வேண்டும்.

இதனை வளர்ப்பதற்காக நாங்கள் செய்ய வேண்டிய நடவடிக்கையென்ன? நாங்கள் நீர்வளம் இல்லாத பகுதியில் இருந்து நீர் வளம் இல்லாத பகுதிக்கு நீரைக் கொண்டு செல் கின்றோம். இதுதான் இன்றை திட்டமிடல், முகா மைத்துவம், அது எவ்வளவு பலவீனமாக இருக் கின்றது என்பதை நாங்கள் சிந்திக்க வேண்டும். பல விடயங்களில் நாங்கள் பின்தங்கியுள்ள நிலைகளிலேயே இருக்கின்றோம்.

கிழக்கு மாகாண சபையின் அதிகாரம் எமது கையில் இல்லை. கல்வி எமது கையில் இல்லை. வியாபாரம் எமது கையில் இல்லை. விவசாயமும் கால்நடையுமே மட்டுமே எம் மிடம் உள்ளன. அவையும் இன்று சீரழிந்து செல்லக்கூடிய நிலை உருவாகியுள்ளது. நாங்கள் இருப்பது மிகவும் ஆபத்தான நிலை யில், இதனை ஈடு செய்வதற்கு எங்களால் என்ன செய்ய முடியும்?

நாங்கள இருப்பது கிழக்கு மாகாண சபை யின் எதிர்க் கட்சியில். எனது அனுபவத்தின் மத்தியில் கூறுகின்றேன். இம்முறை கிழக்கு மாகாண சபையில் ஆளும் தரப்பினர் பல முள்ளவர்களாக இருக்கின்றனர். அவர்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றக்கூடிய பல முடன் இருக்கின்றனர். அதனை தோற்கடிக் கக்கூடிய பலம் எம்மிடம் இல்லை. எதிர்க் கட்சியில் இருந்து கொண்டு நாங்கள் செய்ய வேண்டியவற்றை பேசியேயாக வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் விகிதாசார வேலை வாய்ப்பு, நிதியொதுக்கீடு எமக்கு கிடைக்காத பட்சத்தில் பிரதேச ரீதியான அபிவிருத்தியில் நாங்கள் புறக்கணிக்கப்படுவோம். அதற்காக நாங்கள் உழைக்க வேண்டும். எதிர்க் கட்சி யில் இருந்து கொண்டு செயலாற்றக்கூடிய பல வழிகள் எமக்கு இருக்கின்றன என்றார். (ந-2)

# இலங்கைத்...

ரேலிய மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

எவ்வாறாயினும் இந்தத் தீர்ப்பு குறித்த வழக் கினை தாக்கல் செய்திருந்த ஒருவருக்கே யன்றி, ஏனையவர்களுக்காக அல்லவென்று அவுஸ் திரேலிய அரசாங்கம் தெரிவித்திருந்தது.

எவ்வாறாயினும், இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட் டுள்ள ஏனையவர்களும் நீதிமன்றத்தில் வழ க்கு தாக்கல் செய்யவுள்ளனர்.

அதன் அடிப்படையில் அவர்கள் எதிர் வரும் காலங்களில் விடுவிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-11)

# தமிழருக்கான ஜனநாயகம்...

எனது செயலாளர் அச்சுவேலியில் இராணு வப் புலனாய்வுப் பிரிவினரால் தாக்கப்பட்டார்.

அதனைப் போன்றே பல்கலைக்கழக மாணவர்கள் புலனாய்வுப் பிரிவினரால் தாக் கப்பட்டார்கள்.

யாழ்ப்பாணம் வந்திருந்த ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் இதே புலனாய்வுப் பிரிவினரால் தாக்கப்பட்டார்.

மல்லாகத்தில் தமது காணிகளை பெற்றுக் கொள்வதற்காக ஜனநாயகப் போராட்டத்திற்கு திரும்பியவர்களின் பேருந்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டு கழிவு எண்ணெய் ஊற்றப்பட்டது.

நெல்லியடியில் நடைபெற்ற கூட்டத்தில் விடு தலைப்புலிகளின் கொடியுடன் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கலந்து கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அச்சமூட்டினர்.

சுன்னாகம் பிரதேச சபையின் புதிய கட்டி டத்தின்மீது கழிவு எண்ணெய் ஊற்றப்பட்டது.

முல்லைத்தீவில் நடைபெற்ற காணிப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மீது கற்களும் சாணமும் வீசப்பட்டது.

இப்போது நல்லூர் பிரதேச சபையின் தவி சாளர் பரமலிங்கம் வசந்தகுமார் வழிமறிக்கப் பட்டு தாக்குதலுக்குள்ளாகியுள்ளார்.

பிரதேச சபைக்கு சொந்தமான சிறுவர் பூங்கா அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட காணியை இராணுவத்தினர் அபகரித்ததை கச்சேரியில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் வெளிப்படுத்தியதாலும் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்ததாலும் நல்லூர் பிரதேச சபை யின் தவிசாளர் தாக்குத்லுக்குள்ளாகியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி கூறும் 5 நட்சத்திர ஜனநாயகம் இவ்வாறுதான் இருக்கின்றது.

ஒருநாட்டில் தேர்தல் நடத்துவதால் மாத்திரம் ஜனநாயகம் வந்துவிடாது என்பதற்கு யாழ்ப் பாணம் ஒரு உதாரணம்.

தமிழ் மக்களுக்கு உரித்தான ஜனநாயக உரிமை இராணுவத்தினரால் முற்றுமுழுதாக நிராகரிக்கப்படுகின்றது.

மக்கள் பிரதிநிதிகள், உத்தியோகத்தர்கள் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தினரின் தலையீடு என்பது மிகவும் மோசமாக நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது.

இராணுவத்தினருக்கு முன்பாக பொலிஸார் கையாலாகாதவர்களாக இருக்கின்றனர்.

ஜெனிவாவில் இனங்களுக்கிடையில் நல்லுறவைப் பற்றியும் மனித உரிமைகள் பற் றியும் ஜனநாயகத்தைப் பற்றியும் மிகப் பெரு மளவில் பிரசங்கம் செய்யும் ஜனாதிபதி அவர்களே!

யாழ்ப்பாணத்தின் காட்டாட்சிக்கு முற்றுப் புள்ளி வையுங்கள். மக்களை நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழவிடுங்கள். மக்களுடைய அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கு மதிப் பளியுங்கள்.

தெற்கு-வடக்கு உறவுகள் பலப்பட வேண்டு மாக இருந்தால் இந்த விடயங்கள் உடன டியாக நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-11)


இலவச உயர்கல்வி வழிகாட்டல் கருத்தரங்கு
உலகில் அங்கீகரிக்கப்பட்ட பட்டங்கள்
- வைத்தியர்
- வர்த்தக முகாமையாளர்
- பொறியியலாளர்
- கணக்காளர்
- தகவல்தொழில்நுட்ப முகாமையாளர்
- உளவியல் நிபுணர்
தொடர்பு கொள்ளவும்: 0777570498
(சி-1318)
யாழ்ப்பாணம்
2012 ஒக்ரோபர் 20ம் திகதி -சனிக்கிழமை
யாழ்ப்பாணம் பிள்ளையார் innஇல்
காலை 10.30 மணிக்கு
வவுனியா
2012 ஒக்ரோபர் 21ம் திகதி -ஞாயிற்றுக்கிழமை
வவுனியா கலாசார மண்டபத்தில்
காலை 10.30 மணிக்கு
கல்வி பயிலுங்கள்
அமெரிக்கா, லண்டன், கனடா, மலேசியா, இரோப்பா, நேபாளம் மற்றும் பல நாடுகளில்



கட்டார் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு
அதி உயர் சம்பளம் (சாப்பாடு, தங்குமிடம், மருத்துவம் இலவசம்)
கீழ்க் காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடி யாக காத்திருக்கின்றன.
I. எலக்ரீசியன் (Electrician)
II. பிளம்பர் (Plumber)
III. காப்பெண்டர் (Carpenter)
IV. மேசன் (Mason)
இரண்டே வாரத்தில் பயணமாகலாம்
உடன் தொடர்பு கொள்ளவும்
Lanka Voice 24, Station Road, Vavuniya. 0750650084
(C-1326)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org